Registered as Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 36 கதிர் : 199 | ஞாயிற்றுக்கிழமை | வைகாசி 30 நாள் 13 ஜூன் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052

பக்கங்கள்: 16+16 விலை : ரூ.40

செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## எரிபொருள் விலையேற்றம்



# ஆளும் கட்சிக்குள் பெரும் பூகம்பம்!

### துறைசார் அமைச்சரை பதவிவிலகப் பணிப்பு

கொழும்பு, ஜூன் 13

கொரோனா நெருக்கடியால் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு மேலும் சுமையை ஏற்படுத்தும் விதத்தில் எரிபொருள் விலை அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளமை ஏற்கமுடியாது. எனவே, இந்நிலைமைக்கு பொறுப்பேற்று துறைசார் அமைச்சர் பதவி விலக வேண்டும்.' என்று அரசின் தலைமைக் கட்சியான பொதுஜன பெரமுன வலியுறுத்தியுள்ளது. 15 ➤

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய நால்வர் நேற்றுக் கைது

வற்றாப்பளையில் சம்பவம்

முல்லைத்தீவு, ஜூன் 13

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றத்துக்காக வற்றாப்பளையில் நேற்று நான்கு பேர் கைதுசெய்யப்பட்டனர்.

பயணத்தடை காலத்தில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் இவர்கள்மீது வழக்குத் தொடரப் 15 ➤



## வடக்கில் 111 யாழில் 91

யாழ்ப்பாணம், ஜூன் 13

வடக்கு மாகாணத்தில் 764 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனைகளில் 111 பேருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவ 15 ➤



## யாழில் மேலும் இரு பலி

யாழ்ப்பாணம், ஜூன் 13

கொரோனாத் தொற்றால் யாழ்ப்பாணத்தில் நேற்று இருவர் உயிரிழந்தனர். இதையடுத்து யாழில் பதிவான ஒட்டுமொத்த கொரோனா இறப்பு 54ஆக அதிகரித்தது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த பருத்தித் 15 ➤

## கொரோனா 2,340

கொழும்பு, ஜூன் 13

இலங்கையில் நேற்று 2 ஆயிரத்து 340 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த 15 ➤

தேசிய பாதுகாப்பை மையப்படுத்தியதாக

## பயங்கரவாத தடைச்சட்டம்: மீளாய்வு செய்கிறது அரசு

### நீதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 13

நடைமுறையில் உள்ள 1979ஆம் ஆண்டு 48ஆம் இலக்க பயங்கரவாத தடைச்சட்டத்தை மீளாய்வுக்கு உட்படுத்துவதற்கு அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்று நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், 15 ➤

வீடுடைத்து திருட்டு

## 24 மணிநேரத்தில் அகப்பட்ட திருடன்

### யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் துரித நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 13

சுன்னாகம் கந்தரோடையில் வீடுடைத்து பெருந்தொகை நகைகள் நேற்றுமுன்தினம் மாலை திருடப்பட்டிருந்த நிலையில், சந்தேகநபர் 24 மணிநேரத்துக் 15 ➤



கிளிநொச்சியில்

## உருக்குலைந்த நிலையில் கடலாமையின் சடலம் மீட்பு

*பேர்ள் கப்பல் விபத்து காரணமா என அச்சம்*

கிளிநொச்சி, ஜூன் 13

கிளிநொச்சியில் நேற்று கடலாமையின் சடலமொன்று உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்டது. கொழும்புத் துறைமுக 15 ➤

## யாழ் குடாநாட்டில் காற்றுடன் மழை!

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ்ப்பாணத்தில் நேற்று இரவு கடும் காற்றுடன் மழை கொட்டித் தீர்த்தது. அத்துடன் இடிமின்னலும் நீடித்தது. இரவு 8 மணியில் இருந்து 10 மணி வரை மழை நீடித்தது. கடும் மழையையும் இடிமின்னலுடனான கால நிலையையும் அடுத்து யாழ்ப்பாணத்தின் பல இடங்களில் மின்வெட்டு மேற்கொள்ளப்பட்டது. (ம)

செய்திகள் மற்றும் விளம்பரங்களை உதயனில் பிரசுரிக்க....

செய்தி 021 493 0000 077 1209994

விளம்பரம் 021 493 1111 071 6182182

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் கட்டற்றுப் பரவுகிறது கொரோனா வைரஸ் தொற்று

## அவதானமாக இருக்குமாறு மாவட்டச் செயலர் எச்சரிக்கை

**யாழ்ப்பாணம், ஜுன் 13**

**யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்று அதிகரித்துள்ளது. மக்கள் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடித்துச் செயற்படவேண்டும் என்று யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.**



யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது கொரோனாத் தொற்று அதிகரித்துக் காணப்படுகின்றது. நேற்றுமுன்தினம் கிடைக்கப்பெற்ற பி.சி.ஆர் பரிசோதனைகளின் முடிவின்படி 139 நபர்களுக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் நேற்றுக் காலை கிடைத்த பி.சி.ஆர் மற்றும் அன்டிஜென் பரிசோதனைகளில் 19 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் யாழில் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை மொத்தமாக 4 ஆயிரத்து 122 ஆக அதிகரித்துள்ளது. அத்தோடு இதுவரை வரை 53 இறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மாவட்டத்தில் 5 கிராம அலுவலர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டிருந்தன. அதில் மூன்று கிராமங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன.நல்லூர் மற்றும் உடுவில் பிரதேச செயலர் பிரிவுகளில் இரு கிராம அலுவலர் பிரிவுகள் மாத்திரம் தற்பொழுது தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. யாழில் 2 ஆயிரத்து 42 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 712 நபர்கள் தற்போது சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். தற்பொழுது கொரோனாத் தொற்று நிலைமை அதிகரித்துச் செல்லும் போக்கு காணப்படுகின்றதே தவிர குறைந்தனவாக இல்லை. எனவே பொதுமக்கள் மிகவும் அவதானமாக சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி நடந்து கொள்ள வேண்டும்.

அதே நேரத்தில் தொடர்ச்சியாக தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா உணவுப் பொதிகள் வழங்கப்படுகின்றன. இந்த வருடம் 7 ஆயிரத்து 588 குடும்பங்களுக்கும், கடந்த வருடம் 3 ஆயிரத்து 526 குடும்பங்களுக்குமாக மொத்தம் 11 ஆயிரத்து 114 குடும்பங்களுக்கு 111 மில்லியன் ரூபா பெறுமதியான உணவுப்பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. அதே நேரத்தில் 5 ஆயிரம் ரூபா விசேட கொடுப்பனவு சமுர்த்தி பெறும் குடும்பங்கள் மற்றும் வறிய குடும்பங்க ளுக்கான கொடுப்பனவாக அரசால் அறிவிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது. யாழ் மாவட்டத்தில் அத்தியாவசிய சேவைகள் மற்றும் ஏனைய பொதுமக்களுடைய தேவைகளைப் பூர்த்திசெய்ய வீடு வீடாகச் சென்று விற்பனை செய்வதற்குரிய அனுமதிகளை சம்பந்தப்பட்ட வியாபாரிகளுக்கு வழங்கியுள்ளோம்.

உணவு வகைகள், மீன் மற்றும், மரக்கறி ஆகியவை நடமாடும் விற்பனை நிலையங்கள் மூலம் பொதுமக்களுக்கு கிடைக்கக் கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விலை அதிகரித்தல், தரமற்ற பொருள் விற்பனை தொடர்பில் கிடைத்த முறைப்பாடுகளையடுத்து கடந்த ஒரு வார காலமாக பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபை உத்தியோகத்தர்கள் ஒவ்வொரு பிரதேசமாகச் சென்று நிலைமைகளை களப் பரிசோதனை செய்து வருகின்றார்கள். இவ்வாறான சட்டமீறலுக்கு உட்பட்ட வியாபாரிகள் எச்சரிக்கை செய்யப்படுவதோடு சிலருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன,

குறிப்பாக அத்தியாவசிய உணவுப் பொருள்கள், எரிவாயு, இதர உணவுப் பொருள்கள், ஏனைய பொருள்கள் மற்றும் மரக்கறி போன்றவற்றின் விலை அதிகரிப்பு அவதானத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் அநாவசியமான பயணங்களைத் தவிர்த்து வீடுகளில் இருந்தவாறு, தம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். பயணத்தடை கட்டுப்பாடுகள் மக்களைத் தொற்றிலிருந்து கட்டுப்படுத்தவே ஏற்படுத்தப்பட்டுள்ளன. எனவே மக்கள் அதனை உணர்ந்து. அனுசரித்துச் செயற்படவேண்டும் - என்றார். (ப-26)

## உத்தியோகத்தரை தள்ளிவிட்டு மோட்டார் சைக்கிள் கொள்ளை

யாழ்ப்பாணம், ஜுன் 13

பணி முடிந்து வீடு திரும்பிய சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தரின் மோட்டார் சைக்கிள் கொள்ளைக் கும்பல் ஒன்றால் பறித்துச்செல்லப்பட்டது.

இந்தச் சம்பவம் கோப்பாய் இராசபாதை வீதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணியளவில் இடம் பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில், பட்டதாரி பயிலுநராகக் கடமையாற்றும் உத்தியோகத்தர், தனது அலுவலகத்திலிருந்து வீடு திரும்பியபோது, ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த நால் வர் வழிமறித்து உத்தியோகத்தரை மோட்டார் சைக்கிளில் இருந்து தள்ளிவிட்டனர்.

அதன்பின்னர் மோட்டார் சைக்கிளை பறித்துக் கொண்டு தப்பித்துள்ளனர்.சம்பவம் தொடர்பில் வழங்கப்பட்ட முறைப்பாடு தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ப-26)



## 70 குடும்பங்களுக்கு உணவுப்பொருள்கள்

கிளிநொச்சி,ஜுன் 13

பயணத்தடை காரணமாக பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 70 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

அக்கராயன் மற்றும் கண்ணகைபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கே நேற்று இந்த உதவிகள் வழங்கப்பட்டன. அக்கராயன் மகா வித்தியாலயத்தில் 2001ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரத்தில் கல்வி கற்ற பழைய மாணவர்களால் இவ் உதவிகள் வழங்கப்பட்டன. (ஜ-13)



## நாளைமறுதினம் பி.சி.ஆர். பரிசோதனை

சாவகச்சேரி,ஜுன் 13

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை பி.சி. ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய தேவைகளுக்காக பிரதேச செயலகத்தில் "பாஸ்" பெறச் செல்வோர் கட்டாயம் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து தினமும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள பலர் சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்துக்கு வருகை தருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-9)

மருதமடு அன்னையின் ஆடிப் பெருவிழாவில்

# வெளி மாவட்டத்தவர்கள் கலந்துகொள்ளத் தடை

*உள்ளூர் பக்தர்களுக்காக 5 திருப்பலிகள் ஒப்புக்கொடுப்பு*

மன்னார், ஜுன் 13

ஆடி மாதம் 2ஆம் திகதி நடைபெறும் மன்னார், மருதமடு அன்னையின் பெருவிழாவில் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் கலந்துகொள்ள அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. திருவிழா திருப்பலியில் ஐந்து திருப்பலிகள் உள்ளூர் பக்தர்களுக்காக ஒப்புக்கொடுக்கப்படவுள்ளன. இவற்றில் மறைக்கோட்ட ரீதியாக மட்டுப்படுத்தப்பட்ட மக்களே கலந்துகொள்ள முடியும் என மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்ணாண்டோ ஆண்டகை தெரிவித்தார். இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்; வருடந்தோறும் இடம்பெற்றுவரும், மருதமடு அன்னையின் திருவிழா ஆடி மாதம் 2ஆம் திகதி இடம்பெறவுள்ளது. எனவேதான் பெருவிழாவுக்கு மன்னார் மறைமாவட்டம் தவிர வெளி மாவட்டங்களிலிருந்து யாத்திரிகர்கள், பக்தர்கள் வருவது தவிர்க்கப்பட்டுள்ளது. பெருவிழாவுக்கு வழமையாக வருடந்தோறும் பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு மருதமடு அன்னையிடம் பரிந்துரைக்க வேண்டிச்செல்வர். ஆனால் இவ் வருடம், பரவிக் கொண்டிருக்கும் கொரோனா தொற்றுநோய் காரணமாக இந்த நாட்டிலே இருக்கக்கூடிய அச்சுறுத்தல் மத்தியில் பல கட்டுப்பாடுகள் அரச அதிகாரிகள் மற்றும் சுகாதார அதிகாரிகள் ஆகியோரால் எமக்குத் தரப்பட்டுள்ளன. எனவே இம்மாதம் 23ஆம் திகதி வழமைபோன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவ நாள்கள் நடைபெறும் விழாவில் 15 நபர்கள் மாத்திரமே கலந்துகொள்ள முடியும். ஆடி மாதம் 2ஆம் திகதி காலை பெருவிழா திருப்பலி மருதமடு அன்னையின் திருத்தலத்தில் வழமையாக நடைபெறும். இந்த நாளில் நாங்கள் அதிகமான திருப்பலிகளை ஒப்புக்கொடுத்தாலும் அதிகமாக 30 பக்தர்கள் மாத்திரமே பங்குபற்ற முடியும். திருப்பலியின் போது பக்தர்கள் கலந்துகொள்ள வாய்ப்புக்கள் இல்லாதபோதும் இத் திருவிழாத் திருப்பலியை தொலைக்காட்சி ஊடாக காண்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன - என்றார் (ப-60.56)

## எரிவாயு விற்பனை நிலையங்களில் அதிகாரிகள் நேற்று திடீர்ப் பாய்ச்சல்

மன்னார். ஜுன் 13

அரசு வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய மன்னார் மாவட்டச் செயலாளரின் வழிகாட்டலில் மன்னார் மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை மற்றும் புலனாய்வுப் பிரிவினர் ஆகியோர் இணைந்து மன்னார் மாவட்டத்திலுள்ள நடமாடும் வர்த்தகச் செயற்பாடுகள் மற்றும் எரிவாயு விற்பனை நிலையங்கள் போன்றவற்றை நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தினர்.

இதன்போது விலை போன்ற வர்த் தக செயற்பாடுகளில் குறைகள் காணப்பட்ட போதும், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையால், வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குகள் பதிவுசெய்யப்படாது, எச்சரிக்கை செய்யப்பட்டது.

கொரோனா மூன்றாவது அலையின் தாக்கத்தால் அனைவரும் பெருமளவில் பாதிக்கப்பட்டிருப்பதை கருத்தில்கொண்டே குறித்த வியாபாரிகளிடம் குறைகள் விரைவாக நிவர்த்திசெய்யப்பட வேண்டும் என்று பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினர் எச்சரித்தனர். (ப)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழர்களை ஏமாற்றியதைப்போல் சர்வதேசத்தை ஏமாற்ற முடியாது

*ஐரோப்பிய ஒன்றியத் தீர்மானத்தை வரவேற்று சம்பந்தன் கருத்து*



**கொழும்பு, ஜூன் 13**

**இலங்கைத் தமிழர்களை ஏமாற்றியதைப்போல் சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றலாம் என்று இலங்கை அரசு நினைத்தால் அது மிகப் பெரும் தவறு. இன்று சர்வதேச சமூகத்தை ஏமாற்ற முடியாத இக்கட்டான நிலையிலேயே இலங்கை அரசு உள்ளது.**

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்மானம் தொடர்பில் கேட்டபோதே, 'உதயன் பத்திரிகைக்கு' அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச்செய்ய வேண்டும் என இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்து ஐரோப்பிய நாடாளுமன்றம் நிறைவேற்றிய தீர்மானத்தை வரவேற்கின்றோம்.

தமிழ் மக்கள் நலனில் அக்கறை கொண்ட சர்வதேச சமூகம், இலங்கை மீது பல பரிந்துரைகளை முன்வைத்து பல தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. இதன்போது பல வாக்குறுதிகளையும் இலங்கை அரசிடமிருந்து சர்வதேசம் பெற்றுள்ளது. இதை இந்தியா செய்திருக்கின்றது, ஐரோப்பிய ஒன்றியம் செய்திருக்கின்றது, ஐ.நா. சபை செய்திருக்கின்றது, அமெரிக்கா செய்திருக்கின்றது. இவ்வாறு பல நாடுகளும், நிறுவனங்களும் இலங்கை அரசிடமிருந்து பல்வேறு வாக்குறுதிகளைப் பெற்றுள்ளன.

அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசுக்குப் பல நாடுகளாலும், நிறுவனங்களாலும் போதிய கால அவகாசமும் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசு, இலங்கைத் தமிழர்களை ஏமாற்றியதைப் போல் சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றலாம் என்று நினைத்தால் அது பெரும் தவறு.

இன்று சர்வதேச சமூகத்தை ஏமாற்ற முடியாத இக்கட்டான நிலையிலேயே இலங்கை அரசு உள்ளது.

வாக்குறுதிகளை நிறைவேற்ற இலங்கை அரசு முன்வர வேண்டும். இல்லையேல் சர்வதேச அழுத்தங்கள் இலங்கை அரசுமீது மேலும் அதிகரிக்கும். அதை நாம் வரவேற்கின்றோம். ஏனெனில் அது சர்வதேச சமூகத்தின் கடமை.

அந்தக் கடமையை சர்வதேச சமூகம் உரிய வகையில் நிறைவேற்ற வேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகளை அழிப்பதற்கு இலங்கை அரசுக்கு போதிய அளவு உதவிகளை சர்வதேச சமூகம் வழங்கியிருந்தது. அதன்போது தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுப்போம் என்ற வாக்குறுதியை சர்வதேச சமூகத்துக்கு இலங்கை அரசு வழங்கியிருந்தது. ஆனால், அது இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. அந்த வாக்குறுதியை நிறைவேற்ற வைப்பது சர்வதேச சமூகத்தின் கடமை.

வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான கருமங்களை இலங்கை அரசு முன்னெடுக்க வேண்டும். தவறினால் நிலைமைகள் போகப்போக இன்னும் மோசமடையும். பலவிதமான தடைகள் இலங்கைமீது விதிக்கப்படலாம். அதாவது பயணத்தடை, பொருளாதாரத் தடை, மனித உரிமைகள் சம்பந்தமான தடைகள் எனப் பல தடைகள் வரலாம். எனவே, தான்தோன்றித்தனமாகச் செயற்படும் இலங்கை அரசு, தனது தற்போதைய நிலைப்பாட்டிலிருந்து மாற வேண்டியது மிகவும் அத்தியாவசியம். மாறாவிட்டால் அரசின் எதிர்காலமும் நாட்டின் எதிர்காலமும் சாத்தியமாக அமையாது- என்றார். (ஓ.5,22)



## எரிபொருள்களின் விலை உயர்வுக்கு சாரதிகளும் மக்களும் கடும் கண்டனம்

கொழும்பு, ஜூன் 13

எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதற்கு வாகனச் சாரதிகளும் பொதுமக்களும் கடும் எதிர்ப்பையும், கண்டனத்தையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் எரிபொருள்களின் விலையை அதிகரித்தமையால் வருமானமின்றியுள்ள தாங்கள் என்ன செய்வது? என்று பொதுமக்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

கொரோனாவால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. வருமானம் இல்லை. எரிபொருள் விலையை அதிகரித்துவிட்டார்கள். அடுத்துவரும் நாள்களில் ஏனைய பொருள்களின் விலைகளும் அதிகரிக்கப்படவுள்ளன. நாம் என்ன செய்வது?, மரத்தில் இருந்து வீழ்ந்தவர்களை மாடு முட்டும் செயல்போல்தான் அரசின் திட்டம் அமைந்துள்ளது என்று வாகனச் சாரதிகளும், பொதுமக்களும் தெரிவிக்கின்றனர்.

எனவே, விலை அதிகரிப்பு தொடர்பான அறிவித்தலை அரசு உடன் மீளப்பெற வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

அதேவேளை, எரிபொருள்களின் விலை அதிகரிப்புக்கு எதிர்க்கட்சி அரசியல்வாதிகளும் கடும் கண்டனமும் விசனமும் தெரிவித்து வருகின்றனர்.

அதுமட்டுமன்றி, எரிபொருள்களின் விலை அதிகரிப்புக்கு அரசுக்குள்ளேயே எதிர்ப்புகள் வலுத்துள்ளன என்ற தகவலும் வெளியாகியுள்ளது. (கு-44)

## பதுக்கல்களைத் தவிர்ப்பதற்கு விசேட வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, ஜூன் 13

நெல், அரிசி, சீனி, பால்மா மற்றும் சோளம் போன்றவை பதுக்கப்படுவதைத் தடுப்பதற்காக மூன்று விசேட வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இவற்றை வைத்துள்ளவர்கள் 7 நாள்களுக்குள் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையில் பதிவு செய்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி அதிகார சபை இந்த வர்த்மானி அறிவித்தல்களை நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ளது.

அரிசி தயாரிப்பாளர், நெல் ஆலை உரிமையாளர்கள், நெல் அல்லது அரிசியை களஞ்சியப்படுத்துவோர், விநியோகிப்பவர்கள் அல்லது நெல் மற்றும் மொத்த அரிசி விற்பனையாளர்கள் தம்மிடமுள்ள, தமது பொறுப்பிலுள்ள அல்லது தமது நிர்வாகத்துக்கு உட்பட்டதாகவுள்ள நெல் மற்றும் அரிசி களஞ்சியம், கொள்கலன், அரிசிக் கிடங்கு அல்லது வேறு இடங்கள் முதலானவை நுகர்வோர் விவகார அதிகார சபையில் பதிவு செய்யப்பட வேண்டும் என இந்த விசேட வர்த்தமானி அறிவித்தலில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஒ.இ)



பயங்கரவாத தடைச் சட்டம்

## நடைமுறைப்படுத்துவதா? நீக்குவதா? எமது நாடாளுமன்றமே முடிவெடுக்கும்

*சரத் வீரசேகர பாய்ச்சல்*

கொழும்பு, ஜூன் 13

பயங்கரவாத தடைச் சட்டத்தை தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதா இல்லையா என்பது தொடர்பில் இலங்கை நாடாளுமன்றம்தான் தீர்மானிக்கும். அதனை வேறு எவரும் தீர்மானிக்க முடியாது. இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கவேண்டும். இல்லாவிடின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை இரத்துச்செய்ய வேண்டும் என்று ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடன் இரத்துச்செய்ய வேண்டும் என்று அரசை வலியுறுத்துவதற்கு ஐரோப்பிய நாடாளுமன்றத்துக்கு எந்த அதிகாரமும் கிடையாது.

இலங்கையின் நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்துடன்தான் பயங்கரவாதத் தடைச்சட்டம் நடைமுறையிலுள்ளது. அதை நீக்குவதா? இல்லையா? என்பதை இலங்கை நாடாளுமன்றம்தான் தீர்மானிக்க வேண்டும். அது தொடர்பில் ஐரோப்பிய நாடாளுமன்றம் தீர்மானம் எடுக்க முடியாது.

நாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டம் நடைமுறையில் இருக்கின்றதாலேயே தான் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களையும், அதற்குத் துணை போனவர்களையும் கைதுசெய்தோம்; தற்போதும் கைதுசெய்து வருகின்றோம்.

இதேவேளை, இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை விலக்கிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் ஐரோப்பிய நாடாளுமன்றம் வலியுறுத்துவது ஒரு மனிதாபிமானமற்ற செயலாகும். சம்பந்தப்பட்ட தரப்புகள், இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை விலக்கிக்கொள்ள மாட்டார்கள் என்றே நாம் நம்புகின்றோம்- என்றார். (ஓ.5,22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எரிவாயு விலையையும் அதிகரிக்க அரசு பிரயத்தனம்

கொழும்பு, ஜூன் 13

சமையல் எரிவாயு கொள்கலன் ஒன்றின் விலையை 700 ரூபாவால் அதிகரிப்பதற்கு நுகர்வோர் பாதுகாப்பு விவகார அதிகாரசபையிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

எனினும், அதற்கு இதுவரை அனுமதி வழங்கப்படாததுடன், முன்வைக்கப்பட்டுள்ள விலை நிர்ணயம் தொடர்பில் ஆராய்வதற்காக ஐந்து பேர் அடங்கிய அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

குறித்த குழு ஊடாக உலக சந்தையில் எரிவாயு விலை அதிகரிப்பது தொடர்பில் விரிவான ஆராய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இதேவேளை, அந்த அதிகாரசபையின் தலைவர், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சாந்ததிஸாநாயக்க, சமையல் எரிவாயு விலையை அதிகரிப்பது தொடர்பில் இதுவரை எந்தவொரு தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவித்தார்.

இதேவேளை, கோதுமை மாவின் விலையை அதிகரிப்பது தொடர்பிலும் அந்த நிறுவனங்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. நுகர்வோர் விவகார அதிகார சபையிடம் குறித்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ள போதிலும், இதுவரை அதற்கான அனுமதி கிடைக்கப்பெறவில்லை என்று நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார்.

எரிபொருள்களின் விலையை அரசு நேற்று முன்தினம் நள்ளிரவு தொடக்கம் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு-இ)

# விலை அதிகரிப்புக்குப் பதிலாக எரிபொருள் வரியைக் குறையுங்கள்

## இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்கங்கள் அரசுக்கு ஆலோசனை



**கொழும்பு, ஜூன் 13**

**எரிபொருள்களின் விலையை அதிகரிப்பதற்கு பதிலாக எரிபொருளுக்கு விதிக்கப்படும் வரியைக் குறைக்குமாறு தொழிற்சங்கங்கள் அரசிடம் கோரியுள்ளன.**

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின், ஐக்கிய ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஆனந்த பலித, இது தொடர்பில் தெரிவிக்கையில்,

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை 2019ஆம் ஆண்டு தொடக்கம் பல சந்தர்ப்பங்களில் குறைந்துவிட்டாலும், உள்நாட்டில் விலைகளை அரசு குறைக்கவில்லை. தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்த காலத்திலிருந்து சர்வதேச சந்தையில் ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் 68 அமெரிக்க டொலரிலிருந்து 18 அமெரிக்க டொலராகக் குறைக்கப்பட்டது என பாலித கூறுகிறார். இருப்பினும், துளியளவு சலுகையைக்கூட பொதுமக்கள் பெறவில்லை என்றும் ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தெரிவித்தார். முன்னாள் எரிசக்தி அமைச்சர் மஹிந்த அமரவீர, பெற்றோலியக்கூட்டுத்தாபனத்தின் இலாபத்தின் மூலம், பொதுமக்களுக்கான ரின் மீன் மற்றும் பருப்பு ஆகியவற்றுக்கு சலுகைகளை வழங்கவுள்ளோம் என்று தெரிவித்திருந்தார். சலுகை இரண்டு வாரங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும் என்றும் குறிப்பிட்டிருந்தார். ஆனாலும் இப்பொழுது விலை நான்கு மடங்கு அதிகரித்துள்ளது என்று ஆனந்த பலித கூறினார். (கு-இ)

## எரிபொருள் விலை அதிகரிப்பு நாட்டுக்கு துன்பியல் சம்பவம்

### சஜித் பிரேமதாச கடும் விசனம்

கொழும்பு, ஜூன் 13

எரிபொருள் விலை அதிகரிப்பு குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அரசை கடுமையாக சாடியுள்ளார்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் திருத்தப்பட்ட புதிய எரிபொருள் விலைகளை நேற்றுமுன்தினம் நள்ளிரவு தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் அதிகரித்துள்ளது. இந்த நிலையில், "இந்த அரசு தொடர்பாக வெட்கமடைகின்றேன். எரிபொருள்களின் விலை அதிகரிப்பு முழு நாட்டுக்கும் ஒரு துன்பகரமான நிகழ்வு. ஜனநாயக ரீதியாக நாட்டை ஆள முடியாது என்பதை இந்த அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தியால் மட்டுமே இந்த நாட்டுக்கு செழிப்பையும் வளர்ச்சியையும் கொண்டுவர முடியும்" என்றும் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்தார். (கு-இ)

## விவசாய பொருள்கள் இறக்குமதிக்கு தீர்மானம்

### இராஜாங்க அமைச்சர் பத்திரன தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 13

விவசாய பயிர்ச் செய்கைகளில் ஏற்படும் பாதிப்புக்களை தடுப்பதற்காக சில விவசாய இரசாயனப் பொருள்களை இறக்குமதிசெய்து, கட்டுப்பாட்டின் கீழ் விநியோ கிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்டத்துறை இராஜாங்க அமைச்சர் ரமேஸ் பத்திரன இதனைத் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், நாட்டுக்கு தேவையான சேதனப் பசளையை போதுமானளவு நாட்டினுள் உற்பத்தி செய்ய முடியாவிடின் அதனை இறக்குமதிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (கு-இ)

# 100 ரூபாவுக்கு பெற்றோலை விற்கமுடியும்! இலாபத்துக்காக மக்களை வதைக்கிறது அரசு

## உண்மையைப் போட்டுடைக்கிறார் சம்பிக்க

கொழும்பு, ஜூன் 13

"கொவிட் தொற்றின் காரணமாக பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள மக்களுக்கு எரிபொருள் விலை அதிகரிப்பானது மேலுமொரு பெருஞ்சுமையாகவே அமையும். அரசின் இத்தகைய செயற்பாடுகளை அனைவரும் கடுமையாக எதிர்க்க வேண்டும்" என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு தொடக்கம் எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இந்தநிலையில், அவர் மேலும் தெரிவிக்கையில்,

எரிபொருள் விலை அதிகரிப்பானது கொவிட் தொற்றால் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் மக்களுக்கு மற்றுமொரு பெருஞ்சுமையாகவே அமையும். இந்த நிலைமையை கடந்த நல்லாட்சியுடன் ஒப்பிட்டு அவதானிக்க வேண்டும். ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் காணப்பட்ட எரிபொருள்களின் விலைகளில் நல்லாட்சி அரசின் காலத்தில் பெரும் மாற்றங்கள் செய்யப்பட்டன.

எரிபொருள்களின் விலைக்கான விலை சூத்திரமொன்று உருவாக்கப்படும் வரை குறைந்த விலையிலேயே மக்களுக்கு தொடர்ந்தும் எரிபொருள்கள் வழங்கப்பட்டு வந்தன. எவ்வித அதிகரிப்பும் மேற்கொள்ளப்படவில்லை.

தற்போது உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரித்தமையின் காரணமாகவே இலங்கையிலும் எரிபொருள் விலையை அதிகரிக்க நேர்ந்துள்ளது என்று அரசுத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

தற்போது உலக சந்தையில் மசகு எண்ணெய் தாங்கியொன்றின் விலை 68 - 70 டொலராகவே உள்ளது.

இதேபோன்று சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோல் மற்றும் டீசல் ஆகியவற்றின் தாங்கியொன்றின் விலை 75 அல்லது 76 டொலராக காணப்படுகிறது. மசகு எண்ணெய் தாங்கியொன்றின் விலை 70 டொலர் எனக் கொண்டால், இலங்கை ரூபாவில் அதன் விலை 14 ஆயிரம் ரூபாவாகும்.

அத்தோடு இந்த தாங்கிகள் 159 லீற்றர் கொள்ளளவு கொண்டவை. அதற்கமைய ஒரு லீற்றர் மசகு எண்ணெயின் விலை 84 ரூபாவாகும். அதற்கமைய மசகு எண்ணெய் மற்றும் பெட்ரோல், டீசல் ஆகியவற்றின் விலையை அவதானிக்கும்போது தாங்கியொன்றின் விலை உலக சந்தையில் சுமார் 5 டொலரால் மாத்திரமே அதிகரிக்கும்.

எனவே இந்த எரிபொருள்களின் விலையை 15 ரூபாவால் அதிகரிப்பதே போதுமானது. அதற்கேற்ப இவற்றின் விலையும் 100 ரூபாவை அண்மித்ததாகவே காணப்படும். தனவந்தர்களுக்கு சலுகைகளை வழங்கியுள்ள அரசு சாதாரண மக்கள் மீது மேற்கொள்ளும் தாக்குதல் இதுவாகும். எனவே எரிபொருள் விலையைக் குறைத்து நல்லாட்சி அரசில் நாம் வழங்கிய சலுகையை மீண்டும் மக்களுக்கு வழங்குமாறு அரசிடம் வலியுறுத்துகின்றோம். - என்றார். (கு-இ)

## கஞ்சிபானவின் உதவியாளர் கைது

கொழும்பு, ஜூன் 13

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கஞ்சிபான இம்ரானின் உதவியாளர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

30 வயதுடைய சந்தேகநபர் வெல்லம்பிட்டிய, கொஹிலவத்த பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபரிடமிருந்து 7 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ.இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 40 மில்லியன் அ. டொலரை இழப்பீடாக இலங்கை கோரும்!

**கொழும்பு, ஜூன் 13**



**எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பிடித்து விபத்துக்குள்ளானதால் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு தொடர்பில் முதற்கட்டமாக கப்பல் நிறுவனத்திடம் 40 மில்லியன் அமெரிக்க டொலர் இழப்பீடாகக் கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று துறைமுக அபிவிருத்தி மற்றும் கப்பற்துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன நேற்றுத் தெரிவித்தார்.**

"இழப்பீடு கோரும்போது கப்பல் விபத்தால் இலங்கையின் பொருளாதாரத்துக்கு ஏற்பட்ட இழப்பு, சுற்றாடலுக்கு ஏற்பட்ட பாதிப்பு, மீனவ சமுதாயத்துக்கு ஏற்பட்டுள்ள தாக்கம், கப்பலில் தீயைக் கட்டுப்படுத்துவதற்கு முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்காக ஏற்பட்ட செலவீனம் உள்ளிட்ட அனைத்து விடயங்களும் கவனத்தில் கொள்ளப்படும். இவற்றுக்கான செலவுகளை ஈடுசெய்யும் வகையிலேயே நடவடிக்கை இடம்பெறும். இதற்காக குழுக்கள் செயற்பட்டு வருகின்றன." என்றும் அமைச்சர் கூறினார்.

அதேவேளை, இலங்கை கடற்பரப்புக்குள் கப்பல் தீப்பற்றி எரிந்த சம்பவத்தால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மீனவர்கள் உட்பட மீனவ சமுதாயத்துக்கு உரிய இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் ஏற்கனவே உறுதி வழங்கியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ப-44)

# 227 வாகனங்களுக்குப் பதிலாக தடுப்பூசிகளை வாங்குங்கள்

## அரசுக்கு ஜே.வி.பி. அறிவுரை

கொழும்பு, ஜூன் 13



"நாட்டில் கொவிட் தொற்றுக் காரணமாக மக்கள் பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத் துள்ள நிலையில் 18 மில்லியன் டொலர் செலவிட்டு 227 சொகுசு வாகனங்களை கொள்வனவுசெய்வதற்கு அரசு தயாராகியுள்ளது. இந்தப் பணத்தை கொவிட் தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்வதற்கு உபயோகித்தால் நாட்டிலுள்ள பெருமளவான மக்களை கொவிட் தொற்றிலிருந்து பாதுகாக்க முடியும்" என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகநகர பொருளாதார ஆணைக் குழு சட்டவரைவை நிறைவேற்றிக்கொள்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அரசு செய்துகொண்ட இரகசிய ஒப்பந்தத்துக்கு அமையவே இந்த வாகனங்கள் கொள்வனவுசெய்யப்படவுள்ளன. இந்தத் திட்டத்தை அரசு உடனடியாகக் கைவிட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

18 மில்லியன் டொலர் செலவிட்டு 227 சொகுசு ஜீப் வாகனங்களைக் கொள்வனவுசெய்ய அரசு தயாராகியுள்ளது. பொருளாதாரத்தில் மாத்திரமின்றி கொவிட் தொற்றின் காரணமாகவும் நாட்டு மக்கள் பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள இந்த சந்தர்ப்பத்திலேயே அரசு இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது.

வாகனங்களை கொள்வனவுசெய்வதற்காக உபயோகிக்கும் இந்த 18 மில்லியன் டொலர்களின் மூலம் 36 லட்சம் ஷி தடுப்பூசிகளைக் கொள்வனவுசெய்ய முடியும். அவ்வாறில்லையெனில், 18 லட்சம் சைனோஃபோர்ம் தடுப்பூசிகளையேனும் கொள்வனவு செய்யலாம். இதன் மூலம் கொவிட் தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்க முடியும்.

இவ்வாறான நிலையில், சொகுசு வாகனங்களை கொள்வனவு செய்வதற்கான தேவை என்ன? இவ்வாறான தலைவர்களால் எவ்வாறு நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும்?.

இவ்வாறுகொள்வனவு செய்யப்படவுள்ள ஒரு வாகனத்தின் பெறுமதி 50 லட்சமாகும். இவற்றில் ஒரு வாகனத்தையேனும் மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பயன்படுத்தமாட்டார்கள். இந்த செயற்பாடு உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் - என்றார். (த-இ)

# எரிபொருள் விலையேற்றம் பரிகாரம் வழங்கப்படும்

## கடற்றொழில் அமைச்சர் தெரிவிப்பு

கொரோனா பரவல், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து என்பவற்றால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள நீர்கொழும்பு மீனவர்கள், எரிபொருள் விலையேற்றமும் தமக்குப் பெரும் சுமையாக அமைந்துள்ளது எனத் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து அவர்களுக்கு நியாயமான பரிகாரம் வழங்கப்படும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் கடற்றொழிலாளர்களுக்கு ஏற்படுத்தியுள்ள பாதிப்புகள் தொடர்பாக நீர்கொழும்பு பிரதேச மீன்பிடி சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்குமிடையில் நீர்கொழும்பு மாநகர சபை கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பிலேயே மேற்குறித்த கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என்று அவரது ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

'தற்போது ஏற்பட்டுள்ள வாழ்வாதார பாதிப்புகளுக்கு அரசு இழப்பை அல்லது நிதி நிவாரணங்களை வழங்க வேண்டும். கப்பல் விபத்து மாத்திரமன்றி, கொரோனா பரவல் காரணமாகவும் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்ற நிலையில், எரிபொருளின் விலையேற்றம் மேலதிக சுமையாக அமைந்துள்ளது. அண்மைக்காலமாக சந்தைக்கு வருகின்ற வலைகளின் தரம் தொடர்பாக நாம் அதிருப்தி அடைகின்றோம். தரமான வலைகள் தொடர்பாக கடற்றொழில் அமைச்சு அவதானம் செலுத்த வேண்டும். தொழில் நடவடிக்கைகள் இயல்பு நிலைக்கு திரும்பும்வரை கடலை நம்பி வாழும் சுமார் பத்தாயிரம் குடும்பங்களின் எதிர்காலம் தொடர்பாக தீர்க்கமான முடிவொன்றை எடுக்கவேண்டும்' என்றும் கடற்றொழில் பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்தனர்.

அதிகமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசமான நீர்கொழும்பில் கடற்றொழில் அமைச்சின் அலுவலகத்தை அமைக்கவும், அந்த அலுவலகத்தின் ஊடாக கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகள் மற்றும் முறைப்பாடுகள் என்பவற்றுக்கு உடனடித் தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

மேலும், பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் பிடிக்கப்படும் மீன்களை பரிசோதனைக்கு உட்படுத்தி உறுதிப்படுத்துவதுடன், சந்தை வாய்ப்பு சீராகும்வரை அந்த மீன்களை, மீன்பிடித் திணைக்களமே கொள்வனவுசெய்வது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது. 'கடற்றொழிலாளர்கள் மாத்திரமன்றி, கருவாடு உற்பத்தியில் ஈடுபட்டவர்களும் வாழ்வாதார பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ள நிலையில், அவர்களுக்கான இழப்பீட்டை வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அத்துடன், அண்மையில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவால் உறுதியளிக்கப்பட்ட முதற்கட்ட வாழ்வாதார உதவித்தொகையை அடுத்த சில நாள்களுக்குள் அனைவருக்கும் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் முழுமையான பாதிப்புக்களுக்கான பரிகாரங்கள் கட்டங்கட்டமாக விரைந்து மேற்கொள்ளப்படும் எனவும் எரிபொருள் விலையேற்றம் தொடர்பாக ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் கலந்துரையாடி நியாயமான பரிகாரம் பெற்றுத்தரப்படும்' - என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டுள்ளார். (ஓ.இ)

# பொருளாதார மத்திய நிலையங்கள் திறப்பு

கொழும்பு, ஜூன் 13

நாட்டிலுள்ள பொருளாதார மத்திய நிலையங்கள் அனைத்தும் நேற்றுத் திறக்கப்பட்டன. இன்று ஞாயிற்றுக்கிழமையும் அவை திறக்கப்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த நாள்களில் மொத்த விற்பனையாளர்கள் மற்றும் நடமாடும் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்கள் நேரடியாக பொருளாதார மத்திய நிலையங்களுக்குச் சென்று, மரக்கறிகள் மற்றும் பழ வகைகளை கொள்வனவுசெய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சுகாதார நடைமுறைகளை பின்பற்றியே வாராந்த சந்தைகள் திறக்கப்படும். தவிர, மட்டுப்படுத்தப்பட்ட அளவினரை மாத்திரம் அனுமதிக்க முடியும் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதுதவிர, நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பயணத்தடை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளமையைத் தொடர்ந்தே பொருளாதார மத்திய நிலையங்களை நேற்றும் இன்றும் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (த-இ)

# பாணந்துறை - நீர்கொழும்பு கடற்பகுதியில் ஆய்வுக்குப் பின்னர் மீன்பிடி நடவடிக்கை

## பிரதமர் ஆலோசனை

கொழும்பு, ஜூன் 13

விபத்துக்குள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால், ஏற்பட்ட பாதிப்புக் காரணமாக மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட முடியாதுள்ள பாணந்துறை முதல் நீர்கொழும்பு வரையான கடற்பகுதியில், முறையான ஆய்வுக்குப் பின்னர் விரைவாக மீன்பிடி நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பில் அலரி மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் என்று அவரது ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. இது தொடர்பில் ஊடகப்பிரிவு அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது:

சுற்றுச்சூழல், மீன்வளம் மற்றும் பொருளாதாரம் ஆகியவை உள்ளிட்ட துறைகளில் கவனம் செலுத்தி, தீயால் ஏற்பட்ட சேதங்களை முழுமையாக மதிப்பிடவும், சம்பந்தப்பட்ட கப்பல் நிறுவனத்திடமிருந்து முழு இழப்பீட்டைப் பெறுவதற்கும், கப்பலை வெளியேற்றுவதற்குத் தேவையான சட்ட நடவடிக்கைகளை விரைவுபடுத்தவும் பிரதமர் இதன்போது அறிவுறுத்தினார். சம்பந்தப்பட்ட சட்ட நட வடிக்கைகள் சட்டமா அதிபர் திணைக்களத்தின் தலைமையில் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் பிரதமர் அறிவித்தார்.



கொவிட் தொற்று நிலைமைக் காரணமாக குறைந்த வருமானம் பெறுவோருக்கு வழங்கப்படும் 5000 ரூபா கொடுப்பனவு, கப்பல் இடரால் பாதிக்கப்பட்ட மீனவ சமூகத்துக்கும் இன்று திங்கட்கிழமை முதல் வழங்கப்படும் எனவும் பிரதமர் இதன்போது தெரிவித்தார் - என்றுள்ளது. (ப)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கருத்துச் சுதந்திரத்தையும் பறிக்கிறது ராஜபக்ச அரசு

ஐ.தே.க. கண்டனம்

கொழும்பு, ஜூன் 13
நாட்டின் பொருளாதாரம், மக்களின் சுகாதாரம், கல்வி, சூழல் மற்றும் விவசாயம் உள்ளிட்ட அனைத்தையும் சீரழித்துள்ள ராஜபக்ச அரசு தற்போது மக்களின் கருத்துச் சுதந்திரத்தையும் இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

அரசின் இவ்வாறான ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிராக சகல அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய தேசியக் கட்சி அரசின் காலத்தில் தகவல் அறியும் உரிமை சட்டத்தை 2016ஆம் ஆண்டு மக்களுக்கு வழங்கினோம். நாட்டினுள் ஊடக சுதந்திரத்தை நிறுவினோம். எமக்கு எதிராக பல செய்திகள் பகிரப்பட்டபோதும், அவ்வாறானவர்களுக்கு எவ்வித நெருக்கடியும் எமது அரசால் ஏற்படுத்தப்படவில்லை. ஆனால் தற்போது அரசுக்கு எதிராக கருத்துக்களை வெளியிடுபவர்களை அநாவசியமாகக் கைது செய்துள்ளனர். அரசியல் தீர்மானத்துக்கமைய விசேட பொலிஸ் பிரிவொன்று நிறுவப்பட்டுள்ளது. இதன் ஊடாக நாட்டு மக்களின் கருத்து சுதந்திரத்தை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளையே அரசு முன்னெடுத்துள்ளது.

ஜனநாயகத்தை பாதுகாக்கும் சகல அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து இதற்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டும்- என்றார். (ஒ.இ)

# இலங்கையை முழுமையாக கைப்பற்ற சீனா அரும்பாடு

ஜனநாயகப் போராளிகள் கட்சி குற்றச்சாட்டு



**யாழ்ப்பாணம், ஜூன் 13**
**சத்தம் இல்லாத போர் ஒன்றின் மூலம் இலங்கையை முழுமையாகக் கைப்பற்றும் தீவிர முயற்சியை சீனா எடுத்துள்ளது என்று ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் செ.கதிர் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் உள்ளதாவது;

தென்னாசியாவில் தனது ஆதிக்கத்தை நிறுவிக்கொள்ள நினைக்கும் சீனா, அதற்காக இலங்கையில் சத்தமில்லாத போர் ஒன்றை ஆரம்பித்து, தற்போது தமிழர் தாயகத்தையும் ஆக்கிரமிக்கத் தொடங்கியுள்ளது. இதன் ஆரம்பமாக தென்னிலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட ஆக்கிரமிப்பு வடிவமாக இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி என்ற பெயரில் பணத்தைக் கொடுத்து இலங்கைக்குச் சொந்தமான கடற்பரப்பைக் கைப்பற்றி தனது வல்லாதிக்க சக்தியை நிலை நாட்டி நிற்கின்றது. இதன் தொடர்ச்சியாக வட மாகாணத்திலும் தீவகத்தைக் கைப்பற்ற பல வழிகளில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் இடைநிறுத்தப்பட்ட போதும் தற்போது இரகசியமான முறையில் சீனாவுக்கு நாட்டின் வளம் மிக்க நிலப்பரப்புக்களை விற்று, தற்போதைய இலங்கை ஆட்சியாளர்களான ராஜபக்ச குடும்பம் தங்கள் குடும்ப அரசியல் இலாப நோக்கத்துக்காக தங்களது சொந்த நாட்டு மக்களையே ஏமாற்றிவருவதோடு, இலங்கையின் இறையாண்மையையே மதிக்காது செயற்படுகின்றது.

எமது மக்கள் மிகத் தெளிவாக ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். வட மாகாணத்தில் சீனாவின் ஆக்கிரமிப்பு பலவடிவங்களில் வருகின்றது. தற்போது காங்கேசன்துறை பகுதியில் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பிரதமருமான மகிந்த ராஜபக்சவால் அமைக்கப்பட்ட சுற்றுலா விடுதிக்கான கட்டடத் தொகுதியைச் சீனாவுக்கு விற்கும் இரகசியத் திட்டம் போடப்பட்டுள்ளமை தொடர்பான செய்திகள் வெளிவந்தவண்ணம் உள்ளன.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா என்ற கொடிய நோயின் காரணமாக நாடே முடக்கப்பட்டுள்ள நிலையில் மக்களோ ஏனைய அரசியல் பிரதிநிதிகளோ பெரிய அளவில் வெளியில் இறங்கி வேலைசெய்ய முடியாத சூழலைப் பயன்படுத்தி இந்த அரசு இரகசியமாக தங்களது அரசியலை நகர்த்தி வருகின்றது. மாகாண சபைகள் இல்லாமையாலேயே இவ்வாறான செயற்பாடுகளில் அரசு தன்னிச்சையாகச் செயற்பட முடிகின்றது. மாகாண சபை இருப்பின் அரசால் நேரடியாக இவ்வாறான முடிவுகளை எடுத்துச் செயற்பட முடியாது. இந்திய அரசால் தமிழ் மக்களின் நன்மை கருதி கொண்டுவரப்பட்ட 13ஆம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் மாகாணங்களை ஆட்சிசெய்யும் அதிகாரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

அதனை இல்லலாமல் ஒழிப்பதற்கான செயற்றிட்டங்களையும் இந்த அரசு தென்னிலங்கையில் வைத்துத் திட்டம் தீட்டிக்கொண்டிருக்கின்றது. எமது விடுதலைப் போராட்டத்தில் தலைவர்களின் அன்றைய தீர்க்க தரிசன வார்த்தைகள் இன்று நிரூபணமாகிக் கொண்டுவருகின்றன. எதிர்காலத்தில் சீன ஆதிக்கம் இலங்கையில் தோன்றும், அதுவே சிங்கள மக்கள் மத்தியில் ஒரு எழுச்சியைத் தோற்றுவிக்கும்-என்றுள்ளது. (ப-20)

# ராஜபக்சக்களின் எதேச்சதிகாரத்தால் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை இழப்பு

ஹர்ச டி சில்வா தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 13
ஜனநாயகத்துக்குப் புறம்பான செயற்பாடுகள், நாட்டு மக்களின் உரிமைகளைப் புறக்கணித்தமை மற்றும் தொடர்ச்சியான இராணுவமயமாக்கம் உள்ளிட்ட மோசமான பல செயற்பாடுகளின் விளைவாகவே இப்போது ஐரோப்பிய ஒன்றியத்தால் வழங்கப்பட்டு வந்த ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை இல்லாதுபோயுள்ளது. இதன் விளைவாக எமது பொருளாதாரம் மேலும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலையேற்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கான தீர்மானத்துக்கு ஆதரவாக 628 வாக்குகள் கிடைக்கப் பெற்றுள்ளன. எதிராக வெறுமனே 15 வாக்குகள் கிடைத்திருக்கின்றன. தரவுகளின் அடிப்படையில், ஜனாதிபதியாக மகிந்த இருந்த வேளையில், ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை வழங்கப்பட்டிருக்காத 2011 2016 வரையான காலப் பகுதியில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கான ஏற்றுமதியானது, வெறுமனே 6 சதவீதமாகவே காணப்பட்டது. அவ்வரிச்சலுகை நல்லாட்சி அரசு வந்த பின்னர் வழங்கப்பட்ட காலப் பகுதியில் ஏற்றுமதிகள் 28 சதவீதமாக வளர்ச்சிபெற்றது.



எமது நாட்டுக்கு வழங்கப்படாமல் இருந்த ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை மீளப்பெற்றுக்கொள்வதற்கான பேச்சுக்கு நானே புருசேல்ஸிற்கு சென்றிருந்தேன். அங்குசென்று பேச்சு நடத்தியதன் பின்னர், இலங்கைக்கு ஜி.எஸ். பி. பிளஸ் வரிச்சலுகையை வழங்குவது தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

எமக்கு ஆதரவாக 636 வாக்குகளும் எதிராக 119 வாக்குகளும் பதிவாகின. மக்களின் நலனை முன்னிறுத்தி செயற்படுவோம் என்றே அப்போது நாம் வாக்களித்தோம். அக்காலத்தில் ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் நிலைநாட்டுவதற்கான நல்லாட்சி அரசு என்ற அடிப்படையில் நாம் புதிய சட்டங்களையும் கட்டமைப்புக்களையும் உருவாக்கினோம்.

ஆனால் 2019 ஆம் ஆண்டின் பின்னர் என்ன நடந்தது? தற்போதைய அரசு 20 ஆவது திருத்தத்தை நிறைவேற்றி ஜனநாயகத்தை முழுமையாகப் புறக்கணித்தது. நாடு படிப்படியாக இராணுவ மயமாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த அனைத்து விடயங்கள் தொடர்பிலும் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தில் பேசப்பட்டிருக்கிறது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் ஊடாக அரசு தமது எதிர்ப்பாளர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன என அவர்கள் கரிசனை வெளியிட்டுள்ளனர். ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனின், மக்களின் உரிமைகளைப் புறக்கணிப்பதை அரசு நிறுத்திக்கொள்ள வேண்டும். பிரஜைகளின் சுதந்திரத்தில் தலையீடு செய்வதை நிறுத்தவேண்டும். அதிகாரங்களை ஓரிடத்தில் குவித்து, படிப்படியாக இராணுவ மயமாக்குவதைத் தவிர்க்க வேண்டும். ஆனால் எந்தவொரு சலுகைகளும் வாய்ப்புக்களும் இல்லாமல்போனாலும் பிரச்சினையில்லை. எனினும் எமது கைகளிலேயே அதிகாரம் இருக்கவேண்டும் என்ற எண்ணத்திலேயே அரசு செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. மக்களின் உரிமைகளை நிறைவேற்றும் பட்சத்தில் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை தானாகவே எமக்குக் கிடைக்கும். அந்தச் சலுகை இருப்பதென்பது தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு மீட்சிபெறுவதற்குப் பெரிதும் உதவும்- என்றார். (ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## 'விலையேற கோன் சரிவான்'

*'வரப்புயர நீர் உயரும்*
*நீர் உயர நெல் உயரும்*
*நெல் உயர குடி உயரும்*
*குடி உயர கோன் உயர்வான்'*

ஆட்சி புரிதலைப் பற்றிய ஔவையின் பாடல் வரிகள் இன்றளவும் பொருத்தமானவையாகவே இருக்கின்றன. ஒரு வயலில் வரப்பை உயர்த்த அதன் காரணமாக அந்த வயல் கொள்ளும் நீரின் அளவு அதிகரிக்கும். அப்படி நீர் அதிகமாக கிடைத்தால் நெல்லின் விளைச்சலும் பலமடங்காகப் பெருகி, குடிமக்களின் வாழ்க்கைத்தரம் செழித்தால், அந்த நாட்டு மன்னனின் செல்வமும் புகழும் பெருகும். இதுவே ஔவை சொன்ன ஆட்சி முறைமை. ஆனால், இலங்கைத்திருநாட்டில் வரப்புயர்கிறதோ இல்லையோ, வரிகளும், பொருள்களின் விலைகளும் உயர்ந்து செல்வது பருவம் தப்பாமல் நடந்து வருகின்றது.

ராஜபக்சக்களின் ஆட்சியில் மனித உரிமை மீறல்களும், ஊடக அடக்குமுறைகளும் அதிகரிப்பதைப்போல பொருள்களின் விலைகளும் கிடுகிடுவென ஆர்முடுகுவது சர்வசாதாரணம். இந்த விலையேற்றங்களின்போது, 'சர்வதேச சந்தையில் பொருள்களின் விலை அதிகரித்து விட்டது, டொலரின் பெறுமதி உயர்ந்து விட்டது' என்று சப்பைக் காரணங்கள் கூறப்படுமே தவிர மக்களின் நலன் பற்றி துளியேனும் ராஜபக்சக்களின் அரசாங்கம் அக்கறை கொள்வதில்லை. அதன்பின்னர் குறித்த பொருள்களின் விலை சர்வதேச சந்தையில் கணிசமாக வீழ்ச்சியடைந்தாலும் கூட ஏறிய விலை ஏறியதுதான். என்னதான் கெஞ்சினாலும், ஆர்ப்பாட்டங்கள் செய்தாலும் விலைக் குறைப்பென்பது ராஜபக்சக்களின் அகராதியில் கிடையவே கிடையாது.

இந்த வரிசையில் இப்போது எரிபொருள்களின் விலையை தன்னிஷ்டப்படி ஏற்றியிருக்கிறது இந்த அரசாங்கம். குறிப்பாக பெற்றோலின் விலை 20 ரூபாவால் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. வழக்கம் போல இந்தமுறையும் 'கச்சா எண்ணெய் விலை சர்வதேச சந்தையில் உயர்வு, டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதி சரிவு' என்ற பழைய பல்லவியையே அரசாங்கம் பாடியிருக்கிறது. ஆனால் இப்போது நாடு இருக்கும் அசாதாரண சூழலில் இந்த எரிபொருள் விலையேற்றம் மக்களின் முதுகில் மலையைச் சுமக்கச் செய்வதற்கு சமனானது. ஏற்கனவே கொரோனாப் பேரிடர், பயணத்தடை என்பவற்றால் மக்களின் வருமானம் அடிமட்டத்துக்கு போய்விட்டது. அரசாங்கம் கொடுக்கும் 5000 ரூபாவுக்காக அடிதடி வரை மக்கள் இறங்குவதெல்லாம் அவர்களின் பொருளாதார இயலுமை பூச்சிய மட்டத்துக்கு போனமையாலேயே. இப்படி அரசாங்கம் கொடுக்கும் நிவாரணத்தை வைத்தே வாழ்க்கையை நகர்த்த வேண்டிய ஒரு இக்கட்டான காலத்தில், கொரோனாப் பேரிடரால் வாழ்வா சாவா என மக்கள் அவதியுறுவதும் அந்தரிப்புக் காலத்தில், எரிபொருள்களின் விலை கணிசமானளவு உயர்த்தப்பட்டிருப்பதால் நாட்டு மக்கள் இன்னும் அதிகமான சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய சூழமைவும் உருவாகிவிட்டது.

எரிபொருள் விலையேற்றம் என்பது தனியே போக்குவரத்து கட்டண உயர்வோடு நின்றுவிடப்போவதில்லை. ஏற்கனவே மேலே சொல்லப்பட்ட 'வரப்புயர..' என்ற ஔவையின் பாடலைப் போல ஒரு நிகழ்வின் தொடர்ச்சியாக, அதன் தாக்கமாக இன்னொரு நிகழ்ச்சி, அதன் தொடராக இன்னொரு விளைவு என சங்கிலித்தொடராக பல விலையேற்றங்களை மக்கள் சந்திக்கப்போகிறார்கள். எரிபொருள் விலையேற்றத்தால், தொழிற்சாலைகளின் இயந்திரங்களினூடான உற்பத்திச் செலவும், போக்குவரத்துச் செலவும் உயரும். அதை நிவர்த்தி செய்ய ஒவ்வொரு நிறுவனமும் தத்தம் உற்பத்திகளின் விலையை விரும்பியோ விரும்பாமலோ ஏற்றித்தானாக வேண்டும். ஆகவே தனியே எரிபொருள்தானே விலையேறியிருக்கிறது என வாளாவிருக்க முடியாது. எரிபொருளில் தொடங்கிய விலையேற்றம் கொரோனாக் கொத்தணி போல பரவலடைந்து எல்லாப் பொருள்களையும் விலையேற்றி விட்டே ஓயும். கொரோனாவால் ஒருபுறமும், இந்த விலையேற்றங்களால் இன்னொரு புறமுமாக மக்களின் வாழ்வு சின்னாபின்னப்படப்போகின்றது.

எந்தச் செயலைச் செய்தாலும் காலப்பொருத்தம் அறிந்து செய்ய வேண்டும். நாட்டையும், மக்களையும் பற்றி சிந்திக்காமல் தங்கள் அதிகாரத்தை பயன்படுத்தி இன்னுமின்னுமாக மக்களை வதைப்பதென்பது நல்ல ஆட்சியாளர்களுக்கு அழகல்ல. இந்த விலையேற்றங்களால் மக்களை வதைத்தால், தமக்கான காலம் வரும்போது அதிகாரத் தரப்பில் உள்ளோருக்கு அதே மக்கள் தக்க பாடம் புகட்டவும் தயங்கமாட்டார்கள் என்பதை ஆட்சியாளர்கள் உணர்வது அவசியம். ஆனால் அதை உணராமல், எரிபொருள் விலையேற்றத்துக்கு தனியே அமைச்சர் உதய கம்மன்பில மட்டுமே காரணமென்று அவர்மீது பழி போட்டு, தனியொரு நபரை பலிக்கடாவாக்கிவிட்டு, தப்பிக்க நினைக்கிறது ஆளும் கட்சி. **எல்லா நாடகங்களும் மக்களுக்கு பரிச்சயமானவை என்பதால், அடுத்த தேர்தலில் மறக்கமுடியாத பாடத்தை மக்கள் புகட்டுவர் என்பது நிச்சயம்.**

**'விலையேற கோன் சரிவான்'**




# கொரோனாத் தொற்றால் மேலும் 62 பேர் உயிரிழப்பு

## மொத்தச் சாவு எண்ணிக்கை 2,073

**கொழும்பு, ஜூன் 13**

**நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 62 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளது.**



அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி சாவடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 73 ஆக அதிகரித்துள்ளது. நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்ட குறித்த 62 சாவுகளில் 7 சாவுகள் மே மாதம் 8 ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரையும், ஏனையவை ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் 10ஆம் திகதி வரையிலும் இடம்பெற்றுள்ளன. குறித்த காலப்பகுதியில் 35 ஆண்களும், 27 பெண்களும் உயிரிழந்துள்ளனர் என்றும் அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ப-22)

# நிகழ்வுகள் நடக்கின்றனவா? 119க்கு உடன் முறையிடுங்கள்

## பொலிஸ் பேச்சாளர் மக்களிம் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 13

"தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு சட்டவிதிகளுக்கு புறம்பாக விருந்துபசாரங்கள் மற்றும் கொண்டாட்ட நிகழ்வுகள் போன்றவை நடைபெற்றால் அவை தொடர்பில் 119 என்ற பொலிஸ் அவசர தகவல் பிரிவுக்கு அல்லது அருகில் இருக்கும் பொலிஸ் நிலையத்துக்கு தெரியப்படுத்துங்கள்" என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

போக்குவரத்து கட்டுப்பாடு எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை வரை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில், இந்த காலப்பகுதியில் மக்கள் ஒன்றுக்கூடுவது மற்றும் விருந்துபசார கொண்டாட்டங்களில் ஈடுபடுவது போன்றவை தடை செய்யப்பட்டுள்ளன.

நாடு முழுவதும் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கு புறம்பாக செயற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில், பலர் கைதுசெய்யப்படுகின்றனர்.

அதற்கமைய, கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி தொடக்கம் **இதுவரையில் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கு புறம்பாக செயற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் 30 ஆயிரத்து 42 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.**

**இதேவேளை, [illegible]த்தின் எல்லைப் [illegible]ப்பட்டுள்ள 14 சோத**



னைச் சாவடிகளில் முன்னெடுக்கப்படும் சோதனை நடவடிக்கைகளின்போது, ஆயிரத்து 24 வாகனங்களில் பயணித்த 3 ஆயிரத்து 153 பேர் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதன்போது எவ்வித தேவையும் இன்றி வருகை தந்திருந்த 60 வாகனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் பயணித்த 91 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து செயற்பாடுகள் வழமை போன்றே நிறுத்தப்பட்டுள்ளன. பொதுப் போக்குவரத்து செயற்பாடுகளும் இடம்பெறமாட்டாது.

மருந்தகங்களைத் தவிர ஏனைய வர்த்தக நிலையங்கள் திறக்கப்படமாட்டா. பொருள் விநியோக நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெறும். அதற்கமைய விநியோக நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் தொடர்ந்தும் தங்களது சேவையைத் தொடர முடியும்.

**இதேவேளை, அத்தியாவசிய சேவைகளை எவ்வித தடையுமின்றி தொடர்ந்தும் முன்னெடுக்க முடியும். ஏனையவர்கள் தேவையின்றி வீட்டைவிட்டு வெளியேறுவதைத் தவிர்த்து வீடுகளில் இருப்பதே சிறந்தது - என்றார்.**

**(த-இ)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய இயல்புநிலைக்கு மக்கள் இசைவாக்கமடைந்திருக்கிறார்கள்

## பொருளாதாரப் பாதிப்பு தொடர்பில் சுட்டிக்காட்டுகின்றார் மத்திய வங்கி ஆளுநர்

**கொழும்பு, ஜூன் 13**

**கொரோனா வைரஸ் பரவல் காரணமாக கடந்த காலத்தில் நாட்டின் பொருளாதாரம் பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருந்தாலும்கூட, தற்போது புதிய இயல்புநிலை ('நியூ நோர்மல்') அடிப்படையில் தமது செயற்பாடுகளை முன்னெடுத்துச்செல்லும் அளவுக்கு பொதுமக்கள் இசைவாக்கமடைந்திருக்கிறார்கள். எனவே கடந்த ஏப்ரல் மாதத்தில் ஆரம்பமான கொரோனா வைரஸ் பரவலின் மூன்றாவது அலையால் பொருளாதாரத்துக்குப் பல்வேறு தாக்கங்கள் ஏற்பட்டபோதிலும், இந்த வருட இறுதியில் பொருளாதார வளர்ச்சியை 5 - 6 சதவீதம் வரையில் பேணுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.**

இவ்வாறு தெரிவித்துள்ளார், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் டபிள்யூ.டி. லக்ஸ்மன்.

அதுமாத்திரமன்றி சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து தொழில்நுட்ப உதவிகள் மற்றும் ஆலோசனைகளைப் பெறல் ஆகியவை தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. எனினும், அவர்களது நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு கடன்பெறுவது குறித்து இதுவரையில் அரசு கலந்துரையாடல் நடத்தவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவல், வெள்ளப்பெருக்கு, எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் இடர் உள்ளிட்ட பல்வேறு நெருக்கடிகளுக்கு இலங்கை முகங்கொடுத்திருக்கும் நிலையில் நாட்டின் தற்போதைய பொருளாதாரநிலை தொடர்பில் ஆராயும் நோக்கிலான கலந்துரையாடலொன்று நேற்றுமுன்தினம் அரச தகவல் திணைக்களத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆய்வுப்பிரிவின் பணிப்பாளர் கலாநிதி சந்ரநாத் அமரசேகர ஆகியோர் பல்வேறு விடயங்களைப் பகிர்ந்துகொண்டனர்.

### உற்பத்தி வீழ்ச்சி கட்டுப்பாட்டில்

2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நாட்டில் பரவத் தொடங்கிய கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக பொருளாதாரத்துடன் தொடர்புடைய பொதுமக்களின் நடவடிக்கைகளும் மட்டுப்படுத்தப்பட்டன. வைரஸ் பரவலின் முதல் காலரையாண்டில் பொருளாதாரம் வெகுவாக வீழ்ச்சிகண்டது. அதனை ஓரளவுக்கு மீட்டெடுத்தபோதிலும், மீண்டும் ஏற்பட்ட கொரோனா வைரஸ் பரவலின் இரண்டாவது அலை காரணமாக பெரும் நெருக்கடிகள் ஏற்பட்டன. அவ்வாறிருப்பினும்கூட ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் மொத்தத் தேசிய உற்பத்தியின் வீழ்ச்சியை ஓரளவுக்கு கட்டுப்படுத்த முடிந்தது.

ஆனால் கடந்த ஏப்ரல் மாதம் ஆரம்பமான கொரோனா வைரஸ் பரவலின் மூன்றாவது அலை காரணமாக மீண்டும் பொருளாதாரம் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. ஆனால் இந்த வருட முடிவில் 5-6 சதவீதம் வரையில் பொருளாதாரம் வளர்ச்சியடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### விலை அதிகரிக்கும்

கொரோனா வைரஸ் பரவல், காலநிலை மாற்றங்கள் உள்ளிட்டவற்றின் காரணமாக உற்பத்திகளின் விலைகளில் அதிகரிப்பொன்று ஏற்படும் நிலை காணப்படுகின்றது. அவ்வாறிருப்பினும் கடந்த காலத்தில் பணவீக்கநிலையை 10 சதவீதத்துக்குள் பேணமுடிந்தது.

உணவுப்பொருள்கள் தொடர்பான பணவீக்கம் அதிகரிப்பினும் உணவல்லாப் பணவீக்கம் நிலையான மட்டத்தில் பேணப்படும். எது எவ்வாறெனினும், 2021 ஆம் ஆண்டுக்கான மொத்தக்கேள்வியில் பெருமளவுக்கு மாற்றமேற்படாது என்றே கணிக்கப்படுகின்றது. ஆகவே நிரம்பலும் பணவீக்கமும் மாற்றமின்றிப் பேணப்படும். இறக்குமதிக்கான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளமையால் உள்நாட்டு உணவுற்பத்திகள் அதிகரித்துள்ளன. இதனூடாகவும் பணவீக்கத்தை ஓரளவுக்கு கட்டுப்படுத்த முடியும்.

### ரூபாவின் பெறுமதி

ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சியடையாமல் பேணுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எனினும், அது தொடர்ந்தும் நிலையாகப் பேணப்படும் என்று உறுதியாகக் கூறுவது கடினம். எதிர்வரும் காலங்களில் கொழும்பு துறைமுகநகரத்தில் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் அதிகரிக்கும்போது அந்நியச் செலாவணி அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### புதிய திட்டம் தேவை

பயணக் கட்டுப்பாடு மற்றும் பொருளாதாரப் பாதிப்பு ஆகிய இரண்டு பிரச்சினைகளுக்கும் இடையிலான, நடைமுறைக்குச் சாத்தியமான தீர்வொன்றை அடையாளங்காணவேண்டும். கடந்த 2020 ஆம் ஆண்டில் நாட்டை முழுமையாக முடக்கியதால் பெரும் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டது. அதனைத் தவிர்ப்பதற்காகவே இந்தமுறை முழுமையாக முடக்காமல் அதிதீவிர பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. ஆகவே பொருளாதாரத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தாத, பொதுமக்களின் சுகாதார நலன் மற்றும் வாழ்வாதாரம் ஆகியவற்றுக்கும் பாதிப்பையேற்படுத்தாத செயற்றிட்டமொன்றையே தற்போது நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது - என்றார். (த-இ)

## பயணக் கட்டுப்பாட்டின் பலனை ஓரிரு வாரங்களில் உணரலாம்!




கொழும்பு, ஜூன் 13

"பயணக் கட்டுப்பாட்டால் எவ்வித பயனும் இல்லை எனக் கூறமுடியாது. இன்னும் ஓரிரு வாரங்களில் அதன் பயனை உணரக்கூடியதாக இருக்கும்" என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவர் ஹேமந்த ஹேரத் நேற்று தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் பயணக் கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு முன்னர் நாளாந்தம் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. ஒரு நாளில் ஒரு தொகை இருந்தால் அதைவிடவும் அதிகமானதொரு தொகையே மறுநாள் இனங்காணப்பட்டது. எனினும், பயணக் கட்டுப்பாடுகளின் பின்னர் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. கூடுதலான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டாலும் எண்ணிக்கை என்பது சமமட்டத்தில் உள்ளது. எனவே, பயணத்தடையால் பயன் இல்லை எனக் கூறமுடியாது. இன்னும் இரு வாரங்களில் அதன் பயனை அறியக்கூடியதாக இருக்கும்.

அத்துடன், பயணத்தடையை கட்டம் கட்டமாகவே தளர்த்த வேண்டும். பயணக்கட்டுப்பாடுகளை முழுமையாக மறந்து ஒன்றுகூடும் வகையில் மக்கள் செயற்பட்டால் மீண்டும் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும். எனவே, சுகாதார நடைமுறைகள் முழுமையாகப் பின்பற்றப்பட வேண்டும் - என்றார். (த-44)

## பயணக் கட்டுப்பாட்டை இன்னும் கடுமையாக்கவும்

### மருத்துவ சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 13

நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாடுகளை கடுமையாக்கும்படி இலங்கை மருத்துவ நிபுணர்கள் சங்கம் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்படாவிட்டால் தினசரி நோய்த்தொற்றுகள் மற்றும் இறப்புகளின் எண்ணிக்கை குறைவடையும் என்று எதிர்பார்க்க முடியாது.

ஒரு நிறுவனம், அலுவலகங்களுக்கு ஒரு குறிப்பிட்ட நாளில் வரவழைக்கக்கூடிய ஊழியர்களின் எண்ணிக்கையில் மேலும் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும், வீதிகளில் சுற்றும் நபர்களின் எண்ணிக்கையைக் குறைக்கவும், உணவு மற்றும் பிற அத்தியாவசிய விநியோக சேவைகளை விரிவுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். தொற்று வீதத்தைக் குறைப்பதில் பொதுமக்களின் ஆதரவும் மிக முக்கியமானது. - என்று சங்கத்தின் தலைவர் மருத்துவர் லக்குமார் பெர்னாண்டோ தெரிவித்தார். (த-இ)

## கற்குழியில் 97 பேருக்கு எழுமாறாக பி.சி.ஆர்

வவுனியா, ஜூன் 13

வவுனியா, கற்குழிப் பகுதியில் சுகாதாரப் பிரிவினரால், எழுமாறாக 97 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

வவுனியாவில் கொவிட் தொற்று அதிகரித்து வரும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்த சுகாதாரப் பிரிவினர் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். அதன் ஒரு கட்டமாக வவுனியா நகர கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட கற்குழிப் பகுதியில் பொலிஸாரும், சுகாதாரப் பிரிவினரும் இணைந்து எழுமாறாக பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுத்திருந்தனர். அத்தியாவசிய தேவை கருதி, பாஸ் அனுமதி பெற்று வீதியால் பயணித்தவர்கள், தேவையற்ற வகையில் கற்குழி கிராமத்தில் நடமாடியவர்கள், வீடுகளில் இருந்தோர் என பலரும் பொலிஸாரால் வரவழைக்கப்பட்டு சுகாதாரப் பிரிவினரால் அவர்களது விவரங்கள் பதியப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டிருந்தது. கற்குழியின் மூன்று பகுதிகளில் 97 பேர் இதன்போது பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இதேவேளை, பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளைப் பொறுத்து அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து தீர்மானிக்கப்படும் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (ப-8)

## கட்டுப்பாடுப் நீடிப்பை வரவேற்கும் சுகாதார பரிசோதகர் சங்கம்

கொழும்பு, ஜூன் 13

நாட்டில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த பயணக் கட்டுப்பாடுகளை நீடிக்க அரசு எடுத்துள்ள முடிவை வரவேற்கிறோம் என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள அந்தச் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண, போக்குவரத்து கட்டுப்பாடுகளை கடுமையாக நடைமுறைப்படுத்துவது அவசியம் என்றும் சுட்டிக்காட்டினார்.

மேலும் பயணக் கட்டுப்பாடுகளின்போது அத்தியாவசிய உணவுப் பொருள்களை விற்பனை செய்யும் விற்பனையாளர்களின் உடல்நலம் குறித்து அரசு மேலதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டென்மார்க்கின் நட்சத்திர வீரர்

# எரிக்சன் படுகாயம் ஆட்டம் நிறுத்தம்!!

## மூளையில் குருதிக்கசிவு என சந்தேகம்





உரோம், ஜூன் 13

யூரோ கிண்ணத் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் டென்மார்க் வீரர் கிறிஸ்ரியன் எரிக்சன் படுகாயமடைந்தார். இதையடுத்து ஆட்டம் நிறுத்தப்பட்டது.

நேற்று இரவு 9.30 மணிக்கு ஆரம்பமான ஆட்டத்தில் டென்மார்க் மற்றும் பின்லாந்து அணிகள் மோதின. ஆட்டத்தின் 28ஆவது நிமிடத்தில் பந்தை எதிர்கொண்ட (த்ரோ) எரிக்சன் சற்றுநேரம் நடந்து சென்று நிலைநடுமாறி விழுந்தார். இதையடுத்து அவருக்கு சுமார் 20 நிமிடங்கள் மைதானத்தில் வைத்து சிகிச்சை வழங்கப்பட்டது. பின்னர் எரிக்சன் அம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். மூளையில் குருதிக் கசிவு ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. எரிக்சனுக்கு சிகிச்சை வழங்கப்பட்டபோது சக வீரர்கள் அவரைச் சுற்றி அரண் போன்று நின்றனர். பெருமளவான வீரர்கள் கண்ணீர் சிந்தினர். நேற்று நள்ளிரவு வரை எரிக்சன் தொடர்பான மருத்துவமனை அறிக்கைகள் எவையும் வெளிவரவில்லை. (ம)



# துருக்கியை துவைத்தது இத்தாலி!

உரோம், ஜூன் 13

யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் துருக்கியை வீழ்த்தி இலகுவான வெற்றிபெற்றது இத்தாலி.

இந்த ஆட்டத்தின் முதல் பாதியில் இத்தாலிக்கு ஈடுகொடுத்து விளையாடியது துருக்கி.

ஆனால், இந்தப் போராட்டத்தை துருக்கியால் நீடிக்க முடியவில்லை. இரண்டாவது பாதியின் 53ஆவது நிமிடத்தில் இத்தாலி வீரர் லொறின்ஸோ உதைந்த பந்து துருக்கி வீரரான மெரிச் டெம்ரலின் தோள் பட்டையில் பட்டுத் தெறித்து கோலாக (ஒன்கோல்) மாறியது.

அதன் பின்னர் இம்மொலி 66ஆவது நிமிடத்திலும், லொறின்சோ 79ஆவது நிமிடத்திலும் கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் இத்தாலி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வென்றது. (ம)

# யூரோ கிண்ணத் தொடர் ரசிகர்களுக்கு அனுமதி!

உரோம், ஜூன் 13

யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர் உரோமில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. இந்தத் தொடரில் ரசிகர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் நடைபெற வேண்டிய இந்தத் தொடர் கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாகப் பிற்போடப்பட்டு இந்த வருடம் நடைபெறுகின்றது. இத்தாலியில் கொரோனா கட்டுக்குள் கொண்டுவரப்பட்டதால் ரசிகர்கள் மைதானத்துக்குள் அனுமதிக்கப்படுவார்களா என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு இருந்தது. இந்த நிலையில் ரசிகர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ம)



யூரோ கிண்ணத் தொடர் இத்தாலியில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. இந்தத் தொடருக்கான பந்து அதற்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட காரில் வைத்து மைதானத்துக்குள் கொண்டுவரப்பட்டது. இது பார்வையாளர்களை மிகவும் கவர்ந்தது. (ம)



# சகிப் அல் ஹசனுக்கு குவிகிறது கண்டனம்!

டாக்கா, ஜூன் 13

பங்களாதேஷ் பிறீமியர் லீக் தொடரில் நடுவருக்கு எதிராக வாக்குவாதம் செய்தமை, நடுவரை மிரட்டும் வகையில் நடந்துகொண்டமை, விக்கெட்டுக்களைத் தாக்கியமை உள்ளிட்ட குற்றங்களுக்காக சகிப் அல் ஹசனுக்குக் கண்டனங்கள் குவிந்து வருகின்றன. பங்களாதேஷ் பீறிமியர் லீக் தொடர் தற்போது நடைபெற்று வருகின்றது. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தின்போது சகிப் அல் ஹசன் வீசிய பந்து துடுப்பாட்ட வீரரின் கால்காப்பைத் தாக்கியது. இதையடுத்து ஹசிப் அல் ஹசன் ஆட்டமிழப்புக் கோரிக்கை விடுத்தார். நடுவர் ஆட்டமிழப்பு அல்ல என்று அறிவித்ததை அடுத்து சகிப் அல் ஹசன் இலக்குகளைத் தாக்கியதுடன் நடுவரை எச்சரிக்கும் வகையில் நடந்துகொண்டார். அதன் பின்னர் மழை காரணமாக ஆட்டம் நிறுத்தப்பட்டது.

ஆனால் ஆட்டத்தை தொடர்ந்து நடத்தலாம் என்றுகூறி சகிப் அல் ஹசன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன் விக்கெட்டுக்களை பிடுங்கி வீசியெறிந்தார். இந்தக் குற்றங்களுக்காகவே அவருக்கு வலுவான கண்டனங்கள் பதிவாகியுள்ளன. (ம)



இத்தாலியின் வெற்றியை கொண்டாடித் தீர்க்கும் ரசிகர்கள்.

# சகிப் அல் ஹசனுக்குத் தடை!

டாக்கா, ஜூன் 13

மைதானத்தில் முறைதவறி நடந்துகொண்டமைக்காக சகிப் அல் ஹசனுக்கு மூன்று ஆட்டங்களில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சகிப் அல் ஹசன் மீது மைதான நடுவர்கள் முறைப்பாடு வழங்கியதை அடுத்து அது தொடர்பில் பங்களாதேஷ் கிரிக்கெட் சபை விசாரணை நடத்தியுள்ளது.

தன் தவறுக்கு சகிப் அல் ஹசன் வருத்தம் தெரிவித்ததை அடுத்து அவருக்கு கடும் எச்சரிக்கை வழங்கப்பட்டுள்ளதுடன் மூன்று ஆட்டங்களில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்த போன்று ரணிலால் மீள எழுச்சிபெற முடியாது

## சபையில் ஆளும் தரப்புக்கு ஆதரவளித்து குழப்பத்தை ஏற்படுத்தவே அவர் சரிப்படுவார்



கொழும்பு, ஜூன் 13

ஜனாதிபதி தேர்தலில் தோல்வி கண்டதன் பின்னர் மஹிந்த ராஜபக்ச மீண்டும் அரசியலில் எழுச்சி பெற்றது போன்று, ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைத்துள்ள தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றைப் பிரதிநிதித்துவப்படுத்தவுள்ள அந்தக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவால் மீள் எழுச்சி அடைய முடியாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் வெளியுறவுகளுக்கான சிரேஷ்ட ஆலோசகரும், இராஜதந்திரியுமான கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைத்த ஒரேயொரு தேசியப் பட்டியலுக்கான உறுப்பினராக அதன் தலைவர் ரணில் விக்கிரமங்க எதிர்வரும் 22ஆம் திகதி பதவியேற்கவுள்ளார். இந்த நிலையில் அவரது வருகையால் தற்போது பிரதான எதிர்க்கட்சியாக இருக்கும் ஐக்கிய மக்கள் சக்தியிடையே குழப்பமான நிலைமைகள் தோன்றியுள்ளன என்று தகவல்கள் வெளிவந்த வண்முள்ளன. இந்நிலையில், கருத்து வெளியிடுகையிலேயே தயான் ஜயதிலக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை இலங்கையின் ஒட்டுமொத்த மக்களும் நிராகரித்திருந்தனர். அதுமட்டுமன்றி, ஐ.தே.க.வின் கோட்டையென்று கூறப்படும் கொழும்பில், அம்பாந்தோட்டையில் இருந்து வருகைதந்து போட்டியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசவை மக்கள் வெற்றிபெறச் செய்தனர். இந்தச் செயற்பாடானது ஐ.தே.கவையும், கொழும்பில் போட்டியிட்ட அதன் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவையும் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதே பொருளாகும்.

அவ்வாறு மக்களால் நிராகரிக்கப்பட்டு, மக்கள் மத்தியிலான பிரபல்யத்தைக் கொண்டிருக்காத ஒருவர் நாடாளுமன்றுக்கு மீண்டும் வருகை தருவதால் சாதிக்கப்போவது ஏதுமில்லை. இவ்வாறானவரால், ஜனாதிபதி தேர்தல் தோல்வியின் பின்னர் தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ச மீண்டும் அரசியலில் பிரபல்யம் அடைந்த எழுச்சியைப் போன்று எழுந்து நிற்க முடியாது. அதற்கான எந்தவொரு சந்தர்ப்பங்களும் கிடைக்கப்போவதில்லை.

இந்தநிலையில், ரணிலின் நாடாளுமன்ற வருகையானது எந்தவொரு வகையிலும் தாக்கம் நிறைந்ததாக இருக்கப்போவதில்லை. வெறுமனே சபை அமர்வுகளில் ஆளும் தரப்பு அவரைப் பயன்படுத்தி குழப்பங்களை தோற்றுவிப்பதற்கு மட்டுமே வழிவகுக்கப்போகின்றது.

மேலும், இவரது வருகையால் எதிர்க்கட்சியினுள் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது. ஆனால் அவ்வாறு குழப்பமடைய வேண்டிய எந்த அவசியமும் எதிர்க்கட்சிக்கு இல்லை.

மேலும், ரணிலின் நிலைமையானது இவற்றுக்கு முற்றிலும் எதிரானதாக உள்ளது. அவரால் தனி நபராக எதனையும் சாதிக்க முடியாது. **மக்கள் நிராகரித்த பின்னரும் அவர் மீண்டும் நாடாளுமன்றம் வருகின்றமையானது வெட்கப்பட வேண்டியதொன்றாகும் - என்றார்.**

(த-இ)

# பெண்கள் வாழ்வதற்கு ஆபத்தான நாடாகவுள்ளோம்

## வெட்கப்படவேண்டும் என்கிறார் அமைச்சர் சரத் வீரசேகர



**கொழும்பு, ஜூன் 13**

**இலங்கையில் பெண்கள் வாழ்வதற்கு பாதுகாப்பான நாடாக இலங்கை இல்லை. இதனை எண்ணி நாம் வெட்கப்பட வேண்டும். இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**

கொழும்பு முகத்துவாரம் பகுதியில் அமைந்துள்ள தொடர்மாடி குடியிருப்பில் புதிதாக நிறுவப்பட்டுள்ள பொலிஸ் நிலையக் கட்டடத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போது மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டில் பாதுகாப்பான சூழல் இல்லை என்பதன் காரணமாகவே ஜனாதிபதி எனது அமைச்சை உருவாக்கி அமைச்சராக என்னை நியமித்துள்ளார். பாதுகாப்பான சூழலை உருவாக்கிக் கொடுக்க வேண்டியது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் எனது பொறுப்பாகும்.

இலங்கையை பொறுத்தமட்டில் இளம் பெண் உட்பட சிறுமி ஒருவர் கூட அச்சமின்றி செல்லக்கூடிய சூழல் இல்லை. இதனை எண்ணி நாம் அனைவரும் வெட்கமடைய வேண்டும். பாதாளக் குழுக்கள், கப்பம் பெறுபவர்கள், போதைப் பொருள் கடத்தல்காரர்கள் உள்ளிட்ட குற்றச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் நாட்டில் இருக்கும் வரையில் பாதுகாப்பான சமூகத்தை உருவாக்க முடியாது. அவர்களை நாட்டிலிருந்து ஒழிக்க வேண்டும் - என்றார். (ஐ)

# பினான்ஸ், லீசிங் நிறுவனங்களிடம் கடன்பெற்றோருக்கான அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 13

கொரோனாத் தொற்றுக் காரணமாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் (பினான்ஸ்) மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகளின் (லீசிங்) கடன்பெறுநர்கள் எதிர்கொண்டுள்ள இன்னல்களைப் பரிசீலனையில் கொண்டு, இலங்கை மத்திய வங்கியானது கொரோனாவால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்குமான சலுகைகளை வழங்குமாறு வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களைக் கோரியுள்ளது.

### செயற்படுகின்ற கொடுகடன் வசதிகளுக்காக வழங்கப்பட்டுள்ள சலுகைகள்

கடந்த மே 15 திகதி அன்று செயற்படுகின்ற வகையினுள் காணப்படுகின்ற கொடுகடன் வசதிகள் தொடர்பில், தகைமையுடைய கடன்பெறுநர்களின் நிதிசார்ந்த இன்னல்களைக் கருத்திற்கொண்டு (தொழில் இழப்பு, வருமானம் சம்பளங்கள் அல்லது விற்பனைகள் இழப்பு அல்லது குறைவு, வியாபாரத்தை மூடுதல் போன்ற) எதிர்வரும் ஓகஸ்ட் 31 வரையான காலப்பகுதியின்போது விடயத்துக்கு விடயம் என்ற அடிப்படையில் மூலதனம், வட்டி அல்லது இரண்டினதும் அறவீட்டைப் பிற்போடுதல்.

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், பிற்போடப்பட்ட தொகைமீது மாத்திரம் அத்துடன் பிற்போடப்பட்ட காலப்பகுதிக்காக கடந்த மே 19ஆம் **திகதி அன்று உள்ளவாறான 364 நாள்கள் திறைசேரி உண்டியல்கள் ஏல வீதத்துடன் ஆண்டுக்கு 5.5 சதவீதத்தைக் கூட்டிய வீதத்தை (அதாவது, ஆண்டுக்கு 10.68 சதவீதம்) [illegible] வட்டி வீதத்தை அற**விடலாம்.

மாற்றுவழியாக, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், கடன் பெறுநரின் மீள்கொடுப்பனவு இயலளவையும் அத்தகைய கடன் பெறுநர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஏற்றுக்கொள்ளத்தக்க மீளெழுச்சித் திட்டத்தையும் கருத்திற்கொண்டு ஏற்கனவே காணப்படுகின்ற கொடுகடன் வசதிகளை நீண்ட காலப்பகுதி ஒன்றுக்காக மறுசீரமைக்கலாம்.

### செயற்படாக் கொடுகடன் வசதிகளுக்காக வழங்கப்பட்டுள்ள சலுகைகள்

கடந்த மே 15 திகதி அன்று செயற்படா வகையிலுள்ள கொடுகடன் வசதிகளை கடன்பெறுநரின் மீள்கொடுப்பனவு இயலளவையும் ஏற்றுக்கொள்ளத்தக்க மீளெழுச்சித் திட்டத்தையும் கருத்திற்கொண்டு நீண்ட காலப்பகுதி ஒன்றுக்காக மீள் அட்டவணைப்படுத்தல்.

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், கடந்த ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி அன்று அல்லது அதற்குப் பின்னர் செயற்பாடற்றவையாக வகைப்படுத்தப்பட்டுள்ள கொடுகடன் வசதிகளுக்கு எதிரான அனைத்து அறவீட்டு நடவடிக்கைகளையும் இடைநிறுத்தல் வேண்டும்.

### ஏனைய சலுகைகள்

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், வெளிப்படையாகப் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்காக எதிர்வரும் ஜூன் 30 வரையான காலப்பகுதி **யின்போது கடன் அட்டைகள் அத்துடன் வேறு கொடுகடன் வசதிகள் மீதான தாமதக் கொடுப்பனவுக் கட்டணத்தை நிறுத்தல் வேண்டும். தற்போது முன்னெடுக்கப்படுகின்ற பயணத்தடைகள் காரணமாகப்** பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களிடம் இருந்து கடன் மீள்கொடுப்பனவுகளை ஒரு சில நாள்களால் (உயர்ந்தபட்சம் 10 வேலை நாள்கள்) தாமதிக்குமாறு விடுக்கப்படும் கோரிக்கைகளை அத்தகைய தாமதத்துக்கு ஏதேனும் மேலதிக வட்டியை அல்லது வேறு கட்டணங்களை அறவிடாது பரிசீலனையிற்கொள்ளுதல்.

தற்போது காணப்படும் கொடுகடன் வசதியை வசதிகளை பிற்போடுவதற்கான அல்லது மறுசீரமைப்பதற்கான தெரிவுக்குப் பதிலாக எதிர்வரும் ஓகஸ்ட் 31 அன்று அல்லது அதற்கு முன்னர் அவர்களது தற்போதைய கொடுகடன் வசதிகளைத் தீர்ப்பனவு செய்வதற்கு கடன் பெறுநர் ஒருவர் அவரது விருப்பத்தை வெளிப்படுத்துகின்ற விடத்து வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், தகைமையுடைய கடன் பெறுநர்களிடம் இருந்து ஏதேனும் முன்கூட்டிய தீர்ப்பனவுக் கட்டணத்தை அறிவிடலாகாது.

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் கொடுகடன் தகவல் பணியகத்தின் பாதகமான பதிவை மாத்திரம் அடிப்படையாகக்கொண்டு இத் திட்டத்தின் கீழ் தகைமையுடைய கடன் பெறுநர்களிடமிருந்து கிடைக்கும் கடன் விண்ணப்பங்களை நிராகரித்தலாகாது.

சலுகைத் திட்டத்துக்கு விண்ணப்பிக்க விரும்புகின்ற தகைமையுடைய கடன்பெறுநர்கள், எதிர்வரும் ஜூலை 15 அன்று அல்லது **அதற்கு முன்னர் வங்கியல்லா நிதியியல் நிறு வனங்களின் தொடர்புடைய கிளைக்கு எழுத்தில் அல்லது இலத்திரனியல் வாயிலாக கோரிக்கை ஒன்றை முன்வைப்பதற்கு வேண்டப்படுகின்றனர்.**

(ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் கைதானோரில் முல்லைத்தீவுவாசிகள் அதிகம்

**முல்லைத்தீவு, ஜூன் 13**
**முல்லைத்தீவு சிலாவத்தையைச் சேர்ந்த 29 பேர் உள்ளிட்ட 68 பேர் இந்தியாவில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.**

வடக்கு, கிழக்கு மாவட்டங்களில் இருந்து கடல்வழியாகப் பலர் இந்தியாவின் தமிழகத்துக்குச் சென்றுள்ளனர். இவ்வாறு சென்றவர்களில் இதுவரை 68 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மறைந்துள்ள பலரை தேடிக்கண்டு பிடிக்கும் நடவடிக்கையில் தமிழகத்தின் கியூ பிரிவு பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

நாட்டில் கொரோனா நெருக்கடி கெடுபிடிகளுக்கு மத்தியில் இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக படகுமூலம் இந்தியாவுக்கு நுழைந்த இலங்கையர்கள் இரண்டரை மாதங்களுக்குப் பின்னர் கர்நாடகத்திலும், தமிழ்நாட்டிலும் வைத்து இந்தியப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இன்னும் பலர் மறைந்துள்ளனர் என்று பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளதைத் தொடர்ந்து இரு மாநிலங்களைச் சேர்ந்த பொலிஸாரும் நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள். கர்நாடக மாநிலத்தில் 38 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், தமிழ்நாடு மதுரையில் 27 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதில் 29 பேர் முல்லைத்தீவு சிலாவத்தைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் ஏனையவர்கள் யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ப-19)



## 15 மோட்டார் குண்டுகள் சாலைப் பகுதியில் மீட்பு

முல்லைத்தீவு, ஜூன் 13
முல்லைத்தீவு சாலை பற்றைக்காட்டுப் பகுதியில் போரின் போது கைவிடப்பட்ட 15 மோட்டார் குண்டுகள் சிறப்பு அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டுள்ளன.


கிளிநொச்சி சிறப்பு அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய நேற்றுமுன்தினம் அந்தக் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

60 மில்லிமீற்றர் மோட்டார் குண்டுகள் 14 மற்றும் 81 மில்லிமீற்றர் மோட்டார் குண்டு ஒன்று, அதற்குரிய வூஸ்டர் ஆகியவையே மீட்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட வெடிபொருள்கள் தொடர்பில், கிளிநொச்சி சிறப்பு அதிரடிப்படையினரால் புதுக்குடி யிருப்பு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. புதுக்குடியிருப்பு பொலிஸார் நீதிமன்றில் வழக்குப் பதிவுசெய்து குண்டுகளை செயலிழக்கச் செய்வதற்கான உத்தரவு பெறும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர். (ப-19,113)

## கொரோனாவை விரட்ட சுன்னாகத்தில் வழிபாடு

சுன்னாகம், ஜூன் 13
உலகெங்கும் வாழ்கின்ற மக்கள் அனைவரும் கொரோனாத் தொற்றிலிருந்து விடுபட வேண்டி யாழ்ப்பாணம் சுன்னாகம் மயிலணி திருக்குடவாயில் ஸ்ரீ விஸ்வநாதசுவாமி ஆலயத்தில் நாளை திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு சிறப்பு வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

பூசை வழிபாடுகளின் நிறைவில் ஆலயத்தின் முதன்மைக் குரு சிவஸ்ரீ சோ.சந்திரசேகரக் குருக்களின் அருளாசி உரையும், வேதபாராணமும் நடைபெறவுள்ளன. (ஐ)



## வவுனியாவில் 44 தொற்றாளர்கள் அடையாளம்

வவுனியா,ஜூன் 13
வவுனியா மாவட்டத்தில் சகாயமாதாபுரத்தில் 29 பேர் உள்ளிட்ட 44 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். வவுனியாவில் அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களுடன் பழகியவர்கள் மற்றும் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டவர்கள் உள்ளிட்டவர்களின் பி.சி.ஆர்.பரிசோதனை முடிவுகள் நேற்றுமுன்தினம் வெளியாகின.

இதில் சகாயமாதாபுரம் பகுதியில் 29 பேருக்கும், திருநாவற்குளம் பகுதியில் 8 பேருக்கும், மகாஇலுப்பைக்குளம் பகுதியில் ஒருவருக்கும், குருமன்காடு பகுதியில் ஒருவருக்கும், இறம்பைக்குளம் பகுதியில் ஒருவருக்கும், வவுனியா சிறைச்சாலையில் கைதி ஒருவருக்கும், தாலிக்குளம் பகுதியில் பொலிஸார் ஒருவருக்கும், தேக்கவத்தைப் பகுதியில் ஒருவருக்கும், வவுனியாவில் தங்கியுள்ள ஒட்டிசுட்டானைச் சேர்ந்த ஒருவருக்கும் என 44 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

தொற்றாளர்களை கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்தவும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, வவுனியா சகாயமாதாபுரம் கிராமத்தில் ஏற்கனவே 67 தொற்றாளர்கள் உள்ள நிலையில் தற்போது 29 பேர் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி இக் கிராமத்தில் 96 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ஐ-18)



பயணத்தடை காரணமாக பாதிக்கப்பட்ட ஜெயந்தி நகர் கிராமத்தைச் சேர்ந்த குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. கிளிநொச்சி மாவட்டத்தின் ஜெயந்தி நகர் விளையாட்டு கழகத்தினரால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-6)

# ஆடைத் தொழிற்சாலை பஸ்மீது வவுனியாவில் கல்வீச்சுத் தாக்குதல்

## சாரதி காயம்






வவுனியா,ஜூன் 13
ஆடைத் தொழிற்சாலைக்கு ஊழியர்களை ஏற்றிச்சென்ற பஸ் மீது இளைஞர் குழுவொன்று கல்வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

இந்தச் சம்பவம் வவுனியா முருகனூர் பகுதியில் நேற்றுக் காலை 7 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சிதம்பரபுரம் பகுதியிலிருந்து வவுனியா இராசேந்திரங்குளம் ஆடைத் தொழிற்சாலையை நோக்கி ஊழியர்களை ஏற்றிச்சென்ற பஸ்மீது, முருகனூர் விவசாயப் பண்ணை அருகே முகங்களை மறைத்தவாறு நின்ற இளைஞர் குழுவினர் கல்வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

தாக்குதலையடுத்து பஸ்ஸை நிறுத்திய சாரதிமீது குறித்த இளைஞர் குழு தாக்குதல் மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

சாரதி காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்துக்கு விரைந்த வவுனியா பொலிஸார் குற்றத்தடுப்பு பிரிவினரின் உதவியுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். ஆடைத் தொழிற்சாலையால் கொரோ னாத் தொற்று பரவுகின்றது என வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளில் எதிர்ப்புகள் வெளியாகி வருகின்ற நிலையில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத எதிர்ப்பை குறைக்கிறது பிரான்ஸ்!

**பரிஸ், ஜூன் 13**

**மேற்கு ஆபிரிக்காவின் சஹேல் பிராந்தியத்தில் எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை பிரான்ஸ் குறைக்கவுள்ளது என்று ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் தெரிவித்துள்ளார்.**



தற்போதுள்ள 5 ஆயிரத்து 100 பேர் கொண்ட பணிக்குழு ஒரு பரந்த சர்வதேச பணியில் இணைக்கப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

துருப்புக்களை குறைப்பது ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட வழியில் நடைபெறும். ஜூன் இறுதிக்குள் விவரங்கள் இறுதி செய்யப்படும் என்றும் மக்ரோன் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் படைகள் மாலி, சாட், மவுரித்தேனியா, நைஜர் மற்றும் புர்கினா பாசோ ஆகிய இடங்களில் படை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

கடந்த வாரம், இராணுவ சதித்திட்டத்தைத் தொடர்ந்து பிரான்ஸ் மாலியில் தனது நடவடிக்கைகளை நிறுத்தியது. (ஏ-இ)



# கான்சினோவுக்கு அவசர அனுமதி

நியூயோர்க், ஜூன் 13

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான ஆர்ஜென்டினாவில் சீனாவின் கான்சினோ தடுப்பூசிக்கு, அவசர கால அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சீனாவின் கான்சினோ தடுப்பூசி ஒரே டோஸ் தடுப்பூசி ஆகும். முதற்கட்டமாக 54 லட்சம் கான்சினோ தடுப்பூசிகளை இறக்குமதி செய்வதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது என்று ஆர்ஜென்டினா சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

ஏற்கனவே அங்கு ரஷ்யாவின் ஸ்புட்னிக்வி தடுப்பூசி, அஸ்ட்ராஜெனகா, சைனோஃபார்ம் ஆகிய தடுப்பூசிகள் பயன்பாட்டில் உள்ளன.

சுமார் 4.5 கோடி மக்கள் தொகையை கொண்ட ஆர்ஜென்டினாவில், தற்போது வரை 1.2 கோடி பேருக்கு முதல் டோஸ் தடுப்பூசியும், 32 லட்சம் பேருக்கு 2 டோஸ் தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளது.

உலகளவில் கொவிட்-19 தொற்றால் அதிக பாதிப்பை எதிர்கொண்டுள்ள ஒன்பதாவது நாடாக விளங்கும் ஆர்ஜென்டினாவில், இதுவரை 84 ஆயிரத்து 628 பேர் கொவிட் தொற்றால் உயிரிழந்துள்ளனர். (ஏ-இ)



# குளு குளு கிரகம்

நியூயோர்க், ஜூன் 13

90 ஒளியாண்டுகள் தொலைவில் தண்ணீர், மேகம் கொண்ட புதிய கிரகம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அண்டத்தில் லட்சக்கணக்கான நட்சத்திரங்கள் உள்ளன. சூரியனைச் சுற்றி ஒன்பது கிரகங்கள் வலம் வரும் நிலையில் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையமான நாசா பூமியில் இருந்து 90 ஒளியாண்டுகள் தொலைவில் 'டிஓஐ 1231 பி' என்கிற புதிய கிரகத்தை கண்டுபிடித்துள்ளது.

இந்தக் கிரகம் பூமியைக் காட்டிலும் மூன்றரை மடங்கு பெரியது என்றும், நெப்டியூன் கிரகத்தின் மறு உருவம் என்றும் கூறியுள்ளது. பூமியைப் போலவே இந்த கிரகத்தில் தண்ணீர் மற்றும் மேகங்கள் உள்ளன என நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

ரெட் டுவார்ஃப் எனப்படும் சிவப்பு குள்ளன் என்கிற நட்சத்திரத்தைச் சுற்றி வருகிறது இந்த கிரகம். சூரியனை விட அளவில் சிறியதான இந்த சிவப்பு குள்ளன் நட்சத்திரத்துக்கு சூரியனைவிட வயது அதிகம். சிவப்பு குள்ளன் நட்சத்திரம் இருக்கும் பகுதியே குளுமையானது என்பதால் இந்த புதிய கிரகமும் குளுமை நிறைந்துள்ளது என்று கூறப்படுகின்றது.

இந்த கிரகத்தில் ஹைட்ரஜன் வாயு அணுக்கள் உள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது. ஹபிள் தொலைநோக்கிபோல சக்தி வாய்ந்த தொலைநோக்கி மூலமாகவே இந்த கிரகத்தைக் காண முடியும்.

தென் கலிபோர்னியா மாகாணத்தில் நாசா விஞ்ஞானி டாக்டர் ஜெனிபர் பார்ட் தலைமையில் விஞ்ஞானிகள் இந்த கிரகத்தை ஆய்வு செய்து வருகின்றனர்.

நியூ மெக்சிகோ பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்களும் டிஓஐ 1231 பி கிரகம் கண்டுபிடிக்கப்பட்டது தொடர்பாக முன்னதாக பேட்டி அளித்திருந்தனர். (ஏ-இ)

# தடுப்பூசி ஏற்றாவிடில் சிம் இணைப்பு 'கட்'!

இஸ்லாமாபாத், ஜூன் 13

பஞ்சாப் மாகாணத்தில் கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ள தயங்கும் மக்களின் கைத்தொலைபேசி இணைப்புகள் முடக்கப்படும் என அந்த மாகாணத்தின் அரசு தெரிவித்துள்ளது.

கொரோனாவை முறியடிக்க தடுப்பூசி செலுத்திக் கொள்வதுதான் ஒரே தேர்வு என உலக பொது சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. அதனால் பல்வேறு நாடுகள் தங்கள் மக்களுக்கு தடுப்பூசி செலுத்தும் பணியில் ஈடுபட்டு வருகின்றன. பாகிஸ்தான்னில் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தியும் தடுப்பூசி செலுத்திக் கொள்ள மக்கள் முன்வராததால் இந்த தடாலடி முடிவை அந்த மாகாண அரசு எடுத்துள்ளது.

அதேநேரம், பாகிஸ்தானில் முதல் டோஸ் தடுப்பு மருந்தை செலுத்திக் கொண்ட மக்கள் இரண்டாவது டோஸை செலுத்திக் கொள்ள ஆர்வம் காட்டாததும் இதற்கு ஒரு காரணம் என்று கூறப்படுகின்றது. பாகிஸ்தானின் மக்கள் தொகையில் 1.2 சதவீதம் பேரே இரண்டு டோஸ் தடுப்பூசி செலுத்திக்கொண்டுள்ளனர். (ஏ)

# 1,000 ஆண்டுகள் கடந்தும் உடையாத கோழி முட்டை

ஜெருசலேம், ஜூன் 13

இஸ்ரேலின் மத்திய பகுதியில் அமைந்துள்ள யவ்னே நகரில் நடந்து வரும் அகழ்வாய்வின் போது ஒரு கழிவு நீர் தொட்டியில் இருந்து மிகப் பழமையான கோழி முட்டை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இந்த முட்டை ஆயிரம் ஆண்டுகளை கடந்த பின்னரும் உடையாமல் இருப்பது அகழ்வாராய்ச்சியாளர்களையே ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. அதனால் இது மிகவும் அரிதான கண்டுபிடிப்பு என அகழ்வாராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இந்த முட்டையை கண்டெடுத்த அகழ்வாராய்ச்சியாளர்களில் ஒருவர் இதுபற்றி தெரிவிக்கையில்

முந்தைய காலங்களில் டோவிட், சிசோரியா மற்றும் அப்போலினியா போன்ற நகரங்களில் முட்டை துண்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஆனால் முட்டைகளின் உடையக்கூடிய தன்மை காரணமாக, உலக அளவில் கூட எந்த கோழி முட்டைகளும் இதுவரை பாதுகாக்கப்படவில்லை. எனவே இது மிகவும் அரிதான கண்டுபிடிப்பு - என்றார். (ஏ-இ)



# 38 லட்சம் கொவிட் காவுகள்

லண்டன், ஜூன் 13

உலகளவில் கொரோனா வைரஸ் (கொவிட்19) பெருந்தொற்றால், உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 38 லட்சத்தைக் கடந்துள்ளது.

அதேநேரம், உலகளவில் மொத்தமாக 17 கோடியே 60 லட்சத்து 48 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை வைரஸ் தொற்றால் 15 கோடியே 96 லட்சத்து 26 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பூரண குணமடைந்துள்ளனர்.

உலகளவில் கொவிட்19 தொற்றால் அதிக பாதிப்பு மற்றும் உயிரிழப்பைச் சந்தித்த முதல் நாடாக அமெரிக்கா காணப்படுகின்றது. அதற்கு அடுத்தபடியாக அதிக கொவிட் பாதிப்பை எதிர்கொண்ட நாடுகளாக இந்தியா, பிரேஸில், பிரான்ஸ் மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் உள்ளன. (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரெஞ் பகிரங்கம்; வீழ்ந்தார் நடால்!



பரிஸ், ஜூன் 13
சர்வதேச அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான பிரெஞ்சுத் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ரபேல் நடாலை வீழ்த்தி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றார் ஜோகோவிக்.

பிரெஞ் தொடர் களிமண் தரையில் நடத்தப்படும். நடால் களிமண் தரையில் விளையாடுவதில் வல்லவர். இதனால் அவர் களிமண்தரை ராஜா என்று அழைக்கப்படுகின்றார். பிரெஞ் கிண்ணத்தை இதுவரை 11 தடவைகள் நடால் கைப்பற்றியுள்ளார்.

இதனால் ஜோகோவிக்கை தோற்கடித்து நடால் இறுதிக்குச் செல்வார் என்றே பலரும் எதிர்பார்த்தனர். 3:1 என்ற செற் கணக்கில் ஜோகோவிக் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றார். (ம)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 26.08.1946 | மறைவு 28.05.2017

வவுனியா ஓமந்தை கதிரவேலர் பூவரசன்குளத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டிருந்த

**அமரர் தெய்வநாயகி சிவசுப்பிரமணியம்**


திதி : திருதியை 13.06.2021

அன்பின் பிறப்பிடமாய் பண்பின் இதயமாய்
பாசத்தின் மகுடமாய் எம் குடும்பச்சுடர் ஒளியாய்
எம்மை வாழவைத்த தெய்வம் நீங்களல்லவோ
நீங்கள் எங்களுக்கு கிடைத்த கொடை அம்மா
உங்கள் நினைவுகள் எம்மை வாட்டுகின்றதே
எங்களுக்காக நீங்கள் செய்த தியாகங்கள்
தோளோடு துணைநின்று எமக்கு நல்வழிகாட்டியாய்
வாழ்ந்த காலங்கள் எம் நெஞ்சை விட்டகலாது அம்மா
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் உங்கள்
அன்பான முக நினைவுகளுடன் வாழ்வோம்.
உங்கள் ஆத்ம சாந்திக்காக
எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

இல.49 / 92, கோவில் வீதி,
குருமன்காடு, வவுனியா.
024 2220418

நீங்காத நினைவுகளுடன்
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 20.03.1955 | இறப்பு 14.05.2021

**அமரர் சுப்பிரமணியம் பகீரதன்**

(ஓய்வுநிலை இ.போ.ச.சாரதி
காரைநகர் சாலை)

அராலி மத்தியைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட அமரர் சுப்பிரமணியம் பகீரதன் அவர்களின் 31ஆம் நாள் வீட்டுக் கிருத்திய தின நினைவஞ்சலி

நீர் பிரிந்து ஒரு திங்கள் ஆனதையா
உம் நினைவலைகள் என்றென்றும் எம்மை
விட்டு நீங்காது
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
உம்மைப் போல் எம்மைத் தாங்க யாருமில்லை
என்றும் உம் நினைவோடு வாழும் குடும்பத்தினர்
ஓம் சாந்தி!

பழைய ஆஸ்பத்திரி வீதி,
வட்டுத் தென்மேற்கு,
வட்டுக்கோட்டை.

மனைவி, மக்கள்,
சகோதரர்,
மருமக்கள்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 01 . 1969 | மறைவு 11 . 06 . 2021



### கதிரேசு தயாபரன்

யாழ் ஆவரங்கால் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரேசு தயாபரன் கடந்த (11.06.2021) வெள்ளிக்கிழமை அகால மரணமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரேசு - இராசம்மா தம்பதியரின் கனிஸ்ட புதல்வனும், இராசகுமாரியின் அன்புக் கணவரும், கதிர் கண்ணன், கதிர்பிரசுதன், ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலராணி, இந்திராணி, செல்வமுத்து, வைகுந்தராணி, அம்பலவாணர், கோணேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஸ்ரீரங்கநாதன், யோகராஜா, யோகராசா, ராகினி ஆகியோரின் மைத்துனரும், ராஜி, விதுஷா, பிரியங்கன் ஆகியோரின் சிறிய தந்தையும், நீதன், வினோதன், கஜிதன், சிறிபிரணவன், விஷ்ணுகிரி, விஷ்ணுசுதன், ஜகயாழினி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆவரங்கால் மேற்கு,
புத்தூர்.

தகவல்:
சிறிபிரணவன்
077 072 4058

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமக

## மரண அறிவித்தல்

பிறப்பு 25 . 02 . 1952 | இறப்பு 11 . 06 . 2021



### நடராசா கோவிந்தராசா பத்தர்

(கோவிந்து)

இல.64, காரைக்காட்டு லேன் வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா கோவிந்தராசா பத்தர் அவர்கள் கடந்த (11.06.2021) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - இராஜலெட்சுமி தம்பதியரின் பாசமிகு புதல்வரும், காலஞ்சென்றவர்களான பாலகிருஷ்ணன் - தங்கம்மா தம்பதியரின் மருமகனும், பேரின்பராணியின் பாசமிகு கணவரும், தர்ஷிகா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம்-யாழ்ப்பாணம்), அனுத்திரன் (மென்பொருள் பொறியியலாளர்), சாருஜன் (உரிமையாளர் - சாரு இஞ்சினியரிங்), உசாஜிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்மப்பிரியாவின் அன்பு மாமனாரும், வரதராசா, இரத்தினராசா ஆகியோரின் சகோதரரும், கதிரவேலுவின் (தம்பு) மருமகனும், உதயகுமார், சதானந்தகுமார், ஜெயராசா ஆகியோரின் மச்சானும், இராஜேஸ்வரி, சிவசோதிமலர், அமரர் லோகேஸ்வரி, கமலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.64, காரைகாட்டு லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
T.P:021 222 3432
021 222 5184

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் லாபம் தேடுகின்றன சுகாதாரத் தொழிற்சங்கங்கள்

கொழும்பு, ஜூன் 13

கொரோனாத் தொற்று தீவிரமாகப் பரவி வரும் நிலையில் சுகாதாரத்துறையிலுள்ள சில தொழிற்சங்கங்கள் அரசியல் ரீதியான லாபத்தைத் தேடும் நோக்கில் செயற்பட்டு வருகின்றன. அவர்களே இந்தக் காலத்திலும் பணிப்புறக்கணிப்பை மேற்கொள்கின்றார்கள். இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மீண்டும் குற்றம் சுமத்தியுள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நாளாந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று நடைபெற்றது. இதன்போது கருத்துத் தெரிவித்த அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினரும், ஊடகக் குழு உறுப்பினருமான மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் மேலும் தெரிவிக்கையில்,

மருத்துவர்கள், தாதியர்கள் உள்ளிட்ட சகல சுகாதாரப் பணியாளர்களின் ஒற்றுமையால் கொரோனாவின் முதலாம் மற்றும் இரண்டாம் அலையை எமது நாடு வெற்றிகரமாக முறியடித்தது. தற்போது மூன்றாவது அலை மிகத் தீவிரமாகப் பரவி வருகின்றது.

பொதுமக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு வினைத்திறனான செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும்.

இந்தக் கொரோனா இடர் காலத்தில் மருத்துவர்கள் பற்றாக்குறையாக உள்ள மருத்துவமனைகளுக்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தனது உறுப்பினர்களாக உள்ள மருத்துவர்கள் பலரை நியமித்துள்ளது.

குறிப்பாக பட்டப்படிப்பின் பின் படிப்பு நிலையத்திலிருந்து 2 ஆயிரத்து 500 மருத்துவர்களை கொரோனாக் கட்டுப்பாட்டு நடவடிக்கையில் களமிறக்கியுள்ளோம்.

கர்ப்பிணிகளாக உள்ள அரச பணியாளர்கள் கடமைக்குச் சமூகமளிக்கத் தேவையில்லை என்று பொது நிர்வாக அமைச்சு அறிவித்திருந்தது. எமது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள 500 கர்ப்பிணி மருத்துவர்கள் வீடுகளிலிருந்தும் சேவையை வழங்கி வருகின்றனர்.

தற்போது களுத்துறை மாவட்டத்தில் வீடுகளிலிருந்து தொற்றாளர்களைப் பராமரிக்கும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதில் கர்ப்பிணிகளாக உள்ள மருத்துவர்கள் தமது வீடுகளிலிருந்து தொலைபேசி ஊடாக மருத்துவக் கவனிப்பை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு எமது சங்கம் சேவையாற்றி வருகின்றது.



ஆனால் துரதிஷ்டவசமாக சுகாதாரத் துறையில் உள்ள சில தொழிற்சங்கங்கள், அரசியல் லாபம் தேடும் வகையில் பணிப்புறக்கணிப்புக்களை மேற்கொண்டு வருகின்றன. மருத்துவர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. தமக்கு வழங்கப்படவில்லை என்பதை அவர்கள் பணிப்புறக்கணிப்புக்காக முன்வைக்கும் காரணங்களில் ஒன்றாகக் குறிப்பிடுகின்றனர்.

இதனை நாம் நேற்று (நேற்றுமுன்தினம்) தெளிவுபடுத்தினோம். கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடும் மருத்துவர்களுக்கு மாத்திரம் மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. ஏனைய மருத்துவர்களுக்கு அது கிடையாது. அதேபோன்று கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கையிலுள்ள ஏனைய சுகாதாரத் தரப்பினருக்கும் அந்தக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

இவ்வாறான சூழலில் மக்களின் நலனைப் பொருட்படுத்தாது சுகாதார தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவது கண்டிக்கத்தக்கது.

இதேவேளை சுகாதார அமைச்சரை எமது சங்கம் நேற்று (நேற்றுமுன்தினம்) சந்தித்துக் கலந்துரையாடியது. கொரோனாக் காலத்தில் சுகாதாரத் துறையிலுள்ள ஏனைய தரப்பினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வாக இடர்காலக் கொடுப்பனவை வழங்கவேண்டும் என்று நாம் கோரினோம். அதற்கு சுகாதார அமைச்சர் எமக்கு சாதகமான நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளார்- என்றார். (ஓ.5)


## வீடு வாடகைக்கு

நல்லூர் கோயில் வீதியில் வீடு வாடகைக்கு உண்டு. அரச உத்தியோகத்தர்கள் விரும்பத் தக்கது. மாத வாடகை 20,000/=

**077 990 6867, 074 039 9017**

## அறைகள் வாடகைக்கு

யாழ் சுண்டுக்குளியில் பழைய பூங்கா வீதியில் முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட இரண்டு அறைகள் வாடகைக்கு உண்டு (தரகர் தேவையில்லை)

**T.P: 077 777 7384**

## வீட்டு பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணம் கோயில் வீதியில் உள்ள வீடு ஒன்றிற்கு காலை வேளையில் 6 மணி தொடக்கம் 12 மணிவரை வீட்டு வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை. சம்பளமாக 30.000/- தரப்படும்.

**077 310 7794, 0777 594825**

## வேலையாட்கள் தேவையா?


Work From Home, Part Time ஆகவும் மற்றும் Data Entry Operator, Delivery Boy, Driver உட்பட உங்கள் நிறுவனங்களில் இருக்கும் ஏனைய Vacancy களுக்கும் எம்மிடம் பதிவு செய்தவர்களிலிருந்து தெரிவு செய்யலாம்.

**DEWMAS Job Bank**

dewmasweb.com

51, Amman Road, Nallur, 0741 38 3368, 021 315 2500


# வாகனங்களின் விலை மேலும் அதிகரிக்கும்



கொழும்பு, ஜூன் 13

வாகனங்களின் விலை எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கும் என்று வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் இந்திக சம்பத் தெரிவித்துள்ளார்.

நாளொன்றுக்கு 15 வகை வாகனங்களின் விலை அதிகரிப்பதற்கான சந்தர்ப்பம் காணப்படுகின்றது. நிதித்தளம்பல் அச்ச நிலை காரணமாகவே சிலர் வாகனங்களை முதலீடு செய்ய விரும்புகின்றனர்.

இருப்பினும் நாட்டின் தற்போதைய நிலைமை இயல்பு நிலையை அடையும் போது கொள்வனவாளர்கள் பெரும்தொகை நிதியை இழக்க நேரிடும்.

அத்துடன், கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதன் காரணமாக, பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். [illegible]

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணுலகம் | | விண்ணுலகம் |
|---|---|---|
| 23 • 04 • 1936 |  | 10 • 06 • 2015 |

**அமரர் திருவாளர். வேலுப்பிள்ளை கண்ணுத்துரை**

**ஆறு ஆண்டுகள் ஆனதப்பா**
**ஆறவில்லை எம் துயரம்**
**மண்ணுலகம் விட்டு விண்ணுலகம் சென்றாலும்**
**உங்கள் ஆத்மா எங்களுடன்**
**என்றும் வாழ்ந்து வழிநடத்த**
**கண்ண பரமாத்மாவை வேண்டுகின்றோம்**

இன்று எங்கள் காலம் சென்ற பெற்றோர்கள் முத்தையா, இராசையா, இரத்தினம்மா மற்றைய மூதாதையர்களையும் நினைவு கூறுகின்றோம்.

அன்பு மனைவி: Dr. இந்திராணி (கொழும்பு)

மக்கள் :Dr. சிவாஜினி, Dr. சுதர்ஷன்

மருமக்கள் :பேராசிரியர் மகப்பேற்று வைத்திய நிபுணர் Dr. உருத்திரா, Dr. தர்மினி

பேரப்பிள்ளைகள் : பிரியங்கா, கிருஷ்ணா (All in Australia)

10.06.2021 அவர் இல்லத்தில் நடைபெறும் மதிய போசன விருந்து, யாவருக்கும் தெரிந்த காரணத்தால் நடைபெறவில்லை என்பதை மிக மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரமுன....

பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் நேற்று மாலை விசேட அறிக்கை யொன்றை விடுத்து கட்சியின் சார்பில் இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளார்.
கொரோனா பிரச்சினையால் மக்கள் நெருக்கடியை எதிர்கொண்டுள்ள சூழ் நிலையில், அவர்களுக்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்தும் விதத்தில் எரிபொருள்களின் விலை அதிகரிக்கப் பட்டுள்ளமை ஏற்கமுடியாது. இவ்வா றானதொரு அதிகரிப்பை செய்திருக்க வும் கூடாது எனவும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
அத்துடன், உரிய நேரத்தில் உரிய வகையில் முடிவுகளை துறைசார் அமைச்சர் மேற்கொள்ளாததால் தற் போது அரசுக்கும் சிக்கல் நிலை உரு வாகியுள்ளது. இதற்கு துறைசார் அமைச்சர் பொறுப்புகூறவேண்டும். இவ்வாறானதொரு நிலை ஏற்படுவ தற்கு முழுப் பொறுப்பையும் ஏற்று துறைசார் அமைச்சர் பதவி விலக வேண்டும் எனவும் பொதுஜன பெர முன குறிப்பிட்டுள்ளது.
பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்சவுக்கும், கம்மன்பில வுக்குமிடையில் நல்லுறவு இல்லை. பஸில் அணிக்கும், கம்மன்பில தரப் புக்குமிடையில் அவ்வப்போது மோதல் நிலை உருவாகும்.
இந்நிலையிலேயே எரிபொருள் விவ காரத்தை பயன்படுத்தி வலுசக்தி அமைச்சர் கம்மன்பிலவுக்கு எதி ரான ஆட்டத்தை பஸில் அணி ஆரம்பித்துள்ளது என்று கருதப்படு கின்றது. (ம-44)

## தனிமைப்படுத்தல்...

பட்டுள்ளது.
புதுக்குடியிருப்பில் இருந்து வற்றாப் பளை சென்ற புதுக்குடியிருப்பைச் சேர்ந்த இருவர் மற்றும் வற்றாப்ப ளையைச் சேர்ந்த இருவர் ஆகி யோரே கைதுசெய்யப்பட்டவர்கள் ஆவர். (ம-19)

## வடக்கில்...

மனை ஆய்வுகூடத்தில் நேற்றுமுன் தினம் இரவு 220 மாதிரிகள் சோத னைக்கு உட்படுத்தப்பட்டன. அதில் 6 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட் டுள்ளது. நேற்றுப் பகல் 544 மாதிரி கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதில் 105 பேருக்குத் தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் நேற்று இரண்டாவது நாளாகவும் சோதனை முன்னெடுக்கப்படவில்லை.

**யாழ்ப்பாணம்**

சங்கானை சுகாதார மருத்துவ அதி காரி பிரிவில் 30 பேருக்கும், சண்டிலிப் பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரி வில் 28 பேருக்கும், யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 12 பேருக்கும், உடுவில் சுகா தார மருத்துவ அதிகாரி பிரிவில் 11 பேருக்கும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 4 பேருக்கும், தெல்லிப்பழை ஆதார மருத்துவம னையில் 2 பேருக்கும், மானிப்பாய் பிரதேச மருத்துவமனையில் 2 பேருக் கும், நல்லூர் சுகாதார மருத்துவ அதி காரி பணிமனை மற்றும் பருத்தித் துறை ஆதார மருத்துவமனை ஆகிய வற்றில் தலா ஒவ்வொருவருக்கும் என 91 பேருக்குத் தொற்று உறுதிப்படுத் தப்பட்டுள்ளது.

**கிளிநொச்சி**

பரந்தன் தனிமைப்படுத்தல் நிலையத் தில் 4 பேருக்கும், இரணைமடு தனி மைப்படுத்தல் நிலையத்தில் ஒருவருக் கும், அக்கராயன் பிரதேச மருத்துவம னையில் ஒருவருக்கும், உருத்திரபுரம் பிரதேச மருத்துவமனையில் ஒருவருக் கும், கிளிநொச்சி கொரோனா சிகிச்சை நிலையத்தில் ஒருவருக்கும் என 8 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட் டுள்ளது. முல்லைத்தீவில் புதுக்குடியி ருப்பு சுகாதார மருத்துவ அதிகாரி பிரி வில் மாத்திரம் 12 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஓ.5)

## யாழில்....

துறையைச் சேர்ந்த 68 வயதுடைய ஆணொருவர் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார். அத்துடன் பெண்ணொருவரும் உயிரிழந்துள் ளார். இதையடுத்தே யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்த வர்களின் எண்ணிக்கை 54ஆக அதி கரித்தது. (ம-26)

## கொரோனா...

எண்ணிக்கை இரண்டு இலட்சத்து 21 ஆயிரத்து 263ஆக எகிறியுள்ளது. கொரோனாவிலிருந்து குணமடைந்த வர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 86 ஆயிரத்து 516ஆக உயர்வடைந்துள்ளது.
இதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்க ளின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 73ஆக எகிறியுள்ளது என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரி வித்துள்ளது. (ம-22)

## 24மணிநேரத்தில்...

குள் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர் பில் மேலும் தெரியவருவதாவது:
சுன்னாகம் கந்தரோடை பாரதி வீதியில் உள்ள வீடொன்றில் நேற்றுமுன்தினம் மாலை வீடுடைத்து 21 பவுண் தாலிக் கொடி, மூக்குத்தி, பணம் மற்றும் துவிச் சக்கரவண்டி என்பவை திருடப்பட்டன. வீட்டில் இருந்தவர்கள் அயலில் உள்ள காணியைத் துப்புரவுசெய்யச் சென்றி ருந்தவேளை இந்தத் திருட்டு இடம்பெற் றது. சம்பவம் தொடர்பில் நேற்றுமுன் தினம் மாலை சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்யப் பட்டது. அது தொடர்பில் விசாரணை களை முன்னெடுத்த யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பிரதான பொலிஸ் பரிசோத கர் நிகால் பிரான்ஸின் தலைமையி லான மாவட்ட குற்றத்தடுப்பு பொலி ஸார், சந்தேகநபரை நேற்றுப் பிற்பகல் கைதுசெய்துள்ளனர்.
சந்தேகநபர் நல்லூர் பகுதியைச் சேர்ந் தவர். 23 வயதுடைய அவர் யாழ்ப்பா ணம் நகர் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டார். விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப் படவுள்ளார். சந்தேகநபரிடமிருந்து திருடப்பட்ட நகைகள், பணம் மற்றும் துவிச்சக்கரவண்டி என்பவை மீட்கப் பட்டுள்ளன- என்றுள்ளது. (ம-26)

## பயங்கரவாத....

நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தில் காணப்படும் விமர்ச னங்கள் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆகியவற்றை மையப்படுத்தியே இந்த மீளாய்வு முன்னெடுக்கப்பட்டு திருத் தங்களை மேற்கொள்வதற்கு தீர்மா னிக்கப்பட்டுள்ளது. இதற்காக நீதி அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு மற் றும் வெளிவிவகார அமைச்சு ஆகிய மூன்று அமைச்சுக்களும் கூட்டாக இணைந்து பயங்கரவாத தடைச்சட் டத்தை மீளாய்வுக்கு உட்படுத்துவதற் காக செயற்பட்டு வருகின்றன.
மீளாய்வுசெய்வதற்காக நிபுணர்கள் அடங்கிய குழுவொன்றை நியமிப்ப தற்குரிய அனுமதியை அமைச்சரவை யிடத்திலிருந்து பெறவேண்டியுள்ளது. இதற்காக, அமைச்சரவைப் பத்திர மொன்றை முதலில் தயார்செய்வதற்கு நீதி, வெளிவிவகார மற்றும் பாதுகாப்பு அமைச்சுக்களிடையே இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது.
இந்த விடயத்தை அடுத்துவரும் காலப் பகுதியில் விரைந்து முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.
ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் இலங் கையில் நடைமுறையில் உள்ள பயங் கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும் என்று வலியுறுத்தி அண்மையில் தீர்மானம் நிறை வேற் றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## உருக்குலைந்த...

கடற்பரப்பில் அண்மையில் 'எக்ஸ் பிரஸ் பேர்ள்' கப்பல் முழுவதுமாக தீக் கிரையானது. அந்த கப்பல் விபத்துத் தான் கடலாமையின் சாவுக்குக் கார ணமா என சந்தேகம் வெளியிடப்பட் டுள்ளது.
இந்தக் கப்பல் விபத்தால் ஏராளமான கடல்வாழ் உயிரினங்கள் உயிரிழந் தன. கப்பலில் இருந்த அமிலங்கள் கடலில் கலந்ததாலேயே கடல்வாழ் உயிரினங்கள் உயிரிழந்தன என்று துறைசார் வல்லுநர்கள் தெரிவித்திருந் தனர். மேற்படி கப்பலின் சிதைவடைந்த பாகங்கள் மன்னார் கடல் பரப்பில் அண்மையில் மீட்கப்பட்டிருந்தன. இத் தகையதொரு பின்னணியில் சிதைவ டைந்த நிலையில் மேற்படி கடலாமை கரையொதுங்கியுள்ளது. வன உயிரி கள் திணைக்களத்தினர் ஆமையின் எச்சங்களை பரிசோதனைக்காக எடுத்துச்சென்றனர். (ம-113)

# சுவிஸ் சிறப்பான ஆட்டம் வேல்ஸ் விடாப்போராட்டம்





உரோம், ஜூன் 13

யூரோ கிண்ணத்தில் நேற்று மாலை நடைபெற்ற சுவிஸ், வேல்ஸ் இடையிலான ஆட்டத்தில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்ற நிலையில் ஆட்டம் முடிவுக்கு வந்தது.
ஆட்டத்தின் ஆரம்பம் முதலே இரு அணிகளும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தின. கோல்கள் இல்லாமல் முடிந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியின் 49ஆவது நிமிடத்தில் எம்பொலோ சுவிஸின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். பதிலடி கொடுப்பதற்குப் பலமுறை முயன்றது வேல்ஸ். எனினும் சுவிஸின் ஆதிக்கம் சிறிது நேரம் நீடிக்கவே செய்தது. ஆட்டத்தின் 74ஆவது நிமிடத்தில் மோறி வேல்ஸின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். அதன் பின்னர் இரு அணிகளும் கோல்களைப் பதிவுசெய்யவில்லை. ஆட்டம் சமநிலையானது.
ஆட்டத்தின் 65 வீதமான நேரம் சுவிஸின் கட்டுப்பாட்டில்தான் பந்து இருந்தது. எனினும் வேல்ஸின் பின்களம் பலமாக இருந்ததால் அந்த அணி ஆட்டத்தை சமன்செய்ய முடிந்தது. அத்துடன் சுவிஸ் முறையற்ற ஆட்டத்தையும் வெளிப்படுத்தியது. [illegible] நடுவரால் அந்த அணி எச்சரிக்கப்பட்டது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இலுப்பைக்குளத்தில் கிரவல் அகழ்வு; தற்காலிகமாக நிறுத்துமாறு உத்தரவு

திருகோணமலை, ஜூன் 13

திருகோணமலை - இலுப்பைக்குளம் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் கிரவல் அகழ்வை உடன் அமுலாகும் வகையில் வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை வரை தற்காலிகமாக நிறுத்துமாறு மாவட்டச் செயலர், சமன் தர்சன பாண்டிகோராள உத்தரவிட்டுள்ளார்.

குறித்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் கிரவல் அகழ்வு காரணமாக சுற்றாடல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று ஊடகங்கள் வாயிலாக வெளிவந்த செய்திகளை அடுத்து உடன் களப் பயணம் ஒன்றை நேற்று முன்தினம் மேற்கொண்டு பார்வையிட்டபோதே குறித்த உத்தரவைப் பிறப்பித்தார்.

"உடனடியாக இப்பகுதியில் மேற்கொள்ளப்படும் கிரவல் அகழ்வைப் பரிசீலிக்க குழுவொன்றை அமைத்து, அது தொடர்பான முடிவு உரிய தரப்பினருக்கு வழங்கப்படும், அதுவரை கிரவல் அகழ்வை நிறுத்தவேண்டும், முடிவுகளின் அடிப்படையில் உரிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்" என்று அவர் இதன்போது தெரிவித்தார். (ப)

### திருகோணமலை மாவட்டத்தில்

# அரசின் நகர அபிவிருத்தித் திட்டத்தில் தமிழ், முஸ்லிம் பகுதிகள் புறக்கணிப்பு

### இம்ரான் எம்.பி. தெரிவிப்பு



**திருகோணமலை, ஜூன் 13**

**அரசாங்கத்தின் 100 நகர அபிவிருத்தித் திட்டத்தில் திருகோணமலை மாவட்ட தமிழ், முஸ்லிம் பிரதேசங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. எனவே அவை நிவர்த்தி செய்யப்படவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கோரிக்கை தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக நகர அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருக்கு அவர் எழுதிய கடிதத்திலேயே இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

ஜனாதிபதியின் நகர அபிவிருத்தி யோசனைக்கமைய நடைமுறைப் படுத்தப்படும் 100 நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய், சேருவில, பதவிசிறிபுர மற்றும் குச்சவெளி பிரதேசத்தின் புல்மோட்டை ஆகிய பிரதேசங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. திருகோணமலை மாவட்டம் பல்லின சமூகத்தினரும் சகோதரத்துவத்துடன் ஒற்றுமையாக வாழ்கின்ற ஒரு மாவட்டம். இங்கு நீண்டகாலமாக இன ஒற்றுமை பேணப்பட்டு வருகின்றது.

திருகோணமலை, வெருகல் போன்ற பிரதேசங்கள் தமிழ் மக்களை அதிகமாகக் கொண்ட பிரதேசங்கள். கிண்ணியா, மூதூர், குச்சவெளி மற்றும் தம்பலகமம் ஆகிய பிரதேசங்கள் முஸ்லிம் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேசங்கள். அதேபோல கந்தளாய், சேருவில, மொரவெள, கோமரங்கடவெல மற்றும் பதிவிசிறிபுர ஆகிய பிரதேசங்கள் சிங்கள மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேசங்களாகும்.

நாட்டில் வாழ்கின்ற சகல மக்களையும் உள்ளடக்கிய வகையில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். இந்தக் கொள்கை திருகோணமலை மாவட்ட நகரத் தெரிவில் கவனத்தில் கொள்ளப்படாமை குறித்து நான் மிகவும் கவலையடைகிறேன் - என்றுள்ளது. (ஐ-இ)





## நான்காவது நாளாகவும் நுவரெலியாவில் தடுப்பூசி

நுவரெலியா, ஜூன் 13

கொவிட் - 19 தடுப்புக்கான தடுப்பூசி ஏற்றும் பணி நுவரெலியா மாவட்டத்தில் நேற்று நான்காவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

இந்த தடுப்பூசி வழங்கும் திட்டத்தில், 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.

இதன்படி கொட்டகலை மற்றும் ஹற்றன் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வாழும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டது. கொட்டகலை மற்றும் ஹற்றன் ஆகிய சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில், கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அதிகளவு இனங்காணப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளுக்கு சுகாதார அதிகாரிகள் முன்னுரிமை வழங்கியிருந்தனர். காலையிலேயே தடுப்பூசி ஏற்றும் நிலையங்களுக்கு வந்திருந்த 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் வரிசையில் காத்திருந்து ஆர்வத்துடன் தடுப்பூசியை ஏற்றிக்கொண்டனர். நுவரெலியா மாவட்டத்துக்கு முதற்கட்டமாக 50 ஆயிரம் சைனோஃபார்ம் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. அடுத்தகட்டமாக மேலும் 50 ஆயிரம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெறும் என இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார். (ப)

## பொலித்தீனுக்கு எதிர்காலத்தில் முழுமையாக தடை விதிக்கப்படும்

நாட்டில் பிளாஸ்டிக் பாவனையை முற்றாக கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் கட்டங் கட்டமாக முன்னெடுக்கப்படும். மேலும் பல பிளாஸ்டிக் பொருள்கள் மற்றும் பொலித்தீன் என்பவற்றைத் தடை செய்வதற்கான யோசனை எதிர்வரும் இரு வாரங்களில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்று சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஆடைகளை பொதியிடுவதற்கு பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பைகள், ஒரு தடவை மாத்திரம் உபயோகிக்கக் கூடிய சிறு கரண்டிகள், உணவு பொதியிட பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பெட்டிகள் மற்றும் யோக்கட் உள்ளிட்டவற்றில் காணப்படும் சிறிய கரண்டிகள், குளிர்பானத்துடன் வழங்கப்படும் சிறு குழாய்கள், இடியப்பம் சமைப்பதற்கு உபயோகிக்கப்படும் பிளாஸ்டிக் தட்டுகள் மற்றும் பிளாஸ்டிக் மலர்மாலைகள் உள்ளிட்டவற்றை தடைசெய்ய எதிர்பார்த்துள்ளோம்.

தற்போது இலங்கையில் நாளொன்றுக்கு 20 லட்சம் பொலித்தீன் பைகள் உபயோகிக்கப்படுகின்றன. இவற்றில் சிறிய அளவானவற்றை முதற்கட்டமாகவும் பெரிய பைகளை அதன் பின்னரும் தடைசெய்ய எதிர்பார்த்துள்ளோம். இதேவேளை சிறியளவிலான பிளாஸ்டிக் நீர் போத்தல்களை தடை செய்வது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு தடைசெய்யப்படவுள்ள பொருள்களுக்கான மாற்றுத் தயாரிப்புக்களும் இனங்காணப்பட்டுள்ளன. கடதாசியில் தயாரிக்கப்படும் உணவு பொதியிடும் பெட்டிகள், மரப்பலகையில் தயாரிக்கப்படும் சிறு கரண்டிகள் என்பவை மாற்று தயாரிப்புக்களாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும் - என்றார். (ஒ.இ)

## பறவைகளுக்கான மருந்துகளுடன் குவைத்திலிருந்து வந்த நபர் கைது

குவைத்தில் இருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட பறவைகளுக்கான ஒரு தொகை மருந்துப்பொருள்களுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. மிருக வைத்திய அதிகார சபையின் அனுமதியின்றி குறித்த மருந்து பொருள்களை விற்பனை செய்தமை தொடர்பில் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

38 வயதுடைய ஒருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 10 லட்சம் பெறுமதியான மருந்து பொருள்கள் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (கு-இ)

## மீண்டும் தமிழ் மொழி

கொழும்பு, ஜூன் 13

பொன்டெரா (அங்கர்) நிறுவனத்தின் சில உற்பத்திகளில் புறக்கணிக்கப்பட்ட தமிழ் மொழி, மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும் என்று குறித்த நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மூதூர் பிரதேச சபை உபதவிசாளரால், சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளருக்கு, எழுத்து மூலமாக அனுப்பிய கடிதத்துக்கு அமைய சம்பந்தப்பட்ட நிறுவனம் அதற்கான பதிலை வழங்கியுள்ளது. அந்த பதிலில் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளையும் பின்பற்றுவதற்கான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ப)

## படகில் இலங்கை வர முயன்ற இங்கிலாந்து பிரஜை கைது

மன்னார், ஜூன் 13



தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்கு படகில் வர முயன்ற இங்கிலாந்தைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தூத்துக்குடி அருகே உள்ள முத்தரையர் கடற்கரை பகுதியில் 50 வயது மதிக்கத்தக்க வெளிநாட்டைச் சேர்ந்தவர் என சந்தேகப்படும் நபர் ஒருவர் சுற்றி வருகிறார் என கியூ பிரிவு பொலிஸாருக்கு நேற்றுமுன்தினம் தகவல் கிடைத்தது.

இதைத் தொடர்ந்து கியூ பிரிவு பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று சந்தேக நபரைக் கைதுசெய்தனர்.

விசாரணையில், பிடிபட்டவர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஜோனாதன் தோர்ன்(வயது - 47) என்பது தெரியவந்தது. அவரிடம் இங்கிலாந்து கடவுச்சீட்டு மற்றும் இந்திய, இலங்கை பணமும் இருந்துள்ளன.

இதைத் தொடர்ந்து கியூ பிரிவு பொலிஸார் ஜோனாதன் தோர்ன் மீது பாஸ்போர்ட் முறைகேடு வழக்கு பதிவுசெய்துள்ளனர். (ஐ-56)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தி[illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13. 06.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 16

Registered as a Newspaper

தடையுண்டாயினும் பயணம் நிக்காமல் நடக்கும்
விடை தெரியாது எப்போது முடியுமென்று– படைத்தளபதி
கனவது கண்டு தடை இல்லையென்பார்
நனவில் அடுத்தநாளே இருக்கென்பார் நம்விதி இதே!

- கொரோனாச் சித்தர்

சஞ்சீவி

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2052 வைகாசி 30 ஞாயிற்றுக்கிழமை (13.06.2021) சிகரம் : 51

'Daily Mirror' பத்திரிகையில் வெளிவந்த இந்தக் கட்டுரை பலரின் வேண்டுகோளுக்கிணங்க ஒரு சில மேலதிக தகவல்களுடன் தமிழாக்கமாக உதயனில் பிரசுரமாகிறது.



# நிமலராஜன் கொலையும் சில உண்மைகளும்

ந.பரமேஸ்வரன்

கடந்த காலத்தில் இலங்கையில் பல சிங்கள மற்றும் தமிழ் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர், சிங்கள ஊடகவியலாளர்களின் வழக்குகள் சர்வதேச ஊடக அமைப்புகள் மற்றும் மனித உரிமை அமைப்புகளின் அழுத்தத்தால் நீதிமன்றத்தில் நடந்து வருகின்றன. ஆனால் தமிழ் பத்திரிகையாளர்களின் வழக்குகள் ஆரம்பத்தில் இருந்தே நகர்த்தப்படவில்லை. பி.பி.சியின் யாழ்ப்பாண நிருபர் மயில்வாகனம் நிமலராஜனின் வழக்கு கடந்த மாதம் 4 ஆம் திகதி சட்டமா அதிபரின் அறிவுறுத்தலின் பிரகாரம் யாழ்ப்பாண நீதவான் பீட்டர்போல் அவர்களால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

படுகொலைசெய்யப்பட்ட தமிழ்ப் பத்திரிகையாளர்களில் சிவரம் (தாரகி) மற்றும் நிமலராஜன் ஆகியோர் இலங்கை ஊடகத்துறையில் குறிப்பிடத்தக்க வர்கள். யாழ்ப்பாணத்தில் பிறந்த நிமலராஜன் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் தனது இடைநிலைக் கல்வியை பூர்த்திசெய்திருந்தவர், அவரது தந்தை அரசாங்க அச்சகத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த வேளையில் 1977 ஆம் ஆண்டு இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளை தொடர்ந்து நிமலராஜனின் குடும்பம் யாழ்ப்பாணத்தில் குடியேறியது.

எண்பதுகளின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட முரசொலி பத்திரிகை நிறுவனத்தில் விநியோகப் பகுதியில் தனது பணியைத் தொடங்கினார் நிமலராஜன் . 1987 ஒக்ரோபரில் புலிகளுக்கும் இந்திய இராணுவத்தினருக்குமிடையேபோர்தொடங்கியபோது முரசொலி, ஈழமுரசு ஆகிய பத்திரிகை அலுவலகங் கள் இந்திய இராணுவத்தால்குண்டுவைத்துதகர்க்கப்பட்டன. 1990 ஆம் ஆண்டில் ஈழநாதம் பத்திரிகையில் நிமலராஜன் நிருபராக இணைந்துகொண்டார்.

1996 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தை பாதுகாப்புப் படையினர் கைப்பற்றினர்,



1997 முதல் நிமலராஜன் ஒரு கட்டுரையாளராக "ராவய"பத்திரிகையில் பணியாற்ற தொடங்கினார். இந்தக் காலகட்டத்தில் பி.பி.சியின் சிங்கள மற்றும் தமிழ்சேவைகள்அவரையாழ்ப்பாண நிருபராகப் பயன்படுத்தின. பல கொழும்பு அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களும் நிமலராஜனை தங்கள் யாழ்ப்பாண நிருபராகப்பயன்படுத்தின.

நிமலராஜன் ஒரு போர் நிருபராக தனது ஊடகங்களுக்கு சூடான செய்திகளை வழங்கிக் கொண்டிருந்தார். அந்த நாள்களில் வடக்கில் ஏதேனும் நடந்தால், கொழும்பு மற்றும் சர்வதேச ஊடகங்களில் சில நிமிடங்களில் அந்தச் செய்தி வெளிவந்துவிடும். அந்த நாள்களில் வடக்கில் 'மீடியா ராஜாவாக' இருந்தவர் நிமலராஜன். காரணம், அவர் சகல தரப்பினருடனும் நெருங்கிய உறவைக் கொண்டிருந்தார்; நிர்வாக அதிகாரிகள் முதல் அரசு மற்றும் தனியார் துறையின் சிற்றூழியர்கள் வரை, உயர்மட்டத்திலிருந்து சாதாரண மட்டஅதிகாரிகள், ஓட்டோச்சாரதிகள், நடைபாதை வர்த்தகர்கள் கல்விமான்கள் என பல்வேறுபட்ட தரப்பினருடனும் நல்லுறவை பேணிவந்தார் நிமலராஜன்.

சிங்கள மற்றும் தமிழ் பத்திரிகையாளர்களுக்கிடையேயான ஊடகப்பாலம் போல அவர் செயற்பட்டார், தெற்கு பத்திரிகையாளர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் போதெல்லாம், அவர்கள் கொழும்பிலிருந்து வெளியேறுவதற்கு முன்பு நிமலை அழைத்தனர். அவர் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுப்பார்.

ஏனென்றால் அந்த நாள்களில் யாழ்ப்பாணத்தில் இரவு நேர ஊரடங்கு உத்தரவு மற்றும் பயணக் கட்டுப்பாடுகள் அமுலில் இருந்தன. செம்மணி மயானத்தில் புதைகுழிகள் தோண்டப்பட்டு பதினைந்து எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டபோது, 75 உள்ளூர் மற்றும் சர்வதேச பத்திரிகையாளர்கள் விமானம் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவரப்பட்டபோது, நிமால், அந்த ஊடகவியலாளர்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்தார்.

ஒரு சமூக ஆர்வலராகவும் இருந்தார், நிமலராஜன். "வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின்" செயலாளராக அவர் இருந்தபோது, காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்களுக்கு கரப்பந்தாட்ட வலை, பந்து மற்றும் சில புத்தகங்கள் என்பவற்றை நன்கொடையாக வழங்கினார். கிறிஸ்மஸ்நேரத்தில் யாழ்ப்பாண மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளிகளுக்கு பிஸ்கட் கொடுத்தார்.

1999 ஆம் ஆண்டு உதயன் அலுவலகத்தின் மீது கிரனைட் வீசப்பட்டபோது, வட இலங்கை பத்திரிகையாளர் சங்கச் செயலராக இருந்த நிமால், தானே முன்னின்று பஸ்நிலையத்துக்கு முன்னால் கண்டன ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்ததுடன் சுலோக அட்டைகளையும் தானே எழுதி எடுத்துவந்தார்.

யசூஷி ஆகாசி, எரிக்சொல் ஹெய்ம் போன்றவர்கள் இலங்கை அரசுக்கும் புலிகளுக்குமிடையே சமாதானத் தூதுவர்களாக பணியாற்றியது உலகறிந்த விடயம். ஆனால் நிமலராஜன் இலங்கை அரசுக்கும் புலிகளுக்குமிடையே

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாச் சந்தைகளும் தமிழ் அரசியல்வாதிகளும்

○ நிலாந்தன்



கிளிநொச்சியைச் சேர்ந்த ஓர் ஊடகவியலாளர் சொன்னார்," திருநகரிலும் உதயநகரிலும் கொரோனாச் சந்தைகள் இயங்குவதாக". பிரதான சந்தைகள் மூடப்பட்ட காரணத்தால் தற்காலிக கள்ளச் சந்தைகளாக இவை இயங்குகின்றன எனவும்ம் அவர் தெரிவித்தார். சில சமயங்களில் உதயநகர் சந்தையில் படைத்தரப்பும் வாகனத்தை நிறுத்திவிட்டு பொருள் வாங்குவதை தான் கண்டேன் எனவும் சொன்னார். இதைப்போலவே யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஓர் ஊடகவியலாளர் சொன்னார், கொக்குவில் இந்து பள்ளிக்கூடத்தின்மை தான வீதியில் காலை வேளைகளில் ஒரு மீன் சந்தை இயங்குகிறது எனவும் அது மிகவும் நெரிசலான ஒரு சந்தை என்றும். யாழ்ப்பாணம் பாசையூர் சந்தையும் இயங்குகிறது.

இடையில் பொலிஸாரோடு சில முரண்பாடுகள் வந்தன. வழமையான நாட்களோடு ஒப்பிடுகையில் சனத்தொகை குறைவு என்றாலும் அதுவும் ஒரு சனத் திரட்சிதான்.

இப்படித்தான் யாழ் திருநெல்வேலி சந்தையும் , அயலில் இருக்கும் உள் வீதிகளில் சிதறி இயங்குகிறது. இடைக்கிடை பொலிஸார் பாய்வார்கள். எனினும் பொலிஸாரை கண்டதும் மூடி, பொலிஸார் போனதும் திறந்து ஆங்காங்கே வீதியோரங்களிலும் வீடுகளுக்குள்ளேயே சிறு சிறு சந்தைகள் இயங்குகின்றன.

யாழ்.-பருத்தித்துறை வீதியிலும் தோட்டக்காணிகள் அதிகமுள்ள பகுதிகளில் குறிப்பாக புத்தூர் பகுதியில் வீடுகளுக்குள் சந்தைகள் இயங்குகின்றன என ஒரு செய்தியாளர் தெரிவித்தார்.

மேற்படி உத்தியோகப்பற்றற்ற சிறிய சந்தைகள் யாவும் அவற்றின் விளைவுகளை கருதிக்கூறின் மெய்யான பொருளில் கொரோனாத் தொற்றுச் சந்தைகளே என்று ஒரு நண்பர் கூறினார். ஏனெனில் இந்தச் சிறு சிறு சந்தைகள் யாவும் சில சமயங்களில் வைரஸ் தொற்றுக் கொத்தணிகளாக மாறக்கூடிய வாய்ப்பு உண்டு என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கண்டி வீதியில் போய் நின்று பார்த்தால் தெரியும், டிப்பர்கள் வழமைபோல ஓடுகின்றன. இது இப்பொழுது மட்டுமல்ல உலகத் தொற்றுநோய் பீடித்த நாள்களிலிருந்து எல்லா தொற்றலைகளின் போதும் எல்லா சமூக முடக்கங்களின் போதும் கண்டி வீதி பெருமளவுக்கு பொது சன நடமாட்டம் இன்றி வெறிச்சோடிக் கிடந்த நாள்கள் எல்லாவற்றிலும் டிப்பர்கள் மட்டும் போவதையும் வருவதையும் காணலாம். பூநகரி வீதியிலும் அப்படித்தான். ஒரு பெரும் தொற்றுநோய் காலத்திலும் கிளிநொச்சியில் அக்கராயனில் மரங்களை வெட்டி மண் அகழப்படுகிறது என கிளிநொச்சியை மையமாகக் கொண்ட ஊடகவியலாளர் தெரிவித்தார். அரசாங்கம் அத்தியாவசிய தேவைகள் என்று சொல்லி ஒரு தொகுதி சேவைகளைப் பட்டியலிட்டிருக்கிறது. அதன் பிரகாரம் மீன் பிடிக்கலாம் , வேளாண்மை செய்யலாம். கட்டடம் கட்டலாம். அப்படியென்றால் பிடித்த மீனை எங்கே எப்படி விற்பது? விவசாய விளைபொருள்களை எங்கு எப்படி விற்பது? இது விடயத்தில் அரசாங்கம் நடமாடும் வியாபாரிகளை அனுமதித்திருக்கிறது. நடமாடும் வியாபாரிகள் ஆங்காங்கே உள்வீதிகளில் சில இடங்களில் வீதியோரங்களில் நின்று சிறு சந்தைகளை திறந்து விடுகிறார்கள். இதுதான் தமிழ் பகுதிகளில் பயணத் தடை அல்லது சமூகமுடக்கத்தின் தொகுக்கப்பட்ட சித்திரமாகும். அப்படியென்றால் பயணத்தடை அல்லது சமூக முடக்கத்தின் நோக்கம் என்ன ? அல்லது இதை மாற்றியும் கேட்கலாம் அரசாங்கம் சமூகத்தை முழுமையாக முடக்கத் தயாரில்லையா? அதனால்தான் உத்தியோகப்பற்றற்ற விதங்களில் சிதறிப்போன சிறிய சந்தைகளை அல்லது கொரோனா சந்தைகளை கண்டும் காணாமல் விடுகிறதா? ஆம். அரசாங்கம். பயணத்தடையையும் சமூகமுடக்கத்தையும் இறுக்கமாகக் கடைப்பிடிக்கத் தயங்குகின்றது. ஒருபுறம் பொருளாதார நெருக்கடிகள்; கடன்சுமை; பங்களாதேஷிடமே கடன்வாங்க வேண்டிய ஒரு நிலை இன்னொருபுறம் வைரஸ். போதாக்குறைக்கு கொழும்புத் துறைமுகத்தில் இரசாயனங்களுடன் ஒரு கப்பல் எரிந்து மூழ்கிவிட்டது. இது கடற்றொழில் வாணிபத்தைப் பாதிக்கும். இப்படியாக பன்முக நெருக்கடிகளுக்குள் அரசாங்கம் ஒரு முழு முடக்கத்துக்குப் போகத் தயங்குகிறது.

ஆனால் முழுமுடக்கமோ அரை முடக்கமோ பாதிக்கப்படுவது எதுவென்றாலும் அன்றாடம் காய்ச்சிகளும் கீழ் மத்திய தரவர்க்கத்தை சேர்ந்தவர்களும்தான். அவர்கள் பொருள்களைத்தேடி வீதிக்கு வருகிறார்கள். பிரதான சாலைகளில் தடைகளை ஏற்படுத்தி படையினரும் பொலிஸாரும் நிற்கிறார்கள். சிலவேளைகளில் பயணத்தடையை மீறி வருகிறவர்களை அடிக்கவும் செய்கிறார்கள். ஆனால் உட்தெருக்களில் வாழ்க்கை வழமை போல இயங்குகிறது.

பெருநகரங்களில் இருப்பதைப்போல ஒன்லைன் விநியோகத்துக்கான வலைப்பின்னல்கள் தமிழ் மக்கள் மத்தியில் பலமாக இல்லை. இதனால் ஒன்லைன் விநியோகம் எனப்படுவது சீரானதாக இல்லை. அதிலும் குறிப்பாக சில பூட்சிற்றிகளின் இலக்கங்கள் மக்களுக்கு தரப்பட்டன. ஆனால் அந்த இலக்கங்களுக்கு அழைத்தால் பதில் கிடைப்ப தில்லை என்று சனங்கள் முறையிடு கிறார்கள். எனவே ஒருபுறம் உற்பத்தியை அனுமதித்துவிட்டு இன்னொருபுறம் சந்தைகளை மூடுவதன் மூலம் அரசாங்கமே உத்தியோகப்பற்றற்ற விதமாக உள்ளூரில் சிதறிய சிறிய சந்தைகளை ஊக்குவிக்கின்றதா? இந்த வாரம் சில தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சில விடயங்களை சுட்டிக்காட்டிப் பேசியிருகிறார்கள். இது தவிர தமிழ்க் கட்சிகளும் தன்னார்வலர்களும் ஆங்காங்கே நிவாரணம் வழங்குவதைக் காண முடிகிறது. எனினும் முன்னைய கொரோனாத் தொற்று அலைகளோடு ஒப்பிடுகையில் இம்முறை புலம்பெயர்ந்த தமிழ் தரப்பின் ஈடுபாடு குறைவாகவே காணப்படுகிறது. லண்டனைச் சேர்ந்த சில புலம்பெயந்த தமிழர்கள் தமிழ்ப்பகுதிகளுக்கு பி.சி.ஆர். கருவிகளை வழங்க முன்வந்ததாகத் தெரிகிறது. ஆனால் அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது. முதலாவது தொற்றலையின்போது பெருமளவுக்கு அள்ளிக்கொடுத்த புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம், பிந்திய அலைகளின் போது அந்தளவுக்கு உதவவில்லை என்று தெரிகிறது. அதுபோலவே கட்சிகளும் தன்னார்வ நிறுவனங்களும் முதலாவது அலையின்போது உதவிய அளவுக்கு பின்வந்த அலைகளில் உதவவில்லை. சமூக முடக்கம் ஒரு பழகிப்போன விடயமாக மாறிவிட்டதே இதற்கொரு காரணம். ஆனால் இதனால் பாதிக்கப்படுவது அன்றாடம் காய்ச்சிகள்தான்.

இது தொடர்பில் அரசியல்வாதிகளும் கட்சிகளும் அரசியல் செயற்பாட்டாளர்களும் சமூக செயற்பாட்டாளர்களும் குறிப்பாக சிவில் சமூகங்களும் ஊடகங்களும் மத நிறுவனங்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய ஒரு தேவை இருக்கிறது. ஆனால் அவற்றை யார் ஒன்றிணைப்பது? அதைச்செய்ய வேண்டியது தமிழ் கட்சிகள்தான் தமிழ்மக்களுடைய பிரதிநிதிகள்தான். ஆனால் அவர்களில் அனேகர் நாடாளுமன்றத்தில் உரையாற்றுவது அல்லது தெரிந்தெடுக்கப்பட்ட சில இடங்களுக்கு நிவாரணம் வழங்குவது என்பவற்றுக்கும் அப்பால் சமூகத்துக்கு வழி நடத்த வேண்டிய தமது பொறுப்புகளிலிருந்தும் தவறுகிறார்கள் என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

**முழுமுடக்கமோ அரை முடக்கமோ பாதிக்கப்படுவது எதுவென்றாலும் அன்றாடம் காய்ச்சிகளும் கீழ் மத்திய தரவர்க்கத்தை சேர்ந்தவர்களும்தான். அவர்கள் பொருள்களைத்தேடி வீதிக்கு வருகிறார்கள். பிரதான சாலைகளில் தடைகளை ஏற்படுத்தி படையினரும் பொலிஸாரும் நிற்கிறார்கள். சிலவேளைகளில் பயணத்தடையை மீறி வருகிறவர்களை அடிக்கவும் செய்கிறார்கள். ஆனால் உட்தெருக்களில் வாழ்க்கை வழமைபோல இயங்குகிறது.**



சமூகமுடக்க காலத்தில் அரசாங்கத்தின் கைகளிலேயே எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு சாதாரண ஜனங்களோடு சேர்ந்து முடங்கிப்போவதற்கு மக்கள் பிரதிநிதிகள் தேவையில்லை. சமூகம் முடக்கப்பட்டி ருக்கும் ஒரு காலகட்டத்தில் தெருவில் இறங்கி தமக்கு இருக்கக்கூடிய சிறப்புரிமையை பயன்படுத்தி ஏதோ ஒரு விதத்தில் சமூகத்துக்கு விழிப்பூட்ட வேண்டியது தமிழ் அரசியல்வாதிகளும் மக்கள் பிரதிநிதிகளும்தான். ஆனால் எத்தனை பேர் அதை செய்கிறார்கள்? அல்லது அவர்களால் ஏன் அப்படிச் செய்ய முடியவில்லை? போரால் சப்பித்துப்பிவிடப்பட்ட மக்களை வைரஸுக்குப் பலிகொடுக்கக்கூடாது. அதாவது தொற்றுச் சங்கிலியை உடைக்க சமூக விழிப்பு அவசியம். ஒருபுறம் வைரஸுக்கு எதிராகாகவும் இன்னொருபுறம் சமூக முடக்கத்தை எதிர் கொள்ளவும் தமிழ்ப் பொது உளவியலைத் தயார்படுத்த வேண்டும். தமிழ்க் கட்சிகளுக்கு

(15 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐரோப்பாவின் சந்தையாக கொழும்பு போர்ட் சிற்றி மாறும்



## மேற்குலகத்துடன் தொடர்புகளை உருவாக்கும் அந்த இராஜதந்திரி யார்?

அ.நிக்ஸன்

கொழும்பு போர்ட் சிற்றியெனப்படும் கொழும்பு சர்வதேச வர்த்தக நிதி நகரத்தை சீனா வடிவமைப்பதால், எதிர்வரும் காலங்களில் இலங்கை சீனாவின் பக்கமே முற்றுமுழுதாகச் சாய்ந்துவிடுமென ஈழத்தமிழர்கள் பலரும் எதிர்பார்க்கின்றனர். நம்புகின்றனர். ஆனால் சிங்கள மக்கள் அவ்வாறான சிந்தனையில் இல்லையெனலாம்.

இலங்கையின் இறைமை சீனாவிடம் சிறிதளவேனும் பங்கிடப்படக்கூடாது. ஆனால் சீனாவிடம் உதவிகளைப் பெற வேண்டும் என்ற பகிரங்க நோக்கமே சிங்கள ஆட்சியாளர்கள் உள்ளிட்ட அனைத்துச் சிங்கள மக்களிடமும் விஞ்சிக் காணப்படுகின்றது. இந்த உள்நோக்கமே இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட போர்ட் சிற்றிக்கான பொருளாதார ஆணைக்குழு சட்ட வரைவுக்குச் சிங்கள எதிர்க்கட்சிகள் எதிர்ப்புடன் கூடிய மறைமுக ஆதரவை வழங்கியதன் பின்னணி எனலாம்.

சீன அரசு முழுமையான உரித்தாளராக இருந்தாலும். கொழும்பு போர்ட் சிற்றியில் ஐரோப்பிய மற்றும் மேற்குலக நாடுகளின் முதலீட்டாளர்களும் முதலீடுகளைச் செய்ய வேண்டுமென்ற நோக்கிலேயே இலங்கை செயற்படுகின்றது.

ஏனெனில் இந்த ஆண்டு ஜனவரி மாதம் பிரித்தானியாவைச் சேர்ந்த உலகப் புகழ்பெற்ற முதலீட்டாளரும் ரோத்ஸ்சைல்ட் குடும்ப உறுப்பினருமான நதானியேல் ரோத்ஸ்சைல்ட் (Nathaniel Rothschild) கொழும்புக்கு வந்திருந்தார். அவர் கொழும்புத் துறைமுக வர்த்தக நிதி நகரத்துக்கும் சென்று பார்வையிட்டிருக்கிறார்.

அவருடன் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட பிரபல பிரித்தானிய் அரசியல்வாதியும் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான நிரஞ்சன் ஜோசப் டி சில்வா தேவாவும் (73 வயதான நிரஞ்சன் தேவா, பிரித்தானிய இலங்கை ஆகிய நாடுகளின் இரட்டைப் பிரஜா உரிமையுள்ளவர்) கூடச் சென்றிருந்தார்.

1999 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வரை ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்தவர் நிரஞ்சன். தற்போது இலங்கையில் தேயிலை,றப்பர் மற்றும் தென்னந் தோட்டங்கள் போன்ற வர்த்தகச் செயற்பாடுகளை இலங்கையில் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றார். அதற்கேற்ப தனியார் நிறுவனம் ஒன்றை இயக்கி அதன் நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் நிரஞ்சன் உள்ளார்.

வடக்குக் கிழக்கில் வாழும் ஈழத் தமிழர்கள் பௌத்தர்களாக ஏன் மாறக் கூடாது அல்லது ஏன் மாற்றிவிடக்கூடாது என்ற சிந்தனையைத் தோற்றுவித்தவர் நிரஞ்சன் தேவா.

2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் 2006 ஆம் ஆண்டு வரை, நோர்வேயின் ஏற்பாட்டோடு சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றிருந்த காலப்பகுதியில் , விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் மேற்கொண்ட நடவடிக்கைகள் அனைத்துக்கும் இவருடைய செயற்பாடுகளே காரணமாக அமைந்திருந்தன. இவர் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இலங்கைக்குமான ஒரு நிழல் தூதுவராகவும் அன்று செயற்பட்டிருந்தார். இலங்கைக்கான நிரஞ்சன் தேவாவின் சேவையைப் பாராட்டி, பௌத்த மகா சங்கம் 2006 ஆம் ஆண்டு விஸ்வகீர்த்தி ஸ்ரீலங்கா அபிமானி என்ற பட்டத்தையும் வழங்கிக் கௌரவித்திருந்தது.

ஆகவே ஐரோப்பிய மற்றும் மேற்குலக நாடுகளின் நம்பிக்கைக்குப் பாத்திரமான மூத்த சர்வதேசஅரசியல்வாதியும் சர்வதேச வர்த்தகச் செயற்பாட்டாளருமான நிரஞ்சன் தேவா, பிரித்தானிய நதானியேல் ரோத்ஸ்சைல்டடை மாத்திரமல்ல, ரஷ்ய தொழிலதிபர் ஆண்ட்ரி மெல்னிச்சென்கோவையும் சென்ற மார்ச் மாதம் கொழும்புக்கு அழைத்து வந்து போர்ட் சிற்றியைக் காண்பித்துள்ளார். மெல்னிச்சென்கோ சுவிட்ஸர்லாந்து நாட்டைச் சேர்ந்த உர நிறுவனமான யூரோசெம் குழுமத்திலும், ரஷ்யாவைச் சேர்ந்த நிலக்கரி மின் நிறுவனமான சுக் நிறுவனத்திலும் பிரதான முதலீட்டாளர். கொழும்பு போர்ட் சிற்றியின் மூலோபாயத் திட்டமிடல் குறித்து இவர் கவனம் செலுத்தியிருந்தார்.

இலங்கை முதலீட்டுச் சபைத் தலைவர் சஞ்சயா மொஹட்டாலா, அதன் இயக்குநர் ஜெனரல் பசன் வனிகசேகர ஆகியோருடனும் சென்ற மார்ச் 18 ஆம் திகதி இவர் கலந்துரையாடியிருக்கிறார்.

ஆகவே இந்த நடவடிக்கைகள் எதிர்க்கட்சிகள் உள்ளிட்ட சிங்கள அரசியல்வாதிகளுக்கு நன்கு புரிந்திருக்கின்றன. இதனாலேயே பொருளாதார ஆணைக் குழுச் சட்டமூலம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

அதாவது சீனாவுடன் இணைந்து பொருளாதாரம். பௌத்த கலாசாரம் என்பதில் இலங்கை பயணிக்க வேண்டுமென்ற ஆழமான சிந்தனை 1972 ஆம் ஆண்டு இலங்கை ,பிரித்தானியாவிடம் இருந்து குடியரசாகியபோதே எழுந்தது.

ஈழவிடுதலைப் போராட்டம் 1983 ஆம் ஆண்டு ஆயுதப் போராட்டமாக மாறியபோது அதற்கு இந்தியா வழங்கிய ஆதரவால் இலங்கையின் அந்தச் சிந்தனை மேலும் வலுப்பெற்றதெனலாம்.

சிங்கள மக்களுக்கு இந்தியா தொடர்பாக இருந்த அச்சத்தை சீனா மெது மெதுவாகப் பயன்படுத்த ஆரம்பித்தது. ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மாறி மாறி ஆட்சியமைத்திருந்தாலும் சீனாவுடனான உறவைத் தமது கட்சிக் கொள்கைளுக்கு ஏற்ப வெவ்வேறு வடிவங்களில் பிரதிபலித்திருந்தன. அதன் நீட்சியே 2005 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் மெருகூட்டப்பட்டதெனலாம். ஈழத் தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை இல்லாதொழித்தால் மாத்திரமே இந்தோ- பசுபிக் பிராந்தியப் பாதுகாப்பைப் பலப்படுத்த முடியுமென 2009 ஆம் ஆண்டு அமெரிக்காவும் இந்தியாவும் கூட்டாக நம்பிய அந்தச் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தியது சீனா. இந்தோ- பசுபிக் பாதுகாப்பில் ஆதிக்கத்தைச் செலுத்த யார் முந்துவது என்பதில் எதிரும் புதிருமாகப் போட்டியிட்டு வந்த அமெரிக்கா, சீனா, இந்தியா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகள் புலிகளை ஒழிப்பதில் கூட்டாக உதவியளித்திருந்தன என அப்போது பிரதமராக இருந்த அமரர் ரட்ண சிறிவிக்கிரம நாயக்கா 2010 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் பகிரங்கமாகவே கூறியதோடு நன்றியும் தெரிவித்திருந்தார். ஆனால் 2009 ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னரான சூழலில் இலங்கையில் அதிகம் துணிவோடு கால்பதித்தது சீனா. போர் முடிந்ததும் 2010 ஆம் ஆண்டு 500 மில்லியன் டொலரை வழங்கிய சீனா 2011 ஆம் ஆண்டு கொழும்பு போர்ட் சிற்றிக் கான பேச்சுக்களை சீனா ஆரம்பித்தது.

சீனாவுக்கு எதிர்ப்பில்லையென சிங்கள ஆட்சியாளர்கள் ஒருமித்த குரலாகக் கூறிவருவதால், இலங்கை சீனாவின் பக்கம் சென்றுவிட்டதென சில ஆய்வாளர்கள் நம்புகின்றனர். ஆனால் இங்கு கவனிக்கப்பட வேண்டியது ஈழத்தமிழர்கள் விவகாரமே.

அதாவது 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரான சூழலில் மேற்குலகம் மற்றும் ஐரோப்பா உள்ளிட்ட புலம்பெயர் நாடுகளில் ஈழத்தமிழர்களின் அரசியல், பொருளாதாரச் செயற்பாடுகள் உள்ளிட்ட அரசியல் விடுதலைக்கான சர்வதேச ரீதியான அத்தனை செயற்பாடுகளையும் முற்றாகவே அழிக்க வேண்டுமென்பது சிங்கள ஆட்சியாளர்களின் பிரதான இலக்கு. அதற்கு அமெரிக்காவும் இந்தியாவும் தேவை என்பதைப் புரியாதவர்கள் அல்ல சிங்கள ஆட்சியாளர்கள். ஆனால் இலங்கையை நோக்கி அமெரிக்காவும் இந்தியாவும் கீழறங்கி வரவேண்டும் என்பதே அவர்களின் இராஜதந்திரம். இதனை இரண்டு வகையாகப் பார்க்கலாம். ஒன்று இந்தியாவைக் கடந்து அனைத்து நடவடிக்கைகளுக்கும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகமும் ஐரோப்பிய நாடுகளும் இலங்கையிடம் வர வேண்டும் என்பதே முக்கிய நோக்கம்.



அதாவது 2009 ஆம் ஆண்டு மே மாதத்துக்கு முன்னர் ஈழத்தமிழர் விவகாரம் உள்ளிட்ட இலங்கை குறித்த விடயங்களை அமெரிக்கா போன்ற வல்லாதிக்க நாடுகள் புதுடில்லியைக் கேட்டுத்தான் கையாண்டு வந்தன. ஆனால் 2009 ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னர் இலங்கைக்கு இந்தியா தேவையில்லை என்ற நம்பிக்கை சிங்கள ஆட்சியாளர்களுக்குப் பிறந்துவிட்டது. இரண்டாவது அமெரிக்கா, சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளோடு சமாந்தரமான உறவுகளைப் பேணுவது.

(11 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பள்ளிச் சட்டை

சஞ்சீவி **சிறுகதை**

அகமது ஃபைசல்

"சிரட்டை !! சிரட்டை கிலோ பத்து ரூபா!! சிரட்டை!!"

லொறி நிறைய சரிந்து விழுந்தபடி கிடந்தன சிரட்டைகள். லொறி ரைவரைப் பார்த்தால்; சின்ன வயதில் முடி கொட்டி சிரட்டை மாதிரியே அவர் தலையும் இருந்தது. சோளம் மீசை போல முகத்தில் சிறிய கலர் மீசை. தோற்றம் இந்த ஊர்க்காரன் மாதிரியே இல்லை. வீடு வீடாக லொறியை நிறுத்தி நிறுத்தி "சிரட்டை சிரட்டை கிலோ பத்து ரூபாய்" என்று கூவினான். ஓடி வந்து வாசல் கதவைத் திறந்தாள் மூறா. காற்றில் கதவு ஆடியது. குறுக்கே ஒரு கல்லை வைத்தாள். காற்றில் கல் ஆடியது. அந்தக் கல்லுக்குப் பக்கத்தால் தனியே ஒரு எறும்பு பயமே இல்லாமல் ஒரு முறை கல்லை அண்ணாந்து பார்த்துவிட்டு ஊர்ந்து சென்றது. அவள் விடுமுறையில் கடற்கரைக்குச் சென்று மலையை அண்ணாந்து பார்த்தது ஞாபகத்தில் வந்து நின்றது.

இந்த ஆண்டெல்லாம் சிரட்டை விற்ற காசை அரிசிப் பானைக்குள்ளிருந்து எடுத்து உடனே எண்ணிப்பார்த்தாள் சின்னப்புள்ள. வீடு, வளவு, மூலை முடுக்கெல்லாம் பதுங்கிக் கிடக்கும் சிரட்டைகளைத் தேடத் தொடங்கியிருந்தாள் மூறா. கனநேரத்துக்குப் பிறகு கையில் ஒரு பை சிரட்டைகளுடன் வீட்டுக்கு முன்னால் நிற்கும் அந்த லொறியின் பின் பக்கம் வந்து நின்றாள் மூறா. கம்பிக் கூண்டுக்குள் சரிந்து கிடக்கும் சிரட்டைக் குவியலைப் பார்த்தாள். அவள் கையில் இருந்த பையை வாங்கித் தூக்கி அதன் நிறையைப் பார்த்தான் ரைவர். லொறிக்குள் கிடந்த சில சிரட்டைகள் அவளைப் பெருமையாக தலை நிமிர்ந்து பார்த்தன. நேற்றுத்தான் பிரியாணிக்குத் துருவியிருக்கு என்ற பெருமை அந்த சிரட்டைகளின் கண்களில் தெரிந்தது. ரொட்டிக்குத் துருவிய சிரட்டைகள்தான் அதிகமாக தலை குனிந்து கிடந்தன. பழைய சோற்றுக்குத் துருவியவைகள் அங்கே வீதியைப் பராக்கு பார்த்துக்கொண்டு கிடந்தன. எந்தக் கவலையும் இல்லாமல் சில சிரட்டைகள் லொறியின் கண்ணாடி வழியே வீதியைப் புதினம் பார்த்துக் கிடந்தன.

மூறாவின் சிரட்டைகளை கம்பிக் கூண்டுக்குள் தூக்கிப் போட்டான் ரைவர். ஏதோ பாஷையில் சத்தம் போட்டுக்கொண்டு விழுந்த சிரட்டைகள் சட்டென அமைதியாகின. ஊத்தை பிடித்த ஒரு சீலைப் பையின் 'ஷிப்பைத்' திறந்து இருபத்தைந்து ரூபாவை எடுத்து மூறாவின் கையில் வைத்தான் ரைவர். மீன் விழுந்த தராசு போல் அவள் கை கீழே போய் மேலே வந்தது.

கம்பிக் கூண்டுக்குள் போய் விழுந்த மூறாவின் சிரட்டையில் ஒன்று அவளைப் பார்த்து.அழுதது. நேற்று மூறா சமைத்த மண் சோறு மிச்சம் அதில் ஒட்டியிருந்தது. அவள் இருபத்தைந்து ரூபாவைப் பார்த்துப் பார்த்து வீட்டுக்குள் ஓடினாள்.

"முன்னூத்தி இருபது ரூவா இருக்கி .ஒனக்கு வெள்ளச் சட்டத் துணி வாங்கக் காணும்" என்றாள் சின்னப் புள்ள. "இந்த அஞ்சி ரூவாக்கு நான் ஐஸ்பழம் வாங்கட்டா உம்மா?" எனக்கேட்டு இருபது ரூபாவை மட்டும் நீட்டினாள். "எடு" என்று ஒரு சொல்லோடு முடித்தாள் சின்னப்புள்ள. எதிர்பார்ப்பின் வெற்றி மூறாவின் முகத்தில் வழிந்தோடியது. பக்கத்து சில்லறைக் கடையில் ஒரு சிவப்பு நிற ஐஸ்பழம் வாங்கிச் சூப்பிக்கொண்டு திரும்பி வந்தாள்.

மேல் உதடும் கீழ் உதடும் குளிரில் விறைத்து, சிவந்திருக்க, ஐஸ்பழத்தைச் சூப்பிக்கொண்டு வீட்டுப் படிக்கட்டில் அமர்ந்திருந்தாள். "வா டெயிலரிட்ட போய் சட்டைக்கு அளவு குடுத்துட்டு வருவம்" உம்மாவின் குரல் காதில் விழுந்தும் படிக்கட்டை விட்டு எழாமல் குளிரில் விறைத்த உதட்டில் உள்ளங் கையை வைத்து அமுக்கி அமுக்கி உதட்டின் மெல்லிய குளிரோடு உறவாடினாள் மூறா. காலை நேரத்து வெயில் படிக்கட்டைத் தூக்கிக்கொண்டு மேலே உயர்வதுபோல் இருந்தது. மூறா, உம்மாவுக்குப் பின்னாலே ஓடிச் சென்று புடவை முந்தானையில் வாயைத் துடைத்துக்கொண்டாள். முந்தானையில் அவள் உதடு ஒட்டிக் கொண்டு சென்றது.

இருவரும் நடந்து பாரிஸ்க்காரியின் வீட்டுக்குச் சென்றார்கள். அவள்மீது ஒரு தப்புமில்லை. இந்த ஊரார்தான் அவளை பாரிஸ்க்காரி என்று சொல்லுவினம். அவள் ஒரு டெயிலர். அவள் புருசன் பாரிஸில் வேலை செய்கிறான். அவள் பாரிஸ் பவுடர்தான் போடுகிறாள், பாரிஸ் சென்ட் தான் பாவிக்கிறாள், பாரிஸ் ஷம்போதான் தேய்க்கிறாள். எல்லாத்துக்குமாகச் சேர்த்து அவளைப் பாரிஸ்க்காரி என்பர் ஊர்சனம். அவள் தைக்கும் உடுப்புக்கு என்னவொரு மவுசு. பாரிஸிலிருந்து புருசன் அனுப்பிய வெள்ளைத் துணி லெந்தை குறைந்த விலையில் பள்ளிப் பிள்ளைகளுக்கு சட்டை தைத்துக் கொடுத்தாள்.

முதலில் கேட்டைத் திறந்தாள் மூறா. மூறாவைக் கண்டதும் "வாங்க ஜக்கிச்சான்" என்றாள் அவள். மூறாவின் தலை முடி அவளுக்கு ஜக்கிச்சானை நினைவுபடுத்தாமல் விட்டதில்லை. அவளும் ஜக்கிச்சான் படங்கள்தான் பார்ப்பாள்.

அவள் வாப்பா உயிரோடுதான் இருக்கிறார். நரை விழுந்து, வீட்டுக்கு ஒரு காவலாக. நல்ல வெள்ளை மனிதர். இந்த வயதிலும் அவரிடம் அழகு இருந்தது. சுறு சுறுப்பும் இருந்தது. இசை முரசு நாகூர் ஈ.எம். ஹனீபாவின் தீவிர ரசிகர். "லெப்பைக் க லெப்பை அல்லாஹும்ம லெப்பை" என்ற பாடலைப் பாடி, தனது வலது தொடையில் கையால் தாளம் போட்டார். அவரது சுருங்கிய நெற்றித் தோல் இலேசாக உரிந்திருந்தது. அவர் பாட்டுக்கு ஏதாவதொரு வேலையைத் தூக்கிப் போட்டுச் செய்வார். உம்மா வாய் பேச வராதவள். ஊமை. பார்த்தால் ஜெயலலிதாவை பார்க்கிற மாதிரியே இருக்கும் முக பாவனை.

"என்ன ஷம்போ பாவிச்சாய் இன்னிக்கு. வீடே மணக்குது" கேட்டாள் சின்னப் புள்ள.

"அவரு அனுப்பின ஷம்புதான் ராத்தா" என்றாள் அவள். அவள் தலை மயிர்களிலிருந்து எழுந்த நறுமணத்தின் கரங்கள் சின்னப்புள்ளைக்கு ஒரு உற்சாகத்தைக் கொடுத்தன.

"சுணங்க நேரமில்ல. நாளைக்கு பள்ளிக்கூடம் போக மூறாவுக்கு சட்ட வேணும் சரியா?" என்றாள்.

"இரிங்க ராத்தா மூறாட சட்ட அளவ எடுத்துடுறன்" என்று பாரிஸ்க்காரி அந்த முதுகுப் பக்கம் உயர்ந்த நாற்காலியிலிருந்து எழுந்தபோது அவள் மடியில் கிடந்த சீலைத் துண்டுகள் சத்தமே இல்லாமல் கீழே விழுந்தன. பூக்களின் இதழ்கள் பூமியில் சத்தமின்றி விழுதல்போல்.

மூறாவின் கைக்குள் மூச்சுத்திணறியது ஒரு நாவற் பழம். வாய்க்குள் இன்னொன்று "எனக்கும் நாவற் பழமெண்டா நல்ல விருப்பம் ராத்தா. இந்த சீசனுக்கு அவர் இருக்கணும். நாவற்பழம் காலுக்கும், கைக்கும் மிதிபடும்" என்று தன் கீச்சுக் குரலில் சொல்லிக்கொண்டு அளவு நாடாவைக் கையில் எடுத்தாள். அந்த நாடா ஒரு செத்த பாம்பைப்போல் ஆடியது. மூறாவின் இடுப்பைச் சுற்றியது, தோளைச் சுற்றியது, கை இரண்டையும் சுற்றி, அளவு எடுத்து ஒரு கொப்பியில் எழுதி எடுத்துக்கொண்டாள்.

திரும்பவும் தனது கதிரையில் போய் அமர்ந்து கொண்டாள். கொஞ்ச நேரம் தையல் மெசினுக்கு முன்னால் திறந்து கிடந்த ஜன்னல் வழியாக வானத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். வானம் பிளந்து தொங்குவது போன்ற ஒரு பயம் அவள் மனதில் தொற்றிக் கொண்டது. "எதுக்கு வானத்த விழுங்குற. புருசனுக்கு கோல் பண்ணி ஊருக்கு வரச்சொல்லு" என்றாள் சின்னப் புள்ள. அவள் கண்களுக்குள் தோன்றிய ஜன்னல் கம்பிகளில் இரண்டில் மட்டும் சில கண்ணீர்த் துளிகள் இருந்தன. கேற் பக்கத்தில் நிற்கும் நொக்ஸ் மர நிழலில் ஒரு பழைய கதிரையைப் போட்டு அமர்ந்திருக்கும் அவள்ட வாப்பா வலது காதிலிருந்து பிடுங்கிய ஒரு சோடி மயிரை விரலில் பிடித்து வைத்து உற்றுப் பார்த்தார். "யார் பேச்சையும் கேட்காத மயிர் இது தான்" என்று சொல்லிச் சிரித்தார். அவரின் ஊமைப் பொண்டாட்டியும் சிரித்தாள். காற்றை ஈனாத வலியில் துடிக்கும் அந்த மர நிழல் போல இருந்தது அவர் மனைவி சிரித்தது.

"சப்பாத்து கட்ரே... கொட கட்ரே... பாட்டாக் கட்ரே..." தெருவால் ஒருவன் கூவிக்கொண்டு போனான். "எடி மகளே குடை கட்டுறவனைக் கூப்புடுடி. உன்ர குடைய கட்டியெடுக்க" என்று சத்தமாக மகள்ட காதுக்குள் கூவி வைத்தாள் சின்னப் புள்ள. ஓடிப்போய் கேட்டை திறந்துகொண்டு தெருவுக்கு இறங்கினாள் மூறா. வலதுகால் விரல்களை உள்ளே மடித்துக்கொண்டு நிற்பவனைப்போல் கேற் அருகில் வந்து நின்றவன் "சப்பாத்து கட்ரே....கொட கட்ரே....பாட்டாக் கட்ரே..." என்று இன்னும் ஒரு தரம் கூவினான். "நான் போய் விடியக்க வாரன். சட்டையத் தச்சி வை புள்ளே" என்று வேகமாக பாரிஸ்க்காரியின் வீட்டுப் படியை விட்டு வெளியே இறங்கிபோது,

" என்ன சின்னப் புள்ள போகயா" என்றார் அந்த நிழல் வாசி.

"ஓம் மாமா வாறன் நான்" என்று சொன்ன பதிலையும் தன் கூடவே கொண்டுபோகும் வேகத்தில் கேற்றைத் திறந்து தெருவில் இறங்கினாள்.

செருப்பில்லாமல் அவள் பின்னால் நடந்து சென்றான் அவன். கூவுவதையும் விட்டுவிட்டான். மூறா அவன் வாயை திரும்பித் திரும்பிப் பார்த்தாள். அப்போதுதான் அவன் சிரித்தான்.

அவன் கால்கள் கருங்கல் போலவே இருந்தன. வலதுகாலில் ஐந்து விரல்களும் தேய்ந்து அடியோடு காணாமல் போயிருந்தன. இன்னும் ரெண்டு வீடு கழிய நடக்க வேண்டியிருந்தது அவனுக்குத் தெரியாது. ஆனால் "அங்க வேலிக் கம்புல ஒரு மைனா நிற்குதே அந்த வீடுதான்" என்று சொல்லி வேகமாக சின்னப்புள்ள நடந்த கைக்குத்தான் அது அவனுக்குத் தெரியவந்தது. வீட்டுக்குள் ஓடிப்போய் அவள் படிக்கும் மேசையில் கிடந்த குடையை எடுத்துக்கொண்டு வந்து வாசலில் இறங்கிவிட்டாள் மூறா.

பாதித் தூக்கத்திலே வைத்து ஒப்பரேஷன் தியேட்டருக்குள் அழைத்துச் சென்ற நோயாளியைப்போல் இருந்தது குடை. அவன், வீட்டுப் படியில் இருந்துகொண்டு இரண்டு கால்களையும் மணலில் நீட்டி வைத்துக்கொண்டான். உள்ளே அரைக் கழிசான் போட்டிருந்தான். என்றைக்கோ மண்ணுக்குள் புதைந்து துருப்பிடித்து வெளியே வந்து கிடக்கும் ரெண்டு கம்பித் துண்டுகள் போல் கிடந்தன அவன் கால்கள். கொடியில் காயும் மூறாவின் வெள்ளைக் கால்மேசு அவன் கண்ணில் பட்டது. குடையை பாதி விரித்தான். ஒரு கம்பி உடைந்திருந்தது. அதை வெளியே எடுத்தான். உடைந்த கம்பிக்கு பகரமாக வேறு ஒரு புதிய கம்பியைப் போட்டுத் தைத்துக்கொண்டிருந்தான். "இது உங்கட குடைதானா?" என்று மூறாவைப் பார்த்துக் கேட்டான். அவள் வேலி ஓணான் போல் தலை ஆட்டினாள். குடை தைத்து முடிந்தது. அவன் நன்றாக குடையை விரித்தான். ஆனால் மழை வரவில்லை. வெயில் வந்திருந்தது.

சின்னப் புள்ள வாசலில் இறங்கினாள். அவன் கையில் விரிந்து கிடந்த குடையை சிரிப்போடு பார்த்தாள். "ராத்தா குடை தச்சிட்டன். எனக்கு காசி வேணாம்" என்று சொல்லி விட்டு கொஞ்சம் அமைதியாக இருந்தான். அப்போதுதான் ஒரு கிளியின் குரல் குறுக்கே பாய்ந்து சென்றது. " உங்க மகள்ட வயசில எனக்கு ஒரு மகள் இருக்கிறாள். அவளுக்கு பள்ளிக்குப் போக நல்ல சட்டை இருந்தா தா ராத்தா. உன்ட மகளுக்கு அந்தக் கடவுள் நல்ல படிப்பைக் கொடுப்பான்" அவன் குரல் தள தளத்து ஒலித்து ஓய்ந்தது. அந்த நிமிடமே அவன் பிரார்த்தனை நிறைவேறியதோ என்னவோ அவள் காற்றில் மிதக்கும் பஞ்சாகினாள்.


உடனே வீட்டுக்குள் ஓடினாள்.

(05ஆம் பக்கம் பார்க்க)

> இரிங்க ராத்தா மூறாட சட்ட அளவ எடுத்துடுறன் என்று பாரிஸ்க்காரி அந்த முதுகுப் பக்கம் உயர்ந்த நாற்காலி யிலிருந்து எழுந்தபோது அவள் மடியில் கிடந்த சீலைத் துண்டுகள் சத்தமே இல்லாமல் கீழே விழுந்தன. பூக்களின் இதழ்கள் பூமியில் சத்தமின்றி விழுதல்போல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் அறிமுகம்



கேதாரநாதன்

> இந் நூலைப் படித்து முடித்தபோது இந்த நூல் இத்தனை காலந்தாழ்த்தி வந்திருப்பது பற்றிய வருத்தம் உள்ளுணர்வில் படிவது தெரிகிறது. ஒரு சினிமாவைத் திரையில் பார்ப்பதென்பது ஒரு வகை. அதனை ஒரு விமர்சனத்தினூடாகப் பார்ப்ப தென்பது இன்னொருவகை.

# கேதாரநாதனுடைய எழுத்தில் 'சினிமாத்தடம்'

○ கணபதி சர்வானந்தா

கேதாரநாதனுடைய "சினிமாத்தடம்" என்ற நூலைப் பதிப்பதில் நிகரி பெருமையும் மகிழ்வும் அடைகிறது. ஈழத்தில் உள்ள விரல்விட்டு எண்ணக்கூடிய சினிமா விமர்சகர்களில் கேதாரநாதனும் ஒருவர். இரண்டு தசாப்தங்களுக்கு மேலாகப் பத்திரிகையாளராகப் பணியாற்றியவர். சிறந்த மொழிபெயர்ப்பாளர். சினிமாவோடு இலக்கியம், ஓவியம், சிற்பம் என அவருடைய ஆர்வமும் தேடலும் விரிவடைந்து செல்வது, இத்தகைய பல்துறை அறிவும் ஆற்றலும் தேடலும் கொண்ட ஒருவரை பத்திரிகையாளராகக் கொண்டிருந்ததென்பதில் வீரகேசரி பெருமையடையலாம்" என்று நிகரி வெளியீட்டாளர் சிவகுமார் தனது பதிப்புரையிலே குறிப்பிட்டிருப்பதில் இருந்து கேதாரநாதனின் கனதி பற்றி அறிந்துகொள்ளலாம்.

கேதாரநாதன் எழுதி, நிகரி வெளியீடாக வந்திருக்கும் 'சினிமாத்தடம்' நூலிலே சிவகுமார் எழுதியிருக்கும் பதிப்புரையைத் தொடர்ந்து ஒரு சினிமா செயற்பாட்டாளர் என்றதற்கு அப்பால் மானிட நேயம்மிக்க மனிதராகப் போற்றப்படும் பிரசன்ன விதானகே மதிப்புரையை எழுதியிருக்கிறார். "திரைப்படக் கலையின் நித்திய காதலன் ஜி.ரி.கே "என்றே தனது மதிப்புரைக்குத் தலைப்பிட்டிருக்கிறார் பிரசன்ன விதானகே. அதனைத் தொடர்ந்து கொ.றொ.கொன்ஸ்ரன்ரைனின் முன்னுரையும் கேதாரநாதனின் என்னுரையும் இடம் பெற்றிருக்கின்றன. மொத்தம் 212 பக்கங்கள் கொண்ட சினிமாத்தடம் நூலை உலக சினிமா பற்றிய பல கட்டுரைகளும் மொழிபெயர்ப்புகளும் அலங்கரிக்கின்றன. தான் பார்த்துச் சுவைத்த திரைப் படைப்புகளை சுவை மாறாது தமது எழுத்திகளிலே கேதாரநாதன் வடித்திருப்பது அதன் தனிச்சிறப்பு எனலாம்.

திரைப்படங்களைப் பார்க்கும் ஆர்வம் அவரைத் தொற்றிக்கொண்டது பற்றி கேதாரநாதன் தனது என்னுரையிலே குறிப்பிடும்போது "மாணவப் பருவத்திலே யாழ். றீகல் சினிமாவில் தொடங்கி.... கொழும்பு வீரகேசரி பத்திரிகை நிறுவனத்திலே பத்திரிகையாளனாகப் பணியாற்றிய காலத்தில் இந்திய, ஜேர்மனிய, ஈரானிய, சோவியத் கலாசார நிலையங்கள் மற்றும் திரைப்பட வட்டம் ஆகியவற்றினூடாகவும் திரைப்படம் பார்க்கும் எனது ஆர்வமானது அகலிப்படைந்து கொண்டிருந்தது எனவும் கூறலாம். அன்று என்னுள் எழுச்சி பெற்ற ஆர்வமானது சற்றும் தொய்வுறாமல் இன்று வரையும் நீடிக்கிறது. ஒவ்வொரு திரைப்படமும் என்னுள் தொற்ற வைத்துள்ள கலைத்துவ உணர்வு செறிந்த பதிவுகளையெல்லாம் அவ்வப்போது எழுதியும் வந்துள்ளேன்" என்று பதிவிட்டிருக்கிறார்.

இந் நூலைப் படித்து முடித்தபோது இந்த நூல் இத்தனை காலந்தாழ்த்தி வந்திருப்பது பற்றிய வருத்தம் உள்ளுணர்வில் படிவது தெரிகிறது. ஒரு சினிமாவைத் திரையில் பார்ப்பதென்பது ஒரு வகை. அதனை ஒரு விமர்சனத்தினூடாகப் பார்ப்பதென்பது இன்னொருவகை. ஒரு திரைப் படத்தைப் பார்த்தபின் அது பற்றிய ஒரு நேர்த்தியான விமர்சனத்தைப் படிக்க நேரிட்டால் அது பற்றிய கனதியை மேலும் அறிந்துகொள்ள அது உதவுவதோடு, மீண்டும் அதனைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலை ஏற்படுத்துவது தவிர்க்க முடியாததே. அவ்வாறானதொரு ஆவலைத் தூண்டுகின்ற பணியிலேயே கேதாரநாதன் தன்னை அர்ப்பணித்திருப்பதை அவரது சினிமா பற்றிய விமர்சனக் கட்டுரைகள் இயம்பி நிற்கின்றன. நல்ல சினிமாவை அடையாளங் காணும் வகையில் அதனைப் பார்த்து, அனுபவித்து, அதனைப் பல கோணங்களில் ஆராய்ந்து அறிந்தே அது பற்றிய விமர்சனத்தைப் பிரசவிக்க முடியும். அந்த வகையில் கேதாரநாதனின் விமர்சனங்கள் ஒவ்வொன்றும் பிரசவங்களே.

அவரது எழுத்துக்கள் காலந்தாழ்த்தி வருவதற்குரிய காரணத்தைத் தனது பின்னுரையிலே குறிப்பிட்டிருக்கும் எஸ்.கே.விக்கினேஸ்வரன் ,அவர் பங்களிப்புச் செய்த சரிநிகர் பத்திரிகை நண்பர்கள் முயற்சியாலேயே அவர் படைப்புகள் நூலுருப்பெறுவது சாத்தியமாகியுள்ளன எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

இலங்கை பத்திரிகை நிறுவனம் மற்றும் பத்திரிகை ஆசிரியர்கள் சம்மேளனம் ஆகிய அமைப்புகளால் அண்மையில் கேதாரநாதன் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருக்கிறார். அது மட்டுமல்லாமல் அவர் தற்போது எழுதி வெளிவந்திருக்கும் சினிமாத்தடம் என்ற நூலைத் தொடர்ந்து அவர் எழுதிய சினிமா தவிர்ந்த ஏனைய விடயங்களும் நூலுருப் பெறப்போவதாக அறிந்தோம். கேதார நாதனுக்கு எமது பாராட்டுகள்.




## பள்ளிச்

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

உஜாலா நீலம் போட்டுக் கழுவி ஸ்திரி பிடித்து, பழைய மர அலுமாரிக்குள் வைத்திருந்த மூறாவின் பழைய வெள்ளைச் சட்டை ஒன்றையும்; கையிலே பிஞ்சுக் குழந்தையைத் தூக்கித் தடவுவதுபோல் தடவி, ஒரு பட்டுத் தாள் பையுக்குள் வைத்து வந்து அவன் முன்னால் நீட்டினாள். அவன் இரு கையையும் தூக்கிக் கும்பிட்டான். பையை வாங்கியெடுத்தான். சட்டைக்கு நோகாமல் மெல்லத் திறந்து பார்த்து சொல்ல வார்த்தை வராதவனாக திரும்பி நடந்தான். அந்த ஐந்து விரல்களும் இல்லாத காலின் தடங்கள் வாசல் மணலில் ஓவியமாகக் கிடந்தன.

அன்று இரவு ஒரு நாளுமில்லாத நிம்மதியோடு உறங்கினாள் மூறா. "எப்ப உம்மா வயலுக்குள்ள காவலுக்குப் போன வாப்பா வருவாரு? " என்று கேட்டுவிட்டுத்தான் அவள் கண்களை மூடினாள். கள்ளத் தொடர்பு வைத்தவன் போல், விடியல் வந்ததும் தெரியாது போனதும் தெரியாது. காலை ஏழு மணிக்குத்தான் கண் விழித்தாள் சின்னப்புள்ள. கழுவாத முகத்தோடு பாரிஸ்க்காரி வீட்டுக்கு ஓடிப்போய் சட்டையைக் கையோடு வாங்கி வந்தாள். மகளைக் குளிக்க வைத்து அந்தப் புது வெள்ளைச் சட்டையைப் போட்டு, ரை கட்டி, சப்பாத்து, கால்மேசு எல்லாம் போட்டு சாப்பாடும் ஊட்டிவிட்டாள். தலை முடியை இரண்டு ஜடையாகப் பின்னி நீல நிற சீலையால் கட்டியும் விட்டாள். புத்தகப் பையை கேட் வரை தூக்கிக் கொண்டாள். குடையையும், தண்ணீர்ப் போத்தலையும், மாஸ்க்கையும் மூறா கையில் எடுத்தாள். முறையாய் மாஸ்க்கை அணிந்து நடந்தாள். அந்தப் புதுப் பள்ளிச் சட்டையோடு மகள் முன்னால் நடந்து போவதை பின்னால் நடந்தபடி ரசித்தாள். ஒரு மணிக்கெல்லாம் பள்ளி கலைந்துவிட்டது. அப்போதுதான் அதை அவள் பார்த்தாள். பார்த்த மார்க்கத்தில் சற்றுப் பயந்தே போனாள். மூறா சட்டையின் முன் கொசுவத்தைச் சுருக்கி காலை பின்னிக்கொண்டு ஒரு மாதிரி வாத்துக் குஞ்சுபோல் வாசலிலே நடந்து வந்து வீட்டுப் படி ஏறினாள். "என்னடி ஆச்சி ஒனக்கு இப்புடி நடக்கிற" என்று கேட்டாள் சின்னப் புள்ள. மூறாவின் வாயிலிருந்து உமிழ் நீர் வந்தது. ஒரு வார்த்தையும் வரவில்லை. "சட்டைய விடுறி" என்று குனிந்து கொசுவத்தை இழுத்து விட்டாள். இரத்தம் பட்டிருந்தது. "என்னடி இது ரெத்தம்? " என்று கத்தினாள். "இது ரெத்தமில்லம்மா மை. செவத்த மைய மன்ஹா சட்டையில ஊத்திட்டாள் உம்மா..." என்று சொல்லிய மூறா அழ ஆரம்பித்தாள். " நான் பயந்துட்டன்டி. சரி இந்தச் சட்டையோட தான் நீ நாளைக்கும் பள்ளிக்குப் போற?" என்று கோபமாகச் சொல்லி மூறாவின் தோளைப் பிடித்து சுண்டிவிட்டாள். "நாளையில இருந்து 14 நாளைக்கு பள்ளி இல்லயாம் லொக் டவுனாம்" என்றாள் சிறிது அழுவதை நிறுத்தி. "இந்தப் பாழாப் போன மூளைக்கி இப்பத்தான் ஞாபகம் வருது பாரிஸ்க்காரி ஏன் வானத்தையே பார்த்து அழுதாள். போய்க் கேளாட்டி எனக்கு நிம்மதி இல்ல" என்று செய்த குசினி வேலையை அப்படியே விட்டு விட்டு நடந்தாள். மூறாவும் அந்தப் பள்ளிச் சட்டையைக் கழற்றாமல் பின்னால் நடந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தென்னந்தோப்புக்கு பசளையிடல் (பகுதி 03)

○ வடகோவை வரதராஜன்

"அண்டைக்கு ஏதோ மாட்டெருவை என்ன மாதிரி தென்னன்னமரத்துக்கு பசளையாய் போடுகிறது எண்டு சொல்லுகிறன் எண்டாய்" என்றார் செல்லையர்

"ஓமண்ணை முதலில் இந்த எரு வகைகளில் மரத்துக்குத் தேவையான சத்துக்கள் என்ன விகிதத்தில் உள்ளன என்று பார்ப்போம் .100 கிலோகிராம் எருவில் எத்தனை கிராம் பசளை இருக்கிறது எண்டதைச் சொல்லுறன் கேளுங்கோ. இதில் என், பி, கே (N, P, K) என்பது முறையே நைதரசனையும் பொசுபரசையும் பொட்டாசியத்தையும் குறிக்கின்றன.

"இதுக்கை ஏன் எம்.பி மாரைக் கொண்டு வாறாய்" என்று அப்பாவியாக கேட்டார் செல்லையர் .

"எம்.பி இல்லையண்ணை N P K"

"இவருக்கு உதொண்டும் விளங்காது விதானையார். நீங்கள் மேலை சொல்லுங்கோ நான் கேக்கிறன் " அறியும் ஆர்வத்தில் பரபரத்தார் பார்வதம்மாமி .

- **ஆட்டுப்பிளுக்கை**
  N2.4 , P0.88 , K1.9
- **மாட்டெரு**
  N 1.22 , P 0.62 , K 1.2
- **கோழியெரு**
  N 0.92 , P 1.88 , K 0.66
- **பன்றியெரு**
  N 3.7 , P 3.3 , K 0.4

இதில் மாட்டெருவில் நைதரசனை தவிர ஏனைய சத்துக்கள் குறைவாகவே உள்ளன. இதை நிவர்த்தி செய்ய மாட்டெருவுடன் செயற்கை உரங்களையும் கலந்து போடவேண்டும் .

ஒரு தென்னமரத்துக்கு ஒரு வருடத்துக்கு அண்ணளவாக 0.276 கிராம் நைதரசன் தேவை .

இப்ப மாட்டெருவில் 1.22 % நைதரசன் இருக்கிறதென்றால் எங்களுக்கு ஒரு தென்னைமரத்துக்கு போட கிட்டத்தட்ட 25 கிலோ மாட்டெரு தேவை .இவ்வாறு கணக்கிட்டு என்னமாதிரிப் பசளை போடவேண்டும் என்பதைக் கணிப்பிட்டு வைத்திருக்கிறார்கள் . உங்கடை இருவாட்டி மண்ணுக்கு பின்வரும் அளவுகளில் பசளை போடவேண்டும்"

"பொறுங்கோ விதர்னையார் நான் பேப்பரும் பேனையும் எடுத்துக்கொண்டு வாறன்" என்றார் பார்வதம்மாமி

"சரி சொல்லுங்கோ விதானையார்"

| | |
|---|---|
| மாட்டெரு – | 25 கிலோ |
| சுபேஸ்பொஸ்பேற் – | 300 கிராம் |
| மியூரியேற் ஒப் பொட்டாஸ் – | 800 கிராம் |

மணல் மண் வளமற்று இருப்பதால் அதற்கு இதைவிட கூடுதலான பசளையிட வேண்டும்"

"உவன் சுழண்டான் சுந்தரம் தன்னட்டை ஏகப்பட்ட கோழியெரு கிடக்காம். வேணும் எண்டால் எடுங்கோ எண்டு சொன்னவன்" என்றார் செல்லையர்.

"கோழியெரு என்றால் நீங்கள் இப்படி போடலாம்.

| இருவாட்டி மண்ணுக்கு | |
|---|---|
| கோழியெரு | – 20 கிலோ |
| சுபேஸ்பொஸ்பேற் | – 100 கிராம் |
| மியூரியேற் ஒப் பொட்டாஸ் | – 650 கிராம் |

உங்களுக்கு ஆட்டெரு கிடைக்குமாயின் இருவாட்டி மண்ணுக்கு இவ்வாறு பசளையிடலாம்.

| | |
|---|---|
| ஆட்டெரு | – 10 கிலோ |
| சுபேஸ்பொஸ்பேற் | – 500 கிராம் |
| மியூரியேற் ஒப் பொட்டாஸ் | – 850 கிராம் |

"சின்னக்கண்டுகளுக்கும் இதே அளவிலைதான் போடவேணுமோ ?" எனக் கேட்டார் பார்வதம்மாமி.

"இப்ப நான் சொன்ன அளவு பெரிய மரங்களுக்கு . சின்ன கன்றுகளுக்கு போடவேண்டிய அளவைச் சொல்கிறேன் குறிச்சுக் கொள்ளுங்கோ.

**06 மாத வயதுடைய கன்றுக்கு,**

| | |
|---|---|
| மாட்டெரு | –07 கிலோ |
| சுபேஸ்பொஸ்பேற் | – 100 கிராம் |
| மியூரியேற் ஒப் பொட்டாஸ் | – 50 கிராம் |

**ஒரு வருட மரத்துக்கு**

| | |
|---|---|
| மாட்டெரு | – 18 கிலோ |
| சுபேஸ்பொஸ்பேற் | – 250 கிராம் |
| மியூரியேற் ஒப் பொட்டாஸ் | – 200கிராம் |

**02 வயதுடைய மரத்துக்கு**

| | |
|---|---|
| மாட்டெரு | – 22 கிலோ |
| சுபேஸ்பொஸ்பேற் | – 300 கிராம் |
| மியூரியேற் ஒப் பொட்டாஸ் | – 200 கிராம் |

**03 வயதில் இருந்து மரம் பாளை தள்ளும் வரை**

| | |
|---|---|
| மாட்டெரு | – 30 கிலோ |
| சுபேஸ்பொஸ்பேற்று | – 500 கிராம் |
| மியூரியேற் ஒப் பொட்டாஸ் | – 300 கிராம் |

"அப்ப ஒவ்வொரு வருசமும் இந்த அளவுகளிலை பசளை போடவேணுமோ விதானையார் " என்றார் பார்வதம்மாமி.

"ஓம் , ஒவ்வொரு வருசமும் போடவேண்டும். ஒரு வருசம் போட்ட பசளை அந்த வருசம் மாத்திரம்தான் பயிர் வளர்ச்சிக்கு போதுமானதாக இருக்கும். தொடர்ந்து ஒவ்வொரு வருசமும் பசளை போட்டால்தான் மரம் விரைவாக வளர்ந்து விரைவில் பாளை தள்ளும். இத்துடன் ஒவ்வொரு கன்றுக்கும் மக்னீசியம் மூலகத்தை கொடுக்கும் விதமாக 300 கிராம் டொலமைற் இடவேண்டும் .

இந்த டொலமைற்றை முன் சொன்ன உரங்களுடன் கலந்திடாது தனியே இடவேண்டும் ."

"அப்ப இந்த மாட்டெரு கூட்டெரு இல்லாமல் , தனிய இந்த உரங்களை போடுகிறது எண்டால் என்ன அளவிலை போடவேணும் மோனை ?" என்றார் செல்லையர் .

"இயற்கை பசளையையும் செயற்கை உரத்தையும் கலந்து போடுவதுதான் சிறப்பானது

> **தொடர்ந்து ஒவ்வொரு வருசமும் பசளை போட்டால்தான் மரம் விரைவாக வளர்ந்து விரைவில் பாளை தள்ளும்.**

அண்ணை . அப்போதுதான் மண்ணின் கட்டமைப்பு திருப்தியாக இருந்து நுண்ணுயிர்கள் பெருகி மண் வளம் சிறப்பாக இருக்கும் .

மாட்டெரு , கூட்டெரு என்பவை கிடைக்காவிட்டால் , தென்னம் தோப்பில் உள்ள , விழுந்த தென்னோலைகள் , பாளைகள் , பொச்சுகள் , பன்னாடைகள் , தோப்பில் வளரும் புல் பூண்டுகள் என்பவற்றையாவது தென்னை மர அடியில் புதைத்து மண் வளத்தைப் பேண வேண்டும். அத்துடன் சிபாரிசு செய்யப்பட்ட அளவுக்கு மேல் செயற்கை பசளையிடுவது அறவே தவிர்க்கப் படவேண்டும் .

இடப்படும் மேலதிக செயற்கை பசளை மரத்தால் கிரகிக்கப் படாமல் நீருடன் கரைந்து சென்று நிலத்தடி நீரை மாசுபடுத்தும் .'

"அடுத்தவருசம் தொடக்கம் நான் மாட்டெரு பறிப்பிச்சு, நீ சொன்னமாதிரி உரங்களையும் கலந்து போடுகிறன் " என்று சொல்லிக் கொண்டே செல்லையர் ஏதோ நளினம் விட நினைக்க, அதற்கிடையில் நான் " சரி வாறன் மழை வாற மாதிரிக் கிடக்கு" என்று அவசரமாகப் புறப்பட்டேன். ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பியூமி ஒரு திசைதிருப்பி!



○ அருண்

எனது நீண்டகால நண்பி தற்போது ஒரு மருத்துவராக இருக்கின்றார். சில நாள்களுக்கு முன்னர் "யார் இந்த பியூமி ?" என என்னிடம் வினவியபோது ஏதோ நக்கல் அடிக்கின்றார் என்றுதான் முதலில் நினைத்துக்கொண்டேன். பின்னர் தான் ஊடகங்களில் இருப்பவர்கள் தெரிந்துவைத்திருக்கின்றார்கள் என்பதற்காக ஏனைய துறைகளில் பணியாற்றுகின்றவர்கள் அவரைப் பற்றி அறியாமல் இருப்பது ஆச்சரியமில்லை என்பதை உணர்ந்துகொண்டேன்.

எல்லோரும் அறிந்துகொள்ளும் அளவுக்கு ஆக்கபூர்வமான பணியெதனையும் பியூமி செய்யவில்லை என்பது உண்மையாக இருப்பினும், இலங்கையிலுள்ள மக்களை வாட்டிவதைத்து எதிர்காலத்தையே கேள்விக்குட்படுத்திக்கொண்டிருக்கும் பல முக்கிய பிரச்சினைகளைத் திசை திருப்புவதற்கு பயன்படுத்தப்படும் ஒருவராக பியூமி இருக்கின்றார் என்பதில் சந்தேகத்துக்கிடமில்லை.

கொரோனா விதிமுறைகளை மீறி கடந்த மே 30 ஆம்திகதி ஷங்கரீலா ஹொட்டலில் பிறந்தநாள் விருந்துபசாரத்தில் பியூமி ( இதனை நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் சந்திமல் ஜயசிங்கவுடன் இணைந்து இவரும் ஏற்பாடு செய்ததாகவும் குற்றச்சாட்டுக்கள் உள்ளன) பங்கேற்றிருந்தார். இந்த விவகாரம் ஊடகங்களில் பூதாகரமாகியதையடுத்து இவ்விருவர் உட்பட 15 பேர் கைதுசெய்யப்பட்டனர். தனிமைப்படுத்தலுக்காக அனுப்பிவைக்கப்பட்டபோது பியூமி வாகனத்தில் இருந்தபடி பேஸ்புக் லைவ் வீடியோ , அதன்பின்னர் இலங்கையின் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர பியூமியின் தொலைபேசி அழைப்புக்கு செவிசாய்த்து , பியூமியின் உடைகளை தனிமைப்படுத்தல் இடத்துக்கு எடுத்துச்செல்ல அனுமதித்தமையை அடுத்து ஏற்பட்ட விமர்சனங்கள் என கடந்த ஒருவாரத்துக்கு மேலாக பியூமியை இலங்கையின் வெகுஜன மற்றும் சமூக ஊடகப்பரப்பில் பேசுபொருளாக வைத்துள்ளன.

இந்த நிலையில் பியூமியைப் பற்றி கொஞ்சம் பார்ப்போம்.

## யாரிந்தப் பியூமி?

1992 ஆம் ஆண்டு நவம்பர் 22ம் திகதி பிறந்த பியூமி ஹன்ஸமாலிக்கு 28 வயதாகிறது . இவரது தந்தை நிஹால் லக்ஸ்மன் கோமஸ், தாய் வசந்தி பெரேரா . குடும்பத்தில் ஒரே பிள்ளையான பியூமி, ராஜகிரியவிலுள்ள ஸ்ரீ சோபித வித்தியாலயத்தில் பாடசாலைக் கல்வியைப் பூர்த்திசெய்துள்ளார். இவர் சிறுவயது முதல் பல ஆண்டுகளாக வசித்த இல்லம் ராஜகிரிய ஒபயசேகரபுர பகுதியில் இருந்து கொலன்னாவைக்கு செல்லும் வீதியில் அமைந்துள்ளது. எனினும் அவர் தற்போது அங்கு வசிப்பதில்லை. பியூமி ஹன்ஸமாலி ஏற்கனவே திருமணமாகி கணவரைப் பிரிந்துவாழ்பவர். அவருக்கு கவிங்க என்ற மகனும் உள்ளார்.

## மொடலிங் வாழ்க்கை

இலங்கையின் பிரபல முன்னாள் மொடல் அழகியான ரொஷேன் டயஸின் என்ற மொடலிங் நிறுவனத்தில் பயிற்சிக்காக 2011இல் இணைந்துகொண்டார் பியூமி. தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் பல மொடலிங் அழகு ராணிப் போட்டிகளில் பங்கேற்றுள்ளார்.

2014 இல் முதன் முறையாக ஐ.ரி.என் தொலைக்காட்சியினுடாக சின்னத்திரையில் கன்னிப்பிரவேசத்தை மேற்கொண்ட பியூமி 2018 ல் முதன் முறையாக 'வஸ்ஸானய சந்த 'என்ற திரைப்படத்தினூடாக சிங்கள சினிமாவில் அறிமுகத்தை மேற்கொண்டார். அதே ஆண்டில் 'ரைகமயாய் கம்பலயாய்' என்ற சிங்களத் திரைப்படத்திலும் நடித்துள்ளார். தற்போது லக்னோவ் என்ற மலையாள மொழிப்படத்தில் ஒப்பந்தமாகியிருக்கிறார் பியூமி.

### பியூமியின் சமூக வலைத்தள ஆதிக்கம்

இதுவரை அவரது சினிமா வாழ்க்கையோ சின்னத்திரை வாழ்க்கையோ பெரிய வெற்றிகளைக் காணாத போதும் சமூக வலைத்தளங்களில் குறிப்பாக இன்ஸ்டகிராமில் அவரது ஆதிக்கம் அதிகமே. 16லட்சத்துக்கும் அதிகமானவர்கள் அவரது இன்ஸ்டகிராமை பின்தொடர்கின்றனர். ஃபேஸ்புக்கிலும் அவரது பிரசன்னம் இருக்கின்ற போதும் இன்ஸ்டகிராம் அளவுக்கு பலமானதாக இல்லை. எனினும் ஃபேஸ்புக்கில் 4 லட்சம் பேருக்கும் அதிகமானோர் அவரைப் பின்தொடர்கின்றனர். இதனைத்தவிர பியூமியை டுவிட்டரில் ஒரு லட்சத்து 23 ஆயிரம் பேர் பின்தொடருகின்றனர்.

விளையாட்டு வீரர்கள் ,நடிகர்கள் , அரசியல் பிரமுகர்கள் போன்றோருக்கு சமூக வலைத்தளங்களில் அதிகமான ரசிகர்கள் இருப்பது பொதுவானது. ஆனால் பியூமி எவ்வாறு இந்தளவுக்கு ரசிகர்களைப் பெற்றார் ? இதற்குப் பல காரணங்கள் இருப்பினும் தனது உடல் உறுப்புக்களை சமூகத்தில் காணப்படும் விதிக்கப்படாத எல்லையை மீறியதாக காண்பிக்கும் வகையிலான புகைப்படங்களை பதிவேற்றம் செய்கின்றமையே இந்தளவுக்கு சமூக ஊடகத்தில் அவரது பிரசன்னம் அதிகரிப்பதற்கு முக்கிய காரணமாகும்.'எனத் தெரிவிக்கின்றார் சமூக ஊடக பயிற்றுவிப்பாளர் பிரசாத் பெரேரா.

## ரில்வினுக்கு 47; பியூமிக்கோ 6500

கடந்த ஜுன் 2 ஆம் திகதி பியூமி தனது பேஸ்புக்கிலிருந்து நேரலையில் பேசியவேளை ஜே.வி.பி. யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவும் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திக்கொண்டிருந்தார். ஒருகட்டத்தில் பியூமியின் நேரலையை 6 ஆயிரத்து 500 பேர் பார்த்துக்கொண்டிருந்தனர் ஆனால் ரில்வின் சில்வாவின் நேரலையை 470 பேர் மாத்திரமே பார்த்துக்கொண்டிருந்தனர். இது சமூக வலைத்தளத்தில் பியூமி செலுத்தும் ஆதிக்கத்துக்கு ஒரு சான்று. இப்படி பியூமிக்கு சமூக வலைத்தளத்தில் இருக்கின்ற செல்வாக்கை, சாதுரியமான முறையில் தமக்கு வேண்டிய நேரத்தில் ஆட்சியாளர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

### நிகழ்ச்சி நிரல் கோட்பாடு

ஊடகவியலில் முதுமாணிக் கற்கையை மேற்கொள்பவர்கள் நிகழ்ச்சி நிரல் கோட்பாடு பற்றி அறிந்திருப்பர். இதனை சாதாரண மக்களுக்கு புரியும் படி கூறுவதெனில் எம்மைச் சுற்றி நடக்கின்ற எண்ணற்ற சம்பவங்களில் எதனைப் பெரிதுபடுத்திக் காண்பிப்பதற்கு முன்னுரிமையளிக்கவேண்டும் என்பதை ஊடக நிறுவனங்களின் தலைவர்களே தீர்மானிக்கின்றனர்.

ஊடக நிறுவனங்களை நடத்துகின்றவர்களுக்கு நெருக்கமான அரசியல்வாதிகள், வியாபார நிறுவனங்கள் மற்றும் மனிதர்கள் பற்றி நல்ல விதமாக வருகின்ற தகவல்களை பெரிதாக காண்பிக்கும் அதேவேளை அவர்களைப் பற்றி மோசமாக வருகின்ற தகவல்களை இருட்டடிப்புச் செய்வதற்கு அன்றேல் அதனை சிறிய விடயமாகக் காண்பிப்பதற்கும் முயல்வதுண்டு. நடந்த உண்மையை தமது நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப மாற்றியமைத்து மக்களுக்கு உண்மைத்தன்மைய திரிபுபடுத்திக் காண்பிப்பது அன்றேல் அதன் முக்கியத்துவத்தைக் குறைத்துக் காண்பிப்பது போன்ற விடயங்களில் ஊடகங்கள் முக்கிய பாத்திரத்தை வகிக்கின்றன.

(10 ஆம் பக்கம் பார்க்க)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்காணல் பொ.சோபிகா

கொரோனாப் பேரி
தொடர்பில், சிறிலா
நாடாளுமன்ற உறு
குழுவின் இணைத்த
உதயன்-சஞ்சீவிக்

# வேலைவா
# நான் பொ
# இருந்து எ
# கொடுத்து

**கே:** **யாழ் .மாவட்டத்தில் கொரோனா தடுப்பூசி ஏற்றும் ஆரம்ப நிகழ்வுகளில் நீங்களும், விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்சவும் கலந்து கொண்டிருந்தீர்கள். இது தொடர்பில் பல்வேறுபட்ட விமர்சனங்கள் எழுந்திருந்தன. குறிப்பாக கொரோனாப் பேரிடரை வைத்து, நீங்கள் அரசியல் இலாபம் தேட முயற்சிப்பதாக குற்றம் சாட்டப்படுகிறதே ?**

**ப:** *எனது மக்கள், எனது பிரதேசம் என்பன கொரோனா அவலத்தில் இருக்கும்போது, அதிலிருந்து அவர்களை மீட்டெடுப்பதற்கு தடுப்பூசிதான் ஒரு வழி. இந்த அடிப்படையில் ஒரு திட்டம் செயற்படுத்தப்படும்போது, அது சரியாக நடைமுறைப்படுத்தப்படுகிறதா எனக் கண்காணிப்பது பொறுப்புக்கூறக்கூடிய ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் அது எனது கடமை. அந்த வகையில் தான் நான் அதில் பங்களித்திருந்தேன். வேறு எந்த அரசியல்வாதிகளும் அதைச் செய்வதற்கு முன்வந்திருக்கலாம். அந்த நிகழ்வுகளில் பங்கேற்க யாருக்கும் தடை போடப்பவில்லை. மக்கள் துன்பத்தில் இருக்கும் போது அவர்களைச் சரியான முறையில் வழிநடத்திச்செல்ல வேண்டிய பொறுப்பு மக்கள் பிரதிநிதிக்கு உள்ளது. அரசியல் சுயலாபத்துக்காக நாம் இதை செய்யவில்லை. எமது பணியை நாம் செய்தோம்.*

**கே:** **தடுப்பூசிகள் விரைவாக செலுத்தப்பட்டால் அடுத்தகட்ட தடுப்பூசிகள் விரைவில் பெற்றுக்கொடுக்கப்படும் என தெரிவித்திருந்தீர்கள். யாழ்.மாவட்டத்தில் முதற்கட்டமாக வந்த தடுப்பூசிகள் ஏற்றப்பட்டு, இரு வாரங்களாகி விட்டன. அடுத்த கட்டமாக எப்போது யாழ்ப்பாணத்துக்கு தடுப்பூசிகள் வந்து சேரும் ? யாழ்ப்பாணம் தவிர்ந்த வடக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களுக்கும் தடுப்பூசியைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கை எடுத்துள்ளீர்களா?**

**ப:** நாட்டில் ஒரு திட்டம் உள்ளது. தடுப்பூசிகள் பெற்றுக் கொள்ளும் போது அவை படிப்படியாக பகிர்ந்தளிக்கப்படுகின்றன. அந்த வகையில் யாழ்.மாவட்டத்துக்கு அடுத்த வாரமளவில் இரண்டாம் கட்டமாக தடுப்பூசிகள் வரவுள்ளன. அதே நேரம் கிளிநொச்சி மாவட்டத்துக்கும் தடுப்பூசிகளை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அடுத்து வரும் தடுப்பூசிகள் 8 புதிய மாவட்டங்களுக்கு வழங்கப்படவுள்ளன என இராணுவத் தளபதி கூறியுள்ளார். கட்டம் கட்டமாக மிக விரைவில் அனைவருக்கும் தடுப்பூசிகள் ஏற்றப்படும்.

> **தொழில்வாய்ப்புக்காக எமது பிரதேச இளைஞர்கள் விண்ணப்பிக்கும்போது, எமது இளைஞர்களை தவிர்த்து எமது மொழி தெரியாதவர்களை உள்வாங்கும் செயற்பாடுகளை தவிர்த்து வேலைவாய்ப்புக்களை எமது இளைஞர்களுக்கு மட்டுமே பெற்றுக்கொடுக்க என்னால் முடியும். அது எனது கடமை**

## தேர்தல் ஆதாயத்துக்காகவா உதவிப்பொருள்?

**கே:** **கடந்த வருடம் கொரோனாவின் முதலாம் அலை எற்பட்ட காலப்பகுதியில் குறிப்பாக அங்கஜன் அணியினர் மக்களுக்கு அத்தியாவசிய தேவைகளான உலருணவுப்பொதிகளை வழங்குவதில் முன்னணி வகித்திருந்தனர் என ஊடகங்களிலெல்லாம் செய்திகள் வெளிவந்திருந்தன. ஆனால் இந்த முறை நீங்கள் ஆளும் கட்சி சார்ந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளபோதும், உங்கள் அணியினர் அப்படி மக்களுக்கான பொருள்களை விநியோகித்ததாக பெரிதாக எந்தத் தகவலும் இல்லை. அப்படியானால் கடந்தமுறை உங்கள் அணியினரின் கொரோனா நிவாரணம் தேர்தல் ஆதாயத்துக்காகச் செய்யப்பட்டதாகக் கருதலாமா?**

**ப:** *உதவி செய்வதற்கு நாம் முன்வரவில்லை எனக் கூற முடியாது. கடந்த வருடம் கொரோனாவின் முதலாம் அலை இடம்பெற்றபோது எமது பகுதியில் அதன் தாக்கம் பெரிதாக உணரப்படவில்லை. ஆனால் தற்போது மூன்றாம் அலையில் யாழ்ப்பாணம் உட்பட வடக்கு பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே எமது இளைஞர் அணியை ஒருபோதும் நோய்ப் பரவலை அதிகரிப்பதற்கு ஏற்ற மாதிரியான விடயங்களை செய்ய அனுமதிக்க மாட்டேன். இளைஞர்கள் களத்தில் நின்று செயற்படுவதற்கு தற்போது தடங்கல்களும் உள்ளன. அதன் அடிப்படையில், வேறுவிதமான வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளோம். கொரோனாத் தடுப்பூசி தொடர்பான விழிப்புணர்வை எமது பிரதேச பிரதிநிதிகள் மக்களுக்கு ஏற்படுத்தினார்கள். கடந்த முறை உணவுப்பொதி கொடுத்தோம். ஆனால் இந்த முறை அரசு அதற்கான செயற்றிட்டங்களை செய்கிறது. எனவே உணவுப்பொதியைக் கொடுப்பதை விட பொருளாதார ரீதியில் மக்கள் மீண்டுவருவதற்கான ஏற்பாடுகளை செய்கிறோம். குறிப்பாக விவசாயிகளுடைய உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்கிறோம்.*

**கே:** **பயணத்தடையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு, தொண்டு நிறுவனங்கள், அரசியல் கட்சிகள் என்பவை உலர் உணவு பொதிகளை வழங்குவதற்கு,ஏனைய மாவட்டங்களை விட யாழ் . மாவட்டத்தில் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன எனவும் அனுமதிகள் மறுக்கப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கு தங்களின் அழுத்தமே காரணம் என்றும் பலர் குற்றம் சுமத்துகிறார்களே..?**

**ப:** *இது அரசியல் ரீதியான ஆதாயத்தை அடைவதற்காக முன்வைக்கப்படும் பொய்யான குற்றச்சாட்டு. மக்களை திசை திருப்பும் ஒரு செயற்பாடு. இப்போதுள்ள உதவிப்பொருள்களை வழங்கும் முறையை உருவாக்கியது அரச அதிபர்தான். ஏனென்றால் மக்களுக்கு தொண்டு செய்கிறேன் எனக் கூறி பலர் வெளிநாட்டு நிதிகளை பெற்றுக்கொண்டு, அவற்றை மக்களுக்கு கொடுக்காமல் தாம் பெற்றுக்கொள்ளும் செயற்பாடுகள் பரவலாக இடம்பெற்றன. அதனைத் தடுப்பதற்கு சட்டரீதியாக ஒரு பொறிமுறையின் கீழ் பொருள்களை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டள்ளது. மாறாக அரசியல் காரணத்துக்காக இது தடுக்கப்படவில்லை.*

*குறிப்பாக எந்த ஒரு அரசியல் கட்சியூடாகவும் இம்முறை மக்களுக்கு இதுவரை உதவித்திட்டங்கள் கொடுக்கப்படவில்லை. பல அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் இன்னும் மக்களைச் சந்திப்பதற்கே வெளியில் வராமல் பயந்து கொண்டு இருக்கிறார்கள் என்பதே உண்மை.*

## 'என் கனவு யாழ்'தொடர்கிறது

**கே:** **தேர்தலின் போது "என் கனவு யாழ்" என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்தப் போகிறேன் என வாக்குறுதி அளித்திருந்தீர்கள். என்னாயிற்று அந்தத் திட்டம்?**

**ப:** *'என் கனவு யாழ்' என்பது தனியே எனது திட்டம் மட்டுமல்ல, ஒட்டுமொத்த மக்களினுடைய கனவும் தான். அதன் அடிப்படையில் எமது நோக்கம், நாம் இழந்த அனைத்தையும் மீளப்பெற வேண்டும். எமது அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்படவேண்டும். எமது உரிமையைப் பெறும் அதே வேளையில் நாம் இழந்த அபிவிருத்தியையும் பெறவேண்டும். அந்த அடிப்படையில் பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.*

*முக்கியமாக வீதிகள் புனரமைப்பு, வீட்டுத்திட்டம், விவசாயக் குளங்கள் புனரமைப்பு என்பவை ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தர்போது எங்கள் பிரதேசத்தில் ஏராளமான இளைஞர்கள் வழிதவறிச் சென்றுகெண்டிருக்கிறார்கள், பலர் வழி தேடி அலைந்துகொண்டு இருக்கிறார்கள். அவர்களின் எதிர்காலத்தை சிறந்த முறையில் கொண்டு செல்வதற்கு பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.*

*குறிப்பாக மைதானங்கள் புனரமைக்கப்படவுள்ளன. பொருளாதார ரீதியில் மக்களை முன்னேற்றுவதற்காகவும், தொழில் முனைவோரை ஊக்கிவிப்பதற்காகவும் பல வங்கிகள் ஊடாக வேலைத்திட்டங்கள் இடம்பெறுகின்றன. ' என் கனவு யாழ் ' என்பது ஒரு மாதத்தில் நிறைவடையும் திட்டம் இல்லை. இதில் அனைவருடைய பங்களிப்பும் இருந்தால் தான் அதை சாத்தியப்படுத்த முடியும்.போட்டியாக இதைப் பார்க்காமல் அனைவருடைய கனவாகவும் இது எதிர்காலத்தில் பார்க்கப்படவேண்டும் என விரும்புகிறேன்.*

## வேலை வாய்ப்பில் ஏமாற்றவில்லை

**கே:** **தேர்தலின்போது இளைஞர் ,யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குகிறேன் எனக் கூறப்பட்டிருந்தது.பட்டதாரிகள் நியமனங்களை தவிர குறிப்பாக நீங்கள் கூறிய இளைஞர், யுவதிகளுக்கான வேலைவாய்ப்புக்கள் இதுவரை வழங்கப்படவில்லை எனப் பாதிக்கப்பட்ட இளைஞர், யுவதிகள் குற்றஞ்சாட்டத் தொடங்கியுள்ளனரே?**

**ப:** *இந்தக் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் தமிழ்த் தேசியக் கட்சிகளால் மட்டுமே முன்வைக் கப்படுகின்றன. வேலைவாய்ப்பு பெற்றுத்தருகிறேன் எனக் கூறி .அங்கஜன்(நான்) வெல்லவில்லை "என் கனவு யாழ்" என என் விஞ்ஞாபனத்தை முன்வைத்தே தான் நான் வென்றேன். வேலைவாய்ப்பு [illegible] 'என் கனவு யாழ்' என்ற திட்டத்தில் ஒரு அங்கமாகத் தான் இருக்கிறது. வேலைவாய்ப்பை நான் பொக்கற்றில் இருந்து எடுத்துக்கொடுத்துவிட முடியாது. ஆனால் வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதற்கான திட்டங்களை உருவாக்க எம்மால் முடியும். அந்த வகையில் தான் நாம் பயணிக்க முடியும். கடந்த அரசாங்கத்தில் பட்டதாரிகளுக்கு கிடைத்த அரச நியமனங்களை விட இந்த ஆட்சியில் அதிகளவு நியமனங்கள் கிடைத்துள்ளன. ஒரு லட்சம் வேலைவாய்ப்பிலும் வடக்கு ,கிழக்கில் வறுமைக்கோட்டுக்குட்பட்டுள்ள இளைஞர்கள் உள்வாங்கப்பட்டுள்ளார்கள். மேலும் நல்லாட்சிக் காலத்தில் வேலைவாய்ப்பில் ஏமாற்றப்பட்டவர்களையும் உள்வாங்குவதற்கான ஏற்பாடுகளையும் நாம் தான் செய்துகொண்டு இருக்கிறோம்.*

*முக்கியமான விடயமொன்றை இங்கு குறிப்பிட வேண்டும், தொழில்வாய்ப்புக்காக எமது பிரதேச இளைஞர்கள் விண்ணப்பிக்கும் போது, எமது இளைஞர்களை தவிர்த்து எமது மொழி தெரியாதவர்களை உள்வாங்கும் செயற்பாடுகளை தவிர்த்து வேலைவாய்ப்புக்களை எமது இளைஞர்களுக்கு மட்டுமே பெற்றுக்கொடுக்க என்னால் முடியும். அது எனது கடமை.*

## அமைச்சர் டக்ளஸோடு முரண்பாடு இல்லை!

**கே:** **உங்களுக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையில் பல முரண்பாடுகள் இருக்கின்றன எனவும் அதனால் அபிவிருத்தி பணிகளில் பல தாமதங்கள் ஏற்படுகின்றன எனவும் குற்றம் சாட்டப்படுகிறதே .இது உண்மையா?**


**ப:** *அவர் ஒரு அமைச்சர், நான் மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவர். இரண்டு பதவிகளுக்கும் பல்வேறு வித்தியாசங்கள் உள்ளன. ஆனால் ஆளும் கட்சி உறுப்பினர்களாக ஒரே பிரதேசத்தில் இருக்கும் போது போட்டித்தன்மை இருக்கத்தான் செய்கிறது. மக்களுக்கு நன்மை பெற்றுக்கொடுப்பதில் போட்டி இருப்பதில் பிழை இல்லை என்*

> **ஆனால் நான் எந்த இடத்திலும் ஆனந்தசுதா**
> **விடுதலை செய்து தருவேன் என்ற வாக்குறுதி**
> **கொடுக்கவில்லை. விடுதலை செய்ய முடிந்**
> **ஒத்துழைப்பு, நெருக்கடி கொடுப்பேன் என்றுதா**
> **தெரிவித்தேன். ஆனால் இந்த பழியை முழுமை**
> **எங்கள் மேல் போட்டுவிட்டு எதிர்க்கட்சிப்பிரதிநி**
> **தப்பிக்கலாம் என நினைக்கிறார்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரிடர் காலத்து தமிழ் அரசியல் நிலைவரம்
...றிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட
...உறுப்பினரும், யாழ்.மாவட்ட அபிவிருத்திக்
...த்தலைவருமான **அங்கஜன் இராமநாதன்**
...விக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணல்.

# ...வாய்ப்பை ...ாக்கற்றில் ...எடுத்துக் ...விட முடியாது!



நினைக்கிறேன். அந்தப் போட்டி எமது மக்களுக்கு தான் நன்மையை பெற்றுக்கொடுக்கப்போகிறது. அந்த அடிப்படையில் இப்படி எங்களுக்குள் பிரச்சனை இருப்பதாக கூறி, அதை இன்னும் தூண்டுவது பெரும்பாலும் எதிர்கட்சி உறுப்பினர்களே. ஏனெனில் அவர்கள் இந்த பிரச்சனையில் குளிர் காயப்பார்க்கிறார்கள்.

### உறவினர்களை முன்னிலைப்படுத்தவேயில்லை

**கே:** கடந்த தேர்தலில் பெருமளவான இளையோர் அங்கஜன் என்ற தனி ஒரு மனிதர் மீது கொண்ட நம்பிக்கையாலேயே உங்களுக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்திருந்தனர். இந்த நிலையில் தற்போது நீங்கள் உங்கள் உறவினர்களை முன்னிலைப்படுத்துவதாலும், அவர்களை உங்கள் பிரதிநிதிகளாக நிகழ்வுகளுக்கு அனுப்பி சில செயற்பாடுகளை முன்னெடுப்பதாலும் மக்கள் மத்தியில் கடும் விசனநிலை எழுந்துள்ளதே?

**ப:** இது ஒரு சில அரசியல்வாதிகளால் திட்டமிட்டு பரப்பப்படும் மாயை. அங்கஜன் நேரடியாக அனைத்தையும் செய்ய முடியாது. பிரதிநிதிகள் ஊடாகத் தான் செய்ய முடியும். உறவினர்களை முன்னிலைப்படுத்துவது என்பது முழுமையான பொய். ஆனால் உறவினர் என்ற ரீதியில் என்னுடன் இருப்பது எனது தந்தை. அவர் எனது அரசியல் வாழ்க்கையின் ஆரம்பத்திலிருந்து 10 வருடங்களாக மக்கள் சேவையில் ஈடுபட்டு வருகிறார். எமது மக்களுக்கான அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுப்பதற்கு ஒத்துழைக்கும், உதவியாக இருக்கும் அனைவரும் எனது உறவினர்கள் தான்.

**கே:** எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் உங்கள் தந்தையை களமிறக்குவதற்காகத்தான் இப்படி அவரை முன்னிலைப்படுத்துகிறீர்களா?

**ப:** தேர்தல் வரும் போது தான் அது தொடர்பில் தீர்மானிக்க வேண்டும் . நாம் தீர்மானிக்க முன்னர் ஒரு சிலர் தீர்மானிப்பது என்பது மறுபடியும் தேர்தலில் அவர்கள் தோற்றுவிடுவார்களோ என பயத்தின் காரணமாகத்தான். தற்போது மாகாணசபை பற்றி சிந்திக்கும் எண்ணம் எமக்கு இல்லை. மக்களுக்கான தேவை அதிகரித்துள்ளது. அதில் தான் கவனம் செலுத்துகிறோம். மக்களின் நிலையை அடுத்த கட்டத்துக்கு முன்னேற்ற வேண்டும். அது தொடர்பாக தான் எமது முழுச் சிந்தனையும் உள்ளது. தேர்தல் வரும்போது மக்களின் எதிர்பார்ப்புக்களை பூர்த்திசெய்யக்கூடிய தகுந்த வேட்பாளர்களை தெரிவு செய்து நிறுத்துவோம்.

### அப்போது புலிப்பாடல் , இப்போது...!

**கே:** பேரினக் கட்சியான சுதந்திரக் கட்சியை சேர்ந்தவராக இருந்தபோதும், தமிழ்த் தேசியவாதிபோல தமிழ் மக்கள் சார்ந்தும் அவர்களின் உரிமை தொடர்பிலும் பல சந்தர்ப்பங்களில் நீங்கள் குரல் எழுப்பியிருந்தீர்கள். புலிகளின் எழுச்சிப்பாடல்களைக் கூட உங்கள் பிரசாரத்துக்கு பயன்படுத்தினீர்கள். ஆனால் கடந்த தேர்தலில் வென்ற பின்னர் சராசரி சிங்களத் தேசியக் கட்சி உறுப்பினர் போல செயற்படுகிறீர்கள். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் இளைஞர்களின் கைதுகள், மற்றும் தமிழ்மக்களின் உரிமை சார்ந்த பிரச்சினைகள், நினைவேந்தல்களுக்கான அனுமதி மறுப்பு என எவற்றுக்குமே நீங்கள் குரல் எழுப்புவதில்லை என்ற குற்றச்சாட்டு சமீப காலமாக முன்வைக்கப்படுகிறதே?

**ப:** உணர்வு என்பது மனதில் இருப்பது. அது எந்த விதத்திலும் குறையாது. அதை வேறு வேறாக பார்க்கிறவர்களின் கண்களில் தான் அப்படிக் குறைவதாகத் தோன்றுகின்றது. தடைசெய்யப்பட்ட இயக்கம் சார்ந்த விடயங்களுக்கான கைதுகள் இப்போது மட்டும் நடக்கவில்லை. கடந்த நல்லாட்சி அரசாங்கத்திலும் நடைபெற்றது. அப்போது யார் யார் அதைப்பற்றி கதைத்தார்கள் ? இப்போது யார் யார் எதைப்பற்றி கதைக்கிறார்கள்? என மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். உணர்வு ரீதியாக மக்கள் அடைய வேண்டிய உரிமைக்கு எந்த விதத்திலும் தடையாக பாதகமாக நாங்கள் இருக்கப்போவதில்லை.

அதை அடைவதற்காக செயற்படுகிறவர்களுக்கு எமது ஆதரவை கொடுக்கத் தயாராகவே இருக்கிறோம் . அதே வேளை இந்த அரசாங்கத்தில் இருந்து மக்களுக்காக எதைப் பெற முடியுமோ அதை பெற்றுக்கொடுப்பதற்காக , அதை நோக்கி பயணிக்க வேண்டிய கடமை எனக்கு உள்ளது.

பல்கலையில் தூபி உடைக்கப்பட்ட போது முதன் முதலில் அதற்கு எதிராக குரல் கொடுத்தது நான் தான். மக்களின் உரிமைக்காக தொடர்ச்சியாக குரல் கொடுத்துவருகிறோம் அது குறையாது. ஆனால் இந்தக் குற்றச்சாட்டை முன்வைப்பவர்கள் அரசியல் நோக்குடன் எப்போதும் எம்மை துரோகி [illegible]

### ஆனந்தசுதாகரை விடுவிப்பேன் என நான் வாக்குறுதி கொடுக்கவில்லை

**கே:** நீங்களும் அமைச்சர் நாமல் ராஜபக்சவும் தமிழ் அரசியல் கைதியான ஆனந்த சுதாகரின் விடுதலை தொடர்பாக, அவரின் பிள்ளைகள் மற்றும் உறவினர்களுடன் உரையாடினீர்கள் எனவும் விடுவிப்பேன் என வாக்குறுதி அளித்தீர்கள் எனவும் குடும்பத்தினர் கூறுகிறார்கள். அது தொடர்பில் நீங்கள் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? அரசியல் கைதிகளின் விடுதலை சாத்தியமா? நீங்கள் நடவடிக்கை எடுத்துள்ளீர்களா?

**ப:** சதோதரன் ஆனந்தசுதாகரனின் விடுதலை தொடர்பாக தொடர்ச்சியாக பேசி வருகிறோம் இது சட்டரீதியான பிரச்சினை அரசு கொள்கை ரீதியான முடிவு எடுத்த பின்புதான் தீர்வு கிடைக்கும்.

இன்று நேற்றல்ல தொடர்ச்சியாக அரசியல் கைதிகள் விடயத்தில் அதற்கான அழுத்தத்தை ஆட்சியாளர்களிடம் கொடுத்துக்கொண்டு தான் இருக்கிறோம். ஆனால் நான் எந்த இடத்திலும் ஆனந்தசுதாகரை விடுதலை செய்து தருவேன் என்ற வாக்குறுதியை கொடுக்கவில்லை. விடுதலை செய்ய முடிந்த ஒத்துழைப்பு, நெருக்கடி கொடுப்பேன் என்றுதான் தெரிவித்தேன். ஆனால் இந்த பழியை முழுமையாக எங்கள் மேல் போட்டுவிட்டு எதிர்க்கட்சிப்பிரதிநிதிகள் தப்பிக்கலாம் என நினைக்கிறார்கள்.

கடந்த காலகட்டத்தில் பலமான எதிர்க்கட்சியாக இருந்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தான் . அவர்களால் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய முடியாதபோது , அந்த நேரத்தில் என்னாலும் செய்திருக்க முடியாது. ஆனால் தற்போது இது தொடர்பில் நெருக்கடியை கொடுத்துவருகிறோம் . விரைவில் ஜனாதிபதியையும் சந்திக்கவுள்ளோம். இதற்கு அரசு கொள்கை ரீதியான தீர்மானம் எடுத்து அனைத்து கைதிகளும் விடுதலை செய்வதே ஒரே வழி.

ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்து கொண்டு அபிவிருத்தியையும் ,உரிமையையும் நாம் தான் பார்க்க வேண்டும் என்றால் ,எதிர்க்கட்சியினர் மக்களுக்கு என்ன செய்கிறார்கள்? தாம் மக்களுக்கு வாக்குறுதி கொடுத்துவிட்டு வந்து எம்மிடம் கேள்விகளை முன்வைக்கிறார்கள். அவர்களால் மக்களுக்கும் எந்த பயனும் இல்லை

எனவே 'கண்களால் பார்ப்பதும், பொய் காதால் கேட்பதும் பொய், தீர விசாரிப்பதே மெய்' என்பதன் அடிப்படையில் பல விடயங்கள் எமது மக்களுக்கு கட்டம் கட்டமாக பொய்யான ரீதியில் சில திணிப்புக்கள் அரசியல்வாதிகளின் கருத்துகள்,ஊடாக பரப்பப்படுகின்றன. மக்கள் அதை ஆராய்ந்து சரியான முடிவு எடுக்க வேண்டும். இன்று எல்லாவற்றையும் அரசியல் சாயம் பூசாமல், எமது சமூகம் சார்ந்து சிந்தித்து முன்னோக்கி மக்கள் பயணிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கி.ரா. நினைவுகள்



முதுபெரும் எழுத்தாளர் கி.ராஜநாராயணனின் (கி.ரா.வின்) நண்பரும் எழுத்தாளருமான பேராசிரியர் அ.ராமசாமி, அவரின் 40 ஆண்டு கால நண்பர். அவரோடு கொண்ட நட்பை 'உதயன் – சஞ்சீவி' வாசகர்களுக்காக நினைவுக் குறிப்புகளாகத் தருகிறார்.

**பேராசிரியர் அ.ராமசாமி**
*தமிழ்த்துறை (பணி நிறைவு) மனோன்மணி சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு.*



மனைவியுடன் கி.ராஜநாராயணன்

## 14

அங்காளம்மன் நகரிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குப் பின் நானும் இலாசுப்பேட்டை, ராஜாஜிநகருக்கு நகர்ந்தேன். அவரும் அதே ஔவை நகரில் தான் இருந்தார். இலாசுபேட்டை அப்போது அறிவுஜீவிகளும் எழுத்தாளர்களும் நிரம்பிய இடம். கி.ரா.வுக்குப் பக்கமாக இருந்தவர் திறனாய்வாளர் பஞ்சு. அடுத்த தெருவில் ஒரு பிரெஞ்சுப் பேராசிரியர். இடது பக்கம் பிரெஞ்சு மொழியிலிருந்து மொழிபெயர்ப்பு செய்யும் நாயகர் இருந்தார். அரசு மருத்துவமனையில் மட்டுமே மருத்துவம் பார்த்த மருத்துவர் ஒருவர் இருந்தார். அசோக்நகரில் நிறப்பிரிகை ரவிக்குமார் இருந்தார். அதற்கடுத்த தெருவில் ராஜ்கௌதமன்.

காலையில் ஒரு சுற்றுலா; மாலையில் ஒரு சிற்றுலா என்பது கிராவின் நடைப்பயிற்சி. நானிருந்த ராஜாஜி நகரில் தான் தபால் அலுவலகம். அவருக்குத் தினசரி நாலைந்து கடிதங்களாவது வரும். ஒன்பது மணிக்கு பல்கலைக்கழகம் கிளம்பும்போது வீட்டுக்கு வந்து அன்றைய தினசரியை வாசித்து முடிப்பார். அங்கிருந்து தபால் அலுவலகம் போய் தனக்கு வந்த கடிதங்களைத் தானே பெற்றுக்கொண்டு அங்கிருந்து கிளம்புவார். அங்கே உடைத்து வாசிக்கமாட்டார்.

வீட்டுக்குப் போகும் பாதையில் கோவில்பட்டிக்கார வீடு ஒன்று இருந்தது. அங்குபோய் ஒரு செம்பு தண்ணி குடித்துவிட்டு அங்கு உட்கார்ந்து கடிதங்களைப் படிப்பார். அங்கிருக்கும் பெண்களோடு பேசிக்கதைகளை உருவாக்கிக் கொள்வார். அவர்கள் இல்லையென்றால் பஞ்சாங்கம் வீட்டில் அது நடக்கும். எங்கள் தெருவில் இருந்த கணிதப் பேராசிரியர் முருகானந்தம் மனைவிக்கு மருத்துவ ஆலோசனைகள் சொல்லிவிட்டுப் போவதுமுண்டு.

தபால் அலுவலகத்தைக் காரணமாக்கி ஒன்பது மணிக்கு நடக்கத் தொடங்கித் திரும்பும்போது 12 மணி ஆகியிருக்கும். குறைந்தது நாலைந்து பெண்களிடமாவது கதைபேசி, சிரித்துவிட்டுப் போய்க் கணவதி அம்மாவிடம் பேசிய கதைகளைச் சொல்லிக் கொண்டிருப்பார். மாலையில் அம்மாவையையும் அழைத்துக்கொண்டு விமான நிலையச்சாலையில் ஒரு சிற்றுலா வருவார். பெரும்பாலும் இவ்விரண்டு உலாக்களும் மாறாமல் இருந்தன.

## 15

அதிகமும் தனித்தமிழ் இயக்கவாதிகள் இருப்பதுபோலத்தோற்றம் தரும் புதுச்சேரியில் வாரக்கடைசிகளில் இலக்கிய, சமூக இயக்கங்கள், அரசியல் கூட்டங்களுக்குப் பஞ்சம் இருக்காது. ஒவ்வொருவருக்கும் புனைபெயர்கள் இருக்கும். அவை பெரும்பாலும் தனித்தமிழ்ப் பெயர்கள். அவற்றைவிட்டால் ஒடுக்கப்பட்ட மனிதர்களின் நலன்களை முன்வைக்கும் மார்க்சியப் பின்புலம் கொண்ட மனித உரிமை அமைப்புகள், திராவிட இயக்கப்பார்வை கொண்ட பேரவைகள் எனப்பலவிதமான அமைப்புகளின் செயல்பாடுகள் நடந்துகொண்டே இருக்கும். 1990 களுக்குப் பிறகு தலித் இயக்கத்தின் சிந்தனை மற்றும் செயற்பாடுகளின் திரட்சியைத் தனதாக்கிக் கொண்ட இடமும் புதுச்சேரிதான். அமைப்புகளைப் போலவே சிற்றிதழ்களின் எண்ணிக்கையும் அங்கு அதிகம். மொழிக்காக, சமூகவிழிப்புணர்வுக்காக, இலக்கியத்துக்காக எனப் பலவிதமான இதழ்களும் வந்துகொண்டிருந்த நேரம். எதிர்வு, நிறப்பிரிகை, ஊடகம், கிரணம், என்ற மூன்று இதழ்களும் புதுச்சேரியை முகவரியாகக் கொண்டு தமிழ்ச் சிற்றிதழ்ப் பரப்பில் தாக்கம் ஏற்படுத்தியவை.

எதிர்வு இதழை நடத்திய சிவக்குமாருக்கு அமைப்பியல், குறியியல் எனத் தமிழவனின் திறனாய்வுக் கருத்தியல்களைமுன்வைக்கும் நோக்கம் இருந்ததை முதல் இதழில் வெளிப்படுத்தினார். எதிர்வு இதழின் சார்பில் மாதாந்தம் ஒரு கூட்டம் நடத்துவதையும் தொடங்கினார். முதல் கூட்டம் ரெட்டியார் பாளையத்தில் மருத்துவர் வீட்டில் நடந்ததாக நினைவு. அதற்கு எனது மிதிவண்டியில் போய்வந்தேன்.

இரண்டாவது கூட்டத்துக்கு அசோகமித்திரன் வருகிறார் எனத் தகவல் வந்தது. கி.ரா. தொடர்பு ஏற்படுத்தித் தந்ததால் அவரது வருகை உறுதியானது எனத் தெரிந்தது. அந்தக் கூட்டத்துக்குப் பிறகு பெரிய அளவில் ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார். அந்தக் கூட்டத்துக்குக் கடலூர், விழுப்புரம், விருத்தாசலம், நெய்வேலி, பண்ருட்டி எனப் பக்கத்துச் சிறுநகரங்களி லிருந்தெல்லாம் வருவார்கள் என்பதும் தகவல். அதற்குப் பாவண்ணன் பெங்களூரிலிருந்து வருகிறார் என்று நண்பர்கள் சொன்னார்கள்.

எழுத்தாளர் பாவண்ணன் புதுவைக்காரர்தான். நான் புதுச்சேரிக்கு போனதற்குச் சில மாதங்கள் முன்பு அவர் கர்நாடகா தொலைபேசித்துறையில் பொறுப் பேற்றுச் சென்றுவிட்டார். அவரது சொந்தக்கிராமம் புதுவை விழுப்புரம் சாலையில் வளவனூர் பக்கம் . அவ்வப்போது புதுச்சேரி வருவார்.

நல்ல மிதிவண்டி இருந்தால் ஒவ்வொரு கூட்டங்களுக்கும் போய்வந்துவிடலாம். இந்தக் கூட்டமும் ரெட்டியார் பாளையத்தில்தான் என நினைத்துக்கொண்டு மிதிவண்டியில் கிளம்பிவிட்டேன். ஆனால் அங்கு போனபிறகு தான் தெரிந்தது. வில்லியனூரில் தான் கூட்டமென்று. மிதிவண்டியைத் திரும்பவும் மிதித்து ஓட்டிப்போகச் சரியாக இருந்தது நேரம். போனபோது தெரியாத தூரம் வரும்போது அதிகமாகத் தெரிந்தது. அந்தக் கூட்டத்துக்குப் பிறகு எதிர்வு கூட்டங்களும் இல்லை. எதிர்வும் வரவில்லை.

## 16

எழுத்துத்தமிழ் அல்லது பொதுத்தமிழ், பேச்சுத்தமிழ் என இரண்டு நிலைகள் தமிழ்மொழியின் சிறப்பு எனவும், சிக்கல் எனவும் சொல்வார்கள். புதிதாகத் த்மிழைக் கற்க நினைக்கும் வேற்றுமொழிக்காரர்கள் இந்த வேறுபாட்டால் அதிகமும் திணறுகிறார்கள் என்பது மொழியியலாரின் வாதம். வட்டார இலக்கியம் எழுதும் எழுத்தாளர்கள் எப்போதும் பேச்சுத்தமிழின் ஒலிச் சிறப்பை விதந்து பேசுவார்கள். தமிழ்நாட்டின் மொத்தப்பரப்புக்கும் எழுதுவது புரிய வேண்டும் என்பவர்கள் பொதுத்தமிழின் பக்கம் நிற்பார்கள்.
இந்த எதிர்வில் கி.ரா. பேச்சுத்தமிழின் பக்கம் நிற்பவர். தனது கதைகளில் பாத்திரங்களின் உரையாடல்களைப் பேச்சுத்தமிழிலும், கதைசொல்லியின் விவரணைகளைப் பொதுத் தமிழிலும் எழுதிக்கொண்டிருந்தார். பேசுவதுபோல எழுதவேண்டும் என்று பிடிவாதம் பிடிப்பவர். அதுதான் மக்கள் தமிழ் எனப் புதுவைக்கு வந்தபின் வாதிடத்தொடங்கினார். பேசுவதுபோலவே எல்லாவற்றையும் எழுதவேண்டும் என்றும் சொல்லத்தொடங்கினார்.
புதுவை வணிக அவையில் நடந்த ஒரு கூட்டத்துக்குப் பின் அதன் முன்னிருக்கும் பாரதி பூங்காவில் மதிய உணவுக்குப் பின் அமர்ந்திருந்தார் கி.ரா. அந்தக் கூட்டத்துக்குக் கவி. பழமலய்யும் வந்திருந்தார். உரையாடல் மக்கள் தமிழ் பக்கம் நகர்ந்தது. அப்போது பழமலய் கி.ரா.விடம், "நீங்கள் சொல்லும் மக்கள் தமிழில் எழுதுவது என்ற நோக்கம் நல்லதுதான். அது சாத்தியமா?" என்று கேட்டார். ' பேசுவதுபோல எழுதுவதில் என்ன சிக்கல்?' என்று கேட்டார். தொடர்ந்த பழமலய், "வீட்டில் பேசுவதுபோல எழுதுவது என்றால், நீங்கள் வீட்டில் தெலுங்கு பேசிறீங்க. அதைத்தானே எழுதணும்; அதைத் தமிழ் வரிவடிவத்தில் எழுதினால் மக்கள் தமிழ் ஆகுமா?" என்று கேட்டார். அந்த உரையாடல் அப்போதைக்கு நின்றுபோனது.

# பியூமி... (தொடர்ச்சி)



**கப்பலும் கவனக்கலைப்பானும்**

கடந்த ஜுன் 2 ஆம் திகதி நிகழ்ச்சி நிரல் கோட்பாட்டைப் பற்றி விளங்கிக்கொள்ள விரும்புகின்றவர்களுக்கு சிறந்த உதாரணமாக அமைந்திருக்கின்றது. அன்றையதினத்தில் தான் தீங்குவிளை விக்கக்கூடிய இரசாயனப்பதார்த்தங்களைத் தாங்கிவந்த எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் கடலில் மூழ்கியது. இலங்கையின் வரலாற்றிலேயே மிக மோசமான செயற்கைக் கடல் அனர்த்தமாக இது அமைந்த நிலையில் சர்வதேச ஊடகங்கள் பலவும் உள்நாட்டு ஊடகங்கள் சிலவும் இதுபற்றிய செய்திகளை அறிக்கையிட்டுக்கொண்டிருந்தன. ஆனால் உள்நாட்டில் மக்கள் மத்தியில் அதிக செல்வாக்குள்ள தொலைக்காட்சி ஊடகங்கள பியூமியும் அவரது சகாக்களும் கைது செய்யப்பட்டு தனிமைப்படுத்தலுக்காக அனுப்பி வைக்கப்படுகையில் ஃபேஸ்புக் நேரலையில் பியூமி பேசியதை திரும்பத் திரும்ப ஒளிபரப்பிக் கொண்டிருந்தன. கூகுள் ட்ரெண்ட்ஸ் அட்டவணைப்படி எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் எரிந்து மூழ்கிய செய்தியை விடவும் பியூமி பற்றிய செய்தியே இலங்கையில் அதிகமாக ட்ரண்ட் ஆகியிருந்தது.

ஒருபுறம் கொரோனாவின் மூன்றாம் அலை இலங்கையைத் தொடர்ந்தும் அச்சுறுத்திக்கொண்டிருக்கின்றது. நாட்டில் கொரோனாவால் தினமும் 3000 பேர் வரையில் கொரோனா தொற்றுக்குள்ளாகின்றனர் எனவும் 50 பேர் வரையில் இறந்துகொண்டிருக்கின்றனர் எனவும் உத்தியோகபூர்வ தகவல்கள் வருகின்றன. மறுபுறம் சீரற்ற காலநிலை மக்களை வாட்டி வதைத்து ஆயிரக்கணக்கானவர்களை இடம்பெயர் வைத்தும் பெறுமதியான உயிர்களைப் பறித்து பரிதவிக்க வைத்துக்கொண்டிருக்கின்றது. இன்னொருபுறம் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் அனர்த்தத்தால் பெரும் சுற்றாடல் பிரச்சினை ஏற்பட்டு ஆயிரக்கணக்கான மக்கள் தொழில்களை முன்னெடுக்க முடியாது தவித்துக்கொண்டும் கடற்பகுதியினதும் வாழ்வாதாரத்தினதும் எதிர்காலம் குறித்த அச்சங்களாலும் ஆட்கொள்ளப்பட்டிருக்கின்றனர். கொரோனா பயணக்கட்டுப்பாட்டுக் காலத்தில் வெலிகம, மட்டக்களப்பு மற்றும் பாணந்துறையில் இடம்பெற்ற படுகொலைகள் மனிதவாழ்வியல் பற்றிய கேள்விகளை எழுப்புகின்றன.

நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதாரமும் கடனில் மூழ்கி கணிசமான மக்களின் கழுத்தை இறுக்கிவருவதை எகிறிவரும் பொருள்களின் விலை அதிகரிப்பு உணர்த்திக்கொண்டிருக்கின்றது. இப்படி இன்னமும் பல பிரச்சினைகளைப் பட்டியலிட்டுக்கொண்டே போகலாம். இந்தப்பிரச்சினைகளுக்கு நடுவே இன்று ஊடகங்களை ஆக்கிரமித்து மக்களின் கவனத்தை திசைதிருப்ப இந்த பியூமி ஹன்ஸமாலி போன்றோரே பயன்படுத்தப்படுகின்றார் என்பதில் சந்தேகமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண வரலாறு

1505-1948 வரை

ந.பரமேஸ்வரன்

இரு வாரங்கள் நடைபெற்ற இழுபறியின் பின்னர் தமிழிலும் போர்த்துக்கீச மொழியிலும் சமாதான ஒப்பந்தம் எழுதப்பட்டு கைச்சாத்தானது.
ஒப்பந்தத்தின் சாராம்சம் வருமாறு :

1. போர்த்துக்கீச அரசை மேலரசாக ஏற்றுக் கொண்டு யாழ்ப்பாணத்தை தொடர்ந்தும் சங்கிலியே ஆட்சிசெய்தல்.
2. வருடாந்தம் 12 கொம்பன் யானைகளும் 1200 பதக்கு பணமும் திறையாக செலுத்தப்படவேண்டும்.
3. தாமாகவே சுயமாக கிறிஸ்தவமதத்தை பின்பற்ற விரும்புவோருக்கு, கிறிஸ்தவமதத்தை பின்பற்ற அனுமதியளித்தல்.
4. வித்தியபண்டார என்ற சிங்களத் தளபதியிடம் அபகரித்த புத்த தந்ததாதுவை போர்த்துக்கீசரிடம் கையளித்தல்
5. மன்னாரை போர்த்துக்கீசருக்கு கையளித்தல்
6. இவற்றுக்கு பிணையாக சங்கிலியின் மகனை போர்த்துக்கீசரிடம் கையளித்தல்

இதுவே ஒப்பந்தத்தின் சாராம்சம்.

இந்த ஒப்பந்தப் படி செகராசசேகரன் ஆட்சிசெய்யத் தொடங்கினான்.
திடீரென ஒருநாள் சங்கிலி பொதுமக்களின் உதவியுடன் போர்த்துக்கீசர் மீது தாக்குதல் நடத்தினான். மக்களும் கண்ணில் கண்ட போர்த்துக்கீசர்மீது தாக்குதல் நடத்தினர். போர்த்துக்கீசர் சங்கிலியின் மகனை கைதுசெய்து கொண்டு ஒரு கப்பலில் ஏறித் தப்பினர். ஆனையிறவில் இருந்த பிரகன்ஸாவும் படகு மூலம் கப்பலையடைந்தான். சங்கிலி கையளித்த புத்த தந்த தாதுவையும் போர்த்துக்கீசர் தம்முடன் எடுத்துச் சென்றனர்.



இந்த இடத்தில் வித்யாபண்டாரவைப் பற்றியும் குறிப்பிட வேண்டும். வித்யாபண்டார என்ற கோட்டை இராசதானியின் தளபதி போர்த்துக்கீசரைத் தனது பரமவிரோதிகளாகக் கருதி போர்த்துக்கேயர்மீது தாக்குதல் நடத்தியதுடன் கிறிஸ்தவ தேவாலயங்களை இடித்தும் வந்தான். போர்த்துக்கீசர் வித்யாபண்டாரவை கைது செய்து சிறையிலடைத்தனர். சிறையிலிருந்து தப்பிய வித்யபண்டார , சங்கிலியின் உதவியை நாடி யாழ்ப்பாணம் வந்தான். துரதிர்ஷ்டவசமாக சங்கிலியின் துருப்புகளுக்கும் வித்தியாபண்டாரவுக்குமிடையே ஏற்பட்ட போரில் வித்யாபண்டார கொல்லப்பட்டான் இதுபற்றி பின்னர் விரிவாக பார்ப்போம்.

செகராசசேகரன் (சங்கிலி) மக்களுக்கு துன்பம் விளைவித்து வந்தபடியால் மக்கள் புவிராச பண்டாரத்தை அரசனாக்கினர். எனினும் செகராசசேகரனே ஆலோசகராக இருந்தான். சங்கிலியுடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி மன்னார் தமக்கே சொந்தம் எனக் கூறிய போர்த்துக்கீசர் மன்னாரைக் கைப்பற்றத் தீர்மானித்தனர்.
1560 ஆம் ஆண்டு பிறகன்சா மன்னாரை நோக்கிப் படையெடுத்தான். அப்போது மன்னாரை ஆண்டு வந்த மகதன் என்ற சிற்றரசன் 3000 பேர் கொண்ட படையுடன் போர்த்துக்கீசப் படையை எதிர்த்தான். போர்த்துக்கீசப்படைகள் மகதனின் படையினரின் தாக்குதலை முறியடித்து மன்னாரை கைப்பற்றின. போர்த்துக்கீசர், திருக்கேதீஸ்வர ஆலயத்தை இடித்து அந்த கற்களைக் கொண்டு கோட்டையொன்றைக் கட்டினர். யாழ்ப்பாண மன்னன் இரு தடவைகள் மன்னார் மீது படையெடுத்தும் மன்னாரைக் கைப்பற்ற முடியவில்லை.

## 1565

1565 இல் செகராசசேகரன் மரணமடைந்தான். செகராசசேகரன் காலமானதும் காசிநயினார் என்பவன் புவிராச பண்டாரத்திடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றி பரராசசேகரன் என்ற பெயருடன் ஆளத் தொடங்கினான். ஆட்சியில் குழப்பம் ஏற்பட்டபடியால் யாழ்ப்பாண மக்கள், மன்னாரிலிருந்த ஜோர்ஜ் டி மெல்கோ கஸ்ட்ரா (George De Melho Castra) என்ற போர்த்துக்கேய தளபதியை மத்தியஸ்தத்துக்கு அழைத்தனர். ஜோர்ஜ் டி மெல்கோ கஸ்ட்ரா, யாழ்ப்பாணம் வந்து காசிநயினாரை சிறையிலடைத்து விட்டு பெரியபிள்ளை என்பவனை அரசனாக்கினான். ஜோர்ஜ் டீ மெல்கோ யாழ்ப்பாணத்தை விட்டு அகன்றதும் நயினாரின் ஆதரவாளர்கள் காசிநயினாரைச் சிறையிலிருந்து மீட்டனர். காசிநயினார் பெரியபிள்ளையை கொன்றுவிட்டு மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றினான்.

## 1582

1582 இல் புவிராச பண்டாரம் என்ற பெயரில் இன்னொருவன் ஆட்சி செய்யத் தொடங்கினான். இவன் முன்னைய புவிராசபண்டாரம் அல்ல. இந்தப் புவிராச பண்டாரமும் 75 மரக்கலங்களில் சென்று மன்னார் மீது போர்தொடுத்தான். இந்தப்படையெடுப்பும் தோல்வியில் முடிந்தது.

## 1591


பின்னர் 1591 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 3 ஆம் கெட்டிமூஸா மரிக்கார் என்ற முஸ்லிம் கடற்கொள்ளையனின் உதவியுடன் 1200 பேர் கொண்ட படையுடன் மன்னாரை நோக்கிப் படையெடுத்த புவிராசபண்டாரம் . மன்னார்ரை நோக்கிப் படையெடுத்தான். கெட்டிமூஸா மரிக்காரின் மரக்கலங்கள் உரிய நேரத்துக்கு வராமல் மணல் திட்டில் நங்கூரமிட்டன. இதேவேளை கோவாவிலிருந்து உதவிக்கு வந்த போர்த்துக்கீச தளபதி மரிக்கார் மீது தாக்குதல் நடத்தினான். உரிய நேரத்தில் உதவி கிடைக்காமையால் இந்தப்படையெடுப்பும் தோல்வியில் முடிந்தது.

## 1591

**போர்த்துக்கீசரின் இரண்டாவது படையெடுப்பு**

1591 ஆம் ஆண்டு ஒக்டோபர் 26ம்திகதி அண்ட்ரே டீ பெர்ராடோ டீ மொண்டஸோ (Andre De Furtado de Mondazo) என்ற போர்துக்கேச் தளபதி 1400 போர்த்துக்கீச வீரர்களையும் விக்கிரமசிங்க முதலி என்ற சிங்கள தளபதி தலைமையிலான 3000 சிங்கள வீரர்களையும் கொண்ட படையுடன் 43 மரக்கலங்களிலும் 250 வள்ளங்களிலும் யாழ்ப்பாணத்தை நோக்கிப் படையெடுத்தான். ( சிங்கள வீரர்களின் எண்ணிக்கை 500 என சில நூல்களில் கூறப்பட்டுள்ளது) புவிராச பண்டாரத்தின் படைகள் அரியாலையில் காத்து நிற்க, போர்துக்கீசப் படைகள் கொழும்புத்துறையில் தரையிறங்க முயற்சித்தன. கொழும்புத்துறையில் போர்த்துக்கீசப்படைகளுக்கும் யாழ்ப்பாணப் படைகளுக்குமிடையே கடும் போர் மூண்டது.

(வரலாறு நீளும்)




# ஐரோப்பாவின்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதாவது ஆசியாவில் இலங்கை சிறிய நாடாக இருந்தாலும், இலங்கையை மேற்குலகமும் ஐரோப்பிய நாடுகளும் புதுடில்லியைக் கடந்து முக்கியப்படுத்த வேண்டும் என்பதிலேதான் சமாந்தர உறவுக்கான இராஜதந்திரத்தை இலங்கை கையாளுகின்றது.
கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் அமெரிக்க இராஜாங்கச் செயலாளராக இருந்த மைக் பொம்பியோ இலங்கைக்கு வந்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை சந்தித்ததில் இருந்து, இலங்கையை அமெரிக்காவின் ஜே பைடன் நிர்வாகமும் இந்தியாவைக் கடந்து நேரடியாகவே கையாள ஆரம்பித்துள்ளதெனலாம்.
இந்த இடத்திலேதான் கொழும்பு போர்ட் சிற்றியில் மேற்குலகமும் ஐரோப்பிய நாடுகளும் முதலீடு செய்யக்கூடிய முறையில் நிரஞ்சன் தேவாவை இலங்கை பயன்படுத்துகின்றது.
நதானியேல் ரோத்ஸ்சைல்ட் கனடாவிலும் மிகப் பெரிய முதலீட்டாளர். அவ்வாறானவர்கள் கொழும்பு போர்ட் சிற்றியில் முதலீடு செய்தால். நிச்சயம் ஏனைய மேற்குலக முதலீட்டாளர்களும் காலப்போக்கில் வருவார்கள் என்பதில் ஐயமில்லை,
அதற்கேற்றவாறே ஆசியான் நாடுகளை உள்ளடக்கிய பிராந்திய பொருளாதாரக் கட்டமைப்பு ஒப்பந்தம் (Regional Comprehensive Economic Partnership RCEP) ஒன்றை சீனா கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் திகதி கைச்சாத்திட்டது. அமெரிக்க நட்பு நாடுகளான அவுஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய 15 நாடுகளை உள்ளடக்கிய இந்த ஒப்பந்தம் அடுத்த ஆண்டு செயற்படவுள்ளது. இந்த ஒப்பந்தத்தில் இந்தியா கைச்சாத்திடவில்லை. ஆனாலும் இரண்டு ஆண்டுகளில் இந்தியா இணைந்து கொள்ள முடியுமென சீனா கூறியுள்ளது.
ஆகவே இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட நாடுகளும் கொழும்பு போர்ட் சிற்றியில் முதலீடு செய்யக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. இலங்கை முதலீட்டுச் சபை இதற்கான பேச்சுக்களை ஆரம்பித்துள்ளது என கொழும்பு உயர்மட்டத் தகவல்கள் கூறு கின்றன. இந்தோ- பசுபிக் பாதுகாப்பு விவகாரங்களில் அமெரிக்காவோடும் பொருளாதாரத்துக்குச் சீனாவோடும் உறவு என்ற இரட்டை நிலைப்பாட்டை இலங்கை கடைப்பிடிப்பதால், தற்போதைக்குப் பிரதான வல்லாதிக்க நாடுகளுக்குப் பிரச்சினை இருக்காது.
ஆனாலும் ஏதோவொரு சந்தர்ப்பத்தில் இலங்கை, சீனாவின் முழுமையான கூட்டாளியா ?இல்லையா? என்பதை அறிவிக்க வேண்டியதொரு நிர்ப்பந்தம் எழலாம்.
இந்தோ - பசுபிக் பாதுகாப்பு என்று வரும்போது நிச்சயமாக இலங்கை அமெரிக்கா பக்கமே நிற்க வேண்டிய கட்டாயச் சூழலும் உண்டு. ஏனெனில் ஈழத்தமிழர் விவகாரம் அந்த அளவுக்கு இலங்கையைக் கட்டிப்போட்டுள்ளது.
சர்வதேச பயங்கரவாதத் தடுப்புப் பேராசிரியர் றொகான் குணவர்த்தன கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் சண்டே ஒப்சேவர் ஆங்கில வார இதழுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றில், ஐக்கிய நாடுகள் சபை புலிகளைத் தடை செய்ய வேண்டுமென்ற கருத்தை முன்வைத்திருந்தார். இவர் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் நீண்டகால நிழல் ஆலோசகர். ஆகவே அவ்வாறான அழுத்தங்களுக்கு ஐ.நா. பணியுமாக இருந்தால், சீனாவுக்குச் சமாந்தரமான முன்னுரிமை இலங்கையில் அமெரிக்காவுக்கும் கிடைக்கும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழகத்துடனான இராஜதந்திர உறவு எப்போது பலப்படும்?

ஐ.வி.மகாசேனன்

தமிழகத்தின் அரசியல், சமூக, பொருளாதார நிலைமைகள் வரலாறு தோறும் இலங்கையில்-குறிப்பாக தமிழர்களிடையே - நெருக்கமான தாக்கங்களை ஏற்படுத்தி வந்துள்ளன. தமிழகம் தொடர்பான நம்பிக்கைகளும் எதிர்பார்ப்புகளும் கூட இலங்கை தமிழரிடையே அதிகமாக இருந்து வந்துள்ளன. அந்த நம்பிக்கையை தமிழக மக்களும் நீண்டகாலமாகப் பாதுகாத்தே வந்துள்ளனர். 2009ஆம் ஆண்டு ஆயுத போராட்ட காலப்பகுதியில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி தமிழகத்தில் 17 பேர் தீக்குளித்து தம் இன்னுயிரை மாய்த்துக் கொண்டனர். அண்மையில் கூட, தமிழகத்தில் நடந்து முடிந்த சட்டசபை தேர்தல் முடிவுகள் தொடர்பிலும் ஆழமான எதிர்பார்ப்புக்களுடன் ஈழத் தமிழர் காத்திருந்தனர். இந்த நிலையில் தமிழகத்தில் முதல்முறையாக முதல்வர் நாற்காலியை அலங்கரித்துள்ள மு.க.ஸ்டா லினின் ஆரம்பகால சில அதிரடி நடவடிக்கைகள் இலங்கைத் தமிழரிடையே புத்துணர்வையும் நம்பிக்கையும் மீள உண்டாக்கியுள்ளன.

### அனைத்துக் கட்சிகளையும் நாம் அரவணைக்கவேண்டும்

இலங்கையில் இடம்பெறும் தமிழர்கள் மீதான சிங்களப் பேரினவாதத்தின் இனஅழிப்புக்கு நீதியையும் தமிழர்களுக்கான சுயநிர்ணய உரிமையையும் பெற்றுக் கொடுக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் தமிழக அரசுக்கு வரலாற்று ரீதியாக உண்டு. தமிழக அரசின் பொறுப்பையும் கடமையையும் தமிழக அரசியல் தரப்பினருக்கு புரிய வைத்து செயற்படுத்த வேண்டியது ஈழத்தமிழ் அரசியல் தரப்பின் இராஜதந்திர நடவடிக்கைகளிலேயே தங்கியுள்ளது. ஆனால் சமூக ஊடகங்களிலும் சரி பொதுவெளியிலும் சரி தி.மு.க. மீது ஒருதலைப் பட்சமாக குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. குறிப்பாக 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் பேரவலத்தை தடுக்க திராவிட முன்னேற்ற கழகம் தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது இத்தகையவர்களின் அரசியல் ஆழமற்ற தன்மையையே காட்டுகின்றது.

தி.மு.க கட்சியின் ஈழத்தமிழர்களுடான உறவு என்ற வரலாற்றுப்புத்தகத்தில், 2009ஆம் ஆண்டு பக்கங்களை நீக்கி விட்டு ஆராய்வோமாயின், இலங்கைத் தமிழர்களின் உரிமை போராட்டத்தில் மிகவும் காத்திரமான பங்களிப்பை அந்தக் கட்சி வழங்கியுள்ளது. 13 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு, 1989ஆம் ஆண்டு நவம்பரில் ஆட்சிக்கு வந்த கருணாநிதியின் ஆட்சி, 1991ஆம் ஆண்டு ஜனவரியில் கலைக்கப்பட்டது. அதன் பின்னணியில் தி.மு.கவின் ஈழப்போராட்ட ஆதரவே காணப்படுகிறது. இலங்கைத் தமிழர்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சி அதிகாரத்துக்கு செல்லும் தரப்பினரே மக்களின் நலன்களை புறந்தள்ளி கட்சி நலன், தனிப்பட்ட நலன்களை முன்னிறுத்தி செயற்படுகையில் "பிராந்திய நாட்டில் காணப்படும் அரசியல் கட்சி மாத்திரம் இலங்கை தமிழர் நலனை முன்னிறுத்தி மாத்திரம் செயற்பட வேண்டும். இல்லையேல் முழுமையாக எதிர்ப்போம் "என்பது பிற்போக்கான சிந்தனை யாகும்.

பிராந்திய நாடுகளில் காணப்படும் அரசியல் கட்சிகளை ஈழத்தமிழர்களின் நலன்களுக்கு ஏற்ப பயன்படுத்தும் வகையில் கையாள வேண்டியது இலங்கை தமிழ் அரசியல் தரப்பின் இராஜதந்திர நகர்வுகளிலேயே தங்கியுள்ளது.

### பேரம்பேசல் இல்லாத ஈழத் தமிழ் அரசியல்

**முதலில் இலங்கைத் தமிழ் அரசியல் தரப்பானது, இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதே ஒற்றை** இலக்கு எனும் இதய சுத்தியு டனும் வைராக்கியத்துடனும் செயற்பட வேண்டும். ஆனால், எவ்வித இராஜதந்திரக் கையாள்கையுமின்றியே பிராந்திய அரசாகிய இந்தியாவின் நலன்களை ஈடேற்றுவதற்காக, ஈழத்தமிழர்களின் நலன்களை இந்திய அரசாங்கங்கள் கையாள, தமிழ் அரசியல் தலைமைகளும் துணை போயுள்ளன என்பதே வரலாறுதோறும் காணக்கூடியதாகவுள்ளது. ஈழத்தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வினை, இந்தியாவை தாண்டி பெற்றிட முடியாது. ஆதலால் இந்தியாவை பகைக்கவே கூடாது. இந்தியா தமது நலன்களை ஈடேற்ற முற்படும் போது ஈழத் தமிழ் அரசியல் தரப்பு ஈழத்தமிழர் நலன்களையும் ஈடேற்றும் வகையில் உரையாடல்களை ஆரம்பிக்க வேண்டும்.

இலங்கை அரசாங்கம் இந்தியாவை மிகத்தந்திரமாக கையாண்டு வருகிறது. ராஜபக்சக்களின் அரசாங்கம் 2019ஆம் ஆண்டு உருவாகுகையிலேயே அது சீன சார்புடையதாகவே கட்டமைக்கப்படும் என்பது இந்தியா மற்றும் மேற்குலகத்தின் அச்சமாகவே காணப்பட்டது. இந்த நிலையில் இலங்கையில் சீனாவின் உறவு முதிர்ச்சி அடையும் வரை இந்தியாவை தந்திரோபாயமாக கையாளவேண்டிய அவசியம் இலங்கை அரசாங்கத்துக்கு ஆரம்பத்தில் காணப்பட்டது.

அந்தக் காலப்பகுதியில் அதனை சாதுரியமாகக் கையாளவே, இந்தியாவுக்கென அமைச்சரவை அந்தஸ்துள்ள ஒரு வெளிநாட்டு தூதரை (மிலிந்த மொரகொட) இலங்கை அரசு நியமித்தது. இந்த இராஜதந்திர செயற்பாடுகளுக்கு பின்னால் இலங்கை அரசாங்கத்தின் மூளையாக இராஜதந்திரிகள், செயல்முறை பணித்துறை நிபுணர்கள், இராணுவ வல்லுநர்கள் என நிபுணத்துவம் வாய்ந்த குழுவாகிய 'வியத்கம' செயற்பட்டு வருகிறது. அரசு எனும் மீயுயர் இறைமையை தன்னகத்தே கொண்ட அரசாங்க தரப்பே தன்னைக் கட்டமைத்து செயற்பட அறிவியல் குழுக்களை பேணுகையில், உரிமைக்காக போராடும் ஒடுக்கப்பட்ட சமூகங்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை வழங்கும் தமிழ் அரசியல் தரப்பு சொந்த அறிவுமின்றி, அறிவூட்டல் அறிவை பெறக்கூடிய கட்டமைப்புமின்றி செயற்படுவது இராஜதந்திர பாதையில் தமிழினத்தை தொடர்ந்தும் தோற்கடிக்கக் கூடியதாகவே காணப்படும்.



### ஈழத் தமிழர்களின் நலன் இப்போதும் தமிழகத்தில்

தமிழகத்தில் புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க அரசாங்கம் தேர்தலுக்கு முன்னர் இலங்கைத் தமிழர்சார்ந்து தமது கட்சி கொண்டிருந்த எண்ணங்களை சிதைக்கும் வகையில் இலங்கை தமிழர்கள் நலன்சார்ந்து அதிரடியான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. இதற்கு தமிழக மக்கள் ஈழத்தமிழர் நலனை இன்றும் முன்னி லைப்படுத்துகிறார்கள் என்பதே நிதர்சனம். அதன் வெளிப்பாடே ஈழத்தமிழர்களின் நலன் பற்றிய உரையாடல்களை அதிகம் முக்கியத்துவப்ப டுத்தும் நாம் தமிழர் கட்சிக்கான வாக்கு வங்கியின் அதிகரிப்பும்.

இந்த அச்சமே தேர்தல் காலத்திலேயே தமிழகத்தின் பிரதான இரு கட்சிகளுமான தி.மு.க மற்றும் அ.தி.மு.க ஆகியன, தமது தேர்தல் விஞ்ஞாபனங்களில் ஈழத்தமிழர் நலன்சார் விடயங்களையும் உள்ளீர்த்திருந்தன. குறிப்பாக திராவிட முன்னேற்ற கழகம், திராவிட முன்னேற்ற கழகமும் ஈழத்தமிழர் நல்வாழ்வு எனும் தலைப்பின் கீழ் ஈழத்தமிழர்கள் நலனை உறுதிபடுத்தும் என்ற அடிப்படையில் 4 விடயங்கள் கூறப்பட்டுள்ளன. இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை, தமிழர்களுக்கான நிரந்தர தீர்வை வழங்கும் பொருட்டு பொது வாக்கெடுப்பு நடத்த கோரி மத்திய அரசை வலியுறுத்தல் போன்றன இந்த விடயங்களுள் பிரதானமானவை.

இந்த நிலையில் மு.க.ஸ்டாலின் தனது புதிய அமைச்சரவயில், இதுவரையில் வெளிநாடு வாழ் இந்தியர்கள் நலன் என்ற துறையை மாற்றி வெளிநாடு வாழ் தமிழர்கள் நலன் என புதிய துறையை உருவாக்கியுள்ளமை ஈழத்தமிழர் நலன் சார்ந்ததாகவும் அமையப்பெறுவதாக காணப்படுகிறது. எனினும் ஈழத்தமிழ் பரப்பில் இயங்கும் அரசியல் கட்சிகள் இதனை வாய்ப்பாக கொண்டு தமிழகத்துடனான உறவை ஆழப்படுத்த இதுவரை முயலாமை விசனத்துக்குரிய இராஜதந்திர நிலைமையாகும். ஈழத்தமிழ் அரசியல் தரப்பு பண்டைய கால அறிக்கை அரசியலுடனேயே முதிர்ச்சியற்று இருப்பது ஈழத்தமிழரின் சாபமாகவே காணப்படுகிறது. கொரோனா பெருந்தொற்று பயணங்களை தடைசெய்யினும் இணையவழியூடாக தமிழக முதல்வருடன் சந்திப்பை ஈழத்தமிழ் பரப்பில் இயங்கும் கட்சிகள் முன்னெடுத்திருக்கலாம்.

தமிழக அரசியல் கட்சிகளானது மத்திய ஆளுகைக்கு உட்பட்டதே ஆகும். எனினும் தமிழகத்தின் அரசியல் ஆதிக்கம் மத்திய அரசியலில் தவிர்க்க முடியாத நிலையிலேயே காணப்படுகிறது. ஆதலால் தமிழக அரசுடன் உறவை வலுப்படுத்தவது என்பது இந்திய மத்திய அரசினை ஈழத்தமிழர் நலன் சார்ந்து சிந்திக்க வைக்க ஏதுவான காரணியேயாகும். மு.க.ஸ்டாலின் தலைமையில் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்துடன், ஈழத்தமிழ்த்தேசிய பரப்பின் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி ஆகிய கட்சிகள் இணைந்து தமிழர்களுக்கான வாய்ப்பை பலப்படுத்துவார்களா? என்பது காலத்தின் கேள்வியாக உள்ளது. ■

> இலங்கையில் இடம்பெறும் தமிழர்கள் மீதான சிங்களப் பேரினவாதத்தின் இனஅழிப்புக்கு நீதியையும் தமிழர்களுக்கான சுயநிர்ணய உரிமையையும் பெற்றுக் கொடுக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் தமிழக அரசுக்கு வரலாற்று ரீதியாக உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொரோனா வருமென்று சொன்னாரா நாஸ்ட்ரோடாமஸ் ?



எஸ்.பிரஜீவன்ராம்

மத்திய கிழக்கில் தற்போது உச்சம் பெற்றுள்ள இஸ்ரேல் பலஸ்தீனம், ஈரான் அமெரிக்கா இடையிலான போர்ப் பதற்றங்களும், உலகையே முடக்கிப் போட்டிருக்கும் கொரோனாப் பெருந்தொற்றும் அதன் திரிபுகளும்கூட இற்றைக்கு சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்னர் கணிக்கப்பட்டவை என்றால் அதை உங்களால் நம்ப முடிகின்றதா?. ஆனால் நம்பித்தான் ஆக வேண்டும். ஏனெனில் இவற்றையெல்லாம் சொல்லிச் சென்றவர் பிரெஞ்சு ஜோதிடர் நாஸ்ட்ரோடாமஸ்.

## யார் நாஸ்ட்ரோடாமஸ்?

உலக மக்கள் அனைவருக்கும் எதிர்காலத்தை அறிந்துகொள்ள வேண்டும் என்ற அவா எப்பொழும் காணப்படுகின்றது. உலகின் எதிர்காலம் எப்படி இருக்கும் என அறிய விரும்பும் பலர் முணுமுணுக்கும் ஒரு பெயர் நாஸ்ட்ரோடாமஸ். பிரான்ஸ் நாட்டில் 15ஆம் நூற்றாண்டில் பிறந்த நாஸ்ட்ரோடாமஸ் பிரெஞ்சு ஜோதிடரும் மருத்துவருமாவார்.

தனது சொந்த மரணத்தையே கணித்தவர் என அவர் உலக மக்களால் வியந்து பார்க்கப்படுகின்றார்.

தீர்க்க தரிசனங்கள் என்ற நூலின் மூலம் நாஸ்ட்ரோடாமஸ் தனது கணிப்புகளை உலக மக்களுக்கு வெளிப்படுத்தியுள்ளார். இவரின் 70 வீதமான கணிப்புகள் உலகில் நடந்தேறியுள்ளன. இதன் காரணமாக உலக மக்கள் மத்தியில் இவரது கணிப்புகள் மீது மிகுந்த நம்பிக்கை காணப்படுகின்றது.

இவரது கணிப்புகளில் முக்கியமானவையாக, முதலாம், இரண்டாம் உலக மகாயுத்தம், அமெரிக்க இரட்டை கோபுர தாக்குதல் போன்றவற்றை குறிப்பிட முடியும்.

2020ஆம் ஆண்டுக்கான முக்கிய கணிப்பாக மேற்காசியாவில் இருந்து உருவாகும் மூன்றாம் உலகப்போர் கிட்டத்தட்ட 27 வருடங்கள் நீடிக்கும் எனக் கூறியிருந்தார். இந்தக்கணிப்பை நிதர்சனமாக்கும் வகையில் அமெரிக்க அரசால் ஈரான் இராணுவத் தளபதி சுலைமானி படுகொலை செய்யப்பட்டார்.

இதனால் உருவான அமெரிக்கா- ஈரான் மோதல் மூன்றாம் உலக மகாயுத்தம் ஆரம்பமாவதற்கான கொதிநிலையை மேற்காசியாவில் உருவாக்கி இருந்தது. இவ்வாறு பல்வேறுபட்ட நிதர்சனக் கணிப்புக்களால் இந்த வருடத்தில் என்னவெல்லாம் நடைபெறும் என்று நாஸ்ட்ரோடாமஸ் கணித்துள்ளார் என்பதைத் தேடத் தொடங்கியிருக்கின்றது உலகம்.

## இந்த வருடத்துக்கான கணிப்புக்கள் எவை?


2021ஆம் ஆண்டு உலகில் அரங்கேறும் காட்சிகளை அதாவது தன் தீர்க்க தரிசனத்தை, 'ஆப்டர் கிரேட் ட்ரபிள் போ ஹியூமனிட்டி' என ஆரம்பமாகும் பாடல் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார் நாஸ்ட்ரோடாமஸ். இதில் சில விடயங்களை தனது தீர்க்க தரிசனமாக அவர் முன்வைக்கின்றார்.

இந்த ஆண்டில் புதிய தொற்றுக்கள் உருவாகும் என்று நாஸ்ட்ரோடாமஸ் கணித்துள்ளார். கொரோனாப் பெருந்தொற்று 2019ஆம் ஆண்டு டிசெம்பரில் உருவாகினாலும், அதன் திரிபுகள் பலவும் இந்த ஆண்டில்தான் தோன்றிக் கொண்டிருக்கின்றன.

குறிப்பாக அதி அபாயம் மிக்கதான டெல்டா திரிபு இந்த வருடத்திலேயே தோன்றியுள்ளது. அத்துடன் இந்தியாவில் தீவிரமாகப் பரவும் கருப்புப் பூஞ்சை நோயும்கூட இந்தப் பேராபத்துக்குள்தான் உள்ளடங்குகின்றது.

அத்துடன், செயற்கை நுண்ணறிவுகொண்ட சாதனங்களின் ஆதிக்கம் இந்த ஆண்டு மிகையாக அதிகரிக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார் நாஸ்ட்ரோடாமஸ்.

சீனா, அமெரிக்கா இரண்டு நாடுகளும் போட்டிபோட்டுக் கொண்டு அதிநுட்பமான அறிவுள்ள ரோபோக்களை இந்த வருடம் செவ்வாயில் நிறுத்தியுள்ளன. அத்துடன், விண்வெளியில் இராணுவப் பிரிவை நிறுவ அமெரிக்காவும், செயற்கைச் சூரியனை உருவாக்க சீனாவும் முனைப்புக் காட்டுகின்றன. அவற்றையும் நாஸ்ட்ரோடாமஸின் இந்தக் கணிப்புக்கான உதாரணங்களாகக் கொள்ளலாம். பஞ்சம் இந்த வருடத்தில் மிகமிக அதிகமாக தன் கோரமுகத்லதைக் காட்டும் என்று அபாய ஒலியை எழுப்பியுள்ளார் நாஸ்ட்ரோடாமஸ். இதற்கு அத்திபாரம் கடந்த வருடம் போடப்பட்டாயிற்று. வெட்டுக்கிளிகளின் படையெடுப்பு கடந்த வருடத்தில் மிக மிக அதிகமான இருந்தது. பல்லாயிரம் தொன் உணவுகளை வெட்டுக்கிளிகள் கடந்த வருடம் தின்று தீர்த்துள்ளன. குறிப்பாக ஆபிரிக்கத் தேசத்



தில் இந்த அழிவுகள் மிகையாக உள்ளன. இதன் பிரதிபலிப்பை - விளைவுகளை அடுத்த வருடம் (இந்த வருடம்) நாம் அனுபவிப்போம் என்று ஐக்கிய நாடுகள் சபையும்கூட எச்சரித்துள்ளது. அத்துடன் கடந்த வருடத்தின் பெரும்



இந்த ஆண்டில் புதிய தொற்றுக்கள் உருவாகும் என்று நாஸ்ட்ரோடாமஸ் கணித்துள்ளார். கொரோனாப் பெருந்தொற்று 2019ஆம் ஆண்டு டிசெம்பரில் உருவாகினாலும், அதன் திரிபுகள் பலவும் இந்த ஆண்டில்தான் தோன்றிக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக அதி அபாயம் மிக்கதான டெல்டா திரிபு இந்த வருடத்திலேயே தோன்றியுள்ளது.

பாலான நாள்கள் உலகம் முடங்கிப்போயே இருந்தது. இதனால் விவசாயச் செய்கையிலும் பெரும் சரிவும் மந்தமும் ஏற்பட்டுள்ளது என்பதும் வெளிப்படை. இவையெல்லாம் சேர்ந்து நாஸ்ட்ரோடாமஸின் கணிப்பை மெய்யாக்கப்போகும் தூரம் வெகு தொலைவில் இல்லை.

## இன்னொரு உயிர் ஆயுதம்

அத்துடன் சூரியப் புயல்கள் உருவாகும் என்றும், ரஷ்ய விஞ்ஞானியால் ஓர் உயிரி ஆயுதம் உருவாக்கப்படும் என்பதையும் நாஸ்ட்ரோடாமஸ் தன் இந்த வருடத்துக்கான கணிப்புக்களாக முன்வைத்துள்ளார். இவற்றில் சூரியனில் அணுப்பிளவும், சூரியப் புயல்களும் இந்த வருடம் அதிகளவில் இருக்கும் என்று விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். ஆனால், ரஷ்ய விஞ்ஞானியால் ஓர் உயிரி ஆயுதம் தயாரிக்கப்படுமா? என்பது தொடர்பில் சந்தேகமும் அதே நேரம் அச்சமும் நிலவுகின்றது.

கொரோனாப் பெருந்தொற்றுக்கூட சீனாவின் வுகான் ஆய்வகத்தில் இருந்து உருவாக்கப்பட்ட உயிரி ஆயுதம்தான் என்பதே அமெரிக்காவினதும் இன்னும் சில நாடுகளினதும் குற்றச்சாட்டாக உள்ளது. இவ்வாறிருக்கையில் ரஷ்யாவில் இருந்தும் அப்படியொரு உயிரி ஆயுதம் உருவாக்கப்பட்டால் பூமி தாங்குமா என்பதுதான் தற்போதுள்ள கேள்வியாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II

# குழைக்காட்டு கதைகள்



O கோகுலராகவன்

அந்த நாள்களில் இருந்து 'விரதம்' இருப்பது என்பது மிக முக்கியமான சைவசமயிகளின் பிரதான வழிபாட்டு முறையாகும். நாவலர் பெருமான் உடலை வருத்தி இறைவனை அடையும் வழிபாட்டு முறை என்று விரதத்தை விழிப்பால் வரையறை செய்வார்.

சிவனை நோக்கி தவம் இருந்து அருள் பெற்றவர்கள் சித்தர்கள், ஞானிகள் என்று அறிகிறோம். இந்த விரதமும் ஒருவகை தவம்தான். வாழ்வில் சீர் சிறப்புக்களை பெற துன்பங்கள் போக்க, நோய்நொடி நீங்க சைவ சமயிகள் விரதம் பிடிப்பார்கள்.

நான் சிறுவனாக இருந்த காலத்தே இரண்டு விரதங்கள் பிரபல்யமானவை. முதலாவது 'அம்மன் கும்பம்' என்கின்ற சரஸ்வதி பூசை விரதம். மற்றது 'கந்தகஷ்டி' என்கின்ற சூரனை முருகப்பெருமான் வதம்செய்த ஆறு நாள்களை விரதமாக அனுஷ்டிப்பார்கள்.

விரத நாள்களில் வீடு.வாசல் மிக அழகாக இருக்கும் கூட்டித் துடைத்து தலைவாசலையோ பெரிய வீட்டையோ மாட்டுச் சாணியும் புற்று மண்ணும் கலந்து மெழுகி விரத வீடு அழகாக காட்சி அளிக்கும். காணியில் மெழுகிய பின் எழும் வாசம் வித்தியாசமானதாக மூக்குக்கு இதமாக இருக்கும். காணியில் மெழுகிய பின்னர் வீட்டுக்குள் எறும்பு. பூச்சி. பூரான் வருவது மிகக் குறைவாக இருக்கும். அதன் மேல் பனையோலைப் பாயை விரித்து படுத்தால் மிகக் குளிர்மையாக நித்திரை அள்ளிக்கொண்டு வரும். விரதங்கள் தமது உடல் நிலைக்கு ஏற்றதாக பிடிப்பார்கள். ஒரு நேரம்- பகல் மட்டும் உணவு சாப்பிடுவது. இந்த உணவு வகை சோறு கறிதான். கறி என்றால் ஏழெட்டு கறிகள் இருக்கும். கறிகளுக்கு வெங்காயம், மிளகாய், நற்சீரகம், கடுகு என்பவற்றை எண்ணிக்கையில் தாழித்து போடும் வாசம் மூக்கை துளைக்கும். சுடச் சுட கல்லையில் சோறு கறி போட்டுச் சாப்பிட்டால் விரதம் ஒவ்வொரு நாளும் பிடிக்கத் தோன்றும்.

இந்த 'கல்லை' என்பது தென்னை ஓலை இதழ்களை வெட்டி ஒன்றாக தென்னம் ஈர்க்கால் தைத்து ஒருவர் சாப்பிடும் அளவுக்கு இழைப்பதாகும். கல்லை விரதகாரர்க்கு மட்டும்தான். சிறுவர்களாக இருக்கும்போது

"எனக்கும் கல்லையில் சோறு தாங்கோ"

"நீ என்ன விரதமோ"

"இல்லை. எனக்கும் கல்லை"

அம்மாவின் தகப்பன் சிறிய கல்லை செய்து தருவார். ஆனால் சொதியை விட்டு சாப்பிட முன்னர் முழுவதும் கீழே ஓடிவிடும்.

சாப்பிட்டு முடிய இந்த கல்லையை வேலியில் ஒழித்து செருக வேண்டும். இதற்கு காரணம் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் காலத்தில் பேருக்கு மதம் மாறியவர்கள் வீட்டிலேயே இரகசியமாய் விரதம் பிடிப்பார்கள். அந்நியர் கண்டுவிடுவார்கள் என வேலிக்குள் ஒளித்து வைப்பதால் இந்த மரபு சில காலம் தொடர்ந்து வந்தது.

விரதத்தில் காய்ச்சப்படும் ஏழெட்டு கறிகளில் எமது அம்மாவின் தகப்பனுக்கு பயறு வறுத்துக் குற்றி பயற்றுக்கறி காய்ச்ச வேண்டும். தற்செயலாய் பயற்றுக் கறி காய்ச்சாவிட்டால் ஆனால் ஏழெட்டு வேறு கறிகள் காய்ச்சி இருந்தாலும். "இண்டைக்கு விரதத்துக்கு கறியள் தோதில்லையப்பா" என அம்மம்மாவிடம் முறையிட்டுக் கொள்வார். பயிற்றுக் கறி அவருடைய விருப்பத் தெரிவு. சரி அவர் விரதத்தை பற்றி சொன்ன கதை ஒன்றையும் பாடல் ஒன்றையும் பகிரலாம்.



கதை III

ஒரு கணவன், மனைவியும் வாழ்ந்து வந்தார்கள். சிறந்த சமய ஆச்சாரமாக வாழ்ந்தாலும் அவர்கள் இரண்டு பேருக்கும் விரதம் பிடிப்பதற்கு முடியாமல் இருந்தது. காரணம் இரண்டு பேரும் பசி கிடக்க மாட்டார்கள்.

"உனக்கு விரதம் பிடிக்க கள்ளம்"

"உங்களுக்குத்தான் கள்ளம்"

இரண்டு பேரும் சண்டை பிடிப்பார்கள். சரியென்று இரண்டு பேரும் ஒரு பௌர்ணமி விரதம் பிடிப்போம் என்று முடிவெடுத்தார்கள். பௌர்ணமி விரதம் மறுநாள் விடியவே பாறனை பண்ண வேண்டும். பகல் முழுவதும் உபவாசம் இருக்க வேண்டும். வெறு தண்ணீர்தான் குடிக்க வேண்டும். இரவு கணவனும் மனைவியும் படுத்துவிட்டார்கள். மனைவிக்கோ பசி வயிற்றை பிடுங்கத் தொடங்கிவிட்டது. மெதுவாக கணவனை திரும்பிப் பார்த்தாள். நித்திரையாகிவிட்டார்.

"இஞ்சை"

ஒரு சத்தமும் இல்லை. மெதுவாக குசினிக்குள் போனார். ஏதாவது சாப்பிட வேண்டும். எதுவுமில்லை. ஒரு பேணி பச்சையரிசி எடுத்து சட்டியில் தண்ணீர் விட்டு கொதிக்க வைத்தாள். பச்சை அரிசி விரைவில் வேகிவிடும். கறி ஒன்றும் இல்லை. உறியில் கருவாடு தொங்கிக்கொண்டு இருந்தது. அதிலே இரண்டு கருவாடு எடுத்து எரியும் அடுப்பில் சுட்டுக் கொண்டாள். கோப்பை எடுத்தால் சத்தம் கேட்கும். குசினிக்கு மேலே சுரைக்கொடி படர்ந்திருந்தது. எட்டி ஒரு இலையை பறித்துக்கொண்டாள். சுரைக் கொடி இலை ஒருவர் சாப்பிட போதுமான பரப்பு கொண்டது.

உட்பக்க இலையில் சாப்பிட்டால் இலையை எறியும் போது முன்பக்கமாக விழும். புறப்பக்க இலையில் சாப்பிட்டால் இலை எறிந்தாலும் தெரியாது.

அரிசி அவிந்து விட்டது. கிறுகிறுவென்று புற இலையில் பச்சை அரிசி சோற்றைப் போட்டு சுட்ட கருவாட்டோடு சாப்பிட்டு முடித்தார். இப்பதான் உயிர் வந்தது. படுத்திருந்த கணவனுக்கு கடுவாடு சுட்ட வாசம் மூக்கில் படவே எழுந்து பார்த்தார். மனைவி வெளுத்துக் கட்டுவது அடுப்பு வெளிச்சத்துக்கு தெரிந்தது. தெரியாத மாதிரி படுத்துவிட்டார். சாப்பிட்ட மனைவி மெதுவாக வந்து கணவனுக்கு அருகில் படுத்துவிட்டாள். தூக்கம் வராத மாதிரி புரண்டு புரண்டு படுத்துக் கொண்டார்.

"இஞ்சையப்பா சித்திரை வராதாம் கதை ஒன்று சொல்லுங்கோ"

கணவன் மனைவி மீது செம கடுப்பில் இருந்தான். இவளுக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும். அதைப் பாட்டாகவே பாடினான்.

கதை கதையாம் காரணமாம்
சட்டியில் புக்கையாம்
சுட்ட கருவாடாம்
உள் இலையில் திண்டால்
கண்டிடும் எண்டு
புற இலையில் திண்ட
கள்ளிப் பொண்டாட்டி தள்ளிப் படடி.

திடுக்கிட்டுப் போன மனைவி வெக்கம் தாளாமல் காலையில் தாய் வீட்டுக்கு ஓடிப் போய் ஒரு மாதம் கழியத்தான் வீட்டுக்க வந்ததாக கதை முடிகின்றது.





O மயூ

# என்னம்மா சின்னம்மா?

தமிழகத்தில் சற்று ஓய்ந்திருந்த "சின்னம்மா" அலை மீண்டும் ஆரம்பித்திருக்கின்றது. சொத்துச் சேர்ப்பு வழக்கில் தண்டனை பெற்று. தண்டனைக் காலம் முடிந்து வெளியே வந்த சின்னம்மா சசிகலாவுக்கு வெளியே சூழ்நிலை அவ்வளவு சாதகமாக இருக்கவில்லை. சின்னம்மா வெளியே வந்தவுடன் தமிழக அரசியலில் திடீர் திருப்பங்கள் ஏற்படும் என்று பெரும் எதிர்பார்ப்பு இருந்தபோது. அரசியலில் ஈடுபடப் போவதில்லை என்று பம்மிக் கொண்டார் சின்னம்மா சசிகலா.

சசிகலா சிறைக்குச் சென்றபின்னர் எடப்பாடி பழனிச்சாமியும். ஓ.பன்னீர்ச்செல்வமும் தங்கள் இயலுமைக்கு ஏற்ப அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தைப் பங்குபோட்டுக் கொண்டனர். அதில் எடப்பாடி கட்சியில் தன்னைப் பலமாக்கிக்கொண்டார் என்றே கூறலாம். சசிகலா சிறையில் இருந்ததால், அவரது ஆதரவாளர்கள் எதுவும் செய்ய முடியவில்லை. சசிகலாவின் தரப்பான டி.டி.தினகரன் கட்சிக்குள் எதுவும் பெரிதாக ஆதிக்கம் செலுத்த முடியாத நிலையில், சசிகலாவின் ஆதரவாளர்களும் எடப்பாடியுடனும். பன்னீர்செல்வத்துடனும் ஒட்டிக்கொண்டனர்.

சிறையில் இருந்து வந்ததும் நிலைமையை விளங்கிக் கொண்ட சசிகலா மூக்குடைபடவிரும்பவில்லை. மெல்ல பங்களாவுக்குள் பதுங்கிக் கொண்ட அவர் அரசியலில் இப்போதைக்கு ஈடுபடப்போவதில்லை என்று அறிவித்தார். ஆனால் தக்க சமயத்தை எதிர்பார்த்தே அப்போதைக்கு சசிகலா பதுங்கிக்கொண்டார் என்பதையே காட்டுகின்றன அவரின் இப்போதைய நடவடிக்கைகள்.

கடந்த சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. மண்கௌவியது. ஆனாலும் குறிப்பிடத்தக்களவு ஆசனங்களை கைப்பற்றி பலமான எதிர்க்கட்சியாக அ.தி.மு.க சட்டசபையில் அமர்ந்தது. இந்தத் தேர்தலில் அ.தி.மு.க. படு தோல்வி அடையும் பட்சத்தில் கண்டிப்பாக அ.தி.மு.க. மூத்த நிர்வாகிகள் தன்னைத் தேடி வருவார்கள் என்றும் சசிகலா கணக்குபோட்டு காத்திருந்தார். ஆனால் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு ஒரு சாதாரண கிளை கழகச் செயலாளர் கூட சசிகலா வீட்டு வாசலை மிதிக்கவில்லை. அதனால் தானே களத்தில் இறங்கிய சசிகலா, அ.தி.மு.க. நிர்வாகிகளுக்கு தொலைபேசி மூலம் அழைப்பெடுக்க ஆரம்பித்திருக்கிறார்.

கட்சியின் அடிமட்டத் தொண்டர்களுடன் அவர் தொலைபேசியில் பேசும் ஒலிப்பதிவுகள் வெளியாகியுள்ளன. இந்த உரையாடல்கள் டி.டி.தினகரனின் ஒத்தாசையுடன் நடக்கின்றன என்று தகவல்கள் கசிந்துள்ளன. தினமும் ஒன்று இரண்டு பேர் என்பது மாறி இப்போது ஒரே நாளில் ஐந்து பேர் வரை சசிகலா செல்போனில் பேச ஆரம்பித்தார். விரைவில் தான் அரசியல் களத்துக்கு வர உள்ளதாகவே அவரது பேச்சு உரையாடலாக இருந்தது. இந்த உரையாடல்களை ஊடகங்களுக்கும் கசியவிட்டு, எடப்பாடி மற்றும் பன்னீர்செல்வம் ஆகியோர்மீது ஒரு உளவியல் தாக்குதலை சசிகலா தொடங்கியிருக்கிறார். இதற்கு அ.தி.மு.கவினர் மத்தியில் வரவேற்பும் கிடைத்திருக்கின்றது. கட்சியில் இருந்து இப்போது ஓரம் கட்டப்பட்டுள்ளவர்களுக்கு தூண்டிலும் போடுகிறாராம் சின்னம்மா. மறுபடியும் அரசியல் களத்துக்குள் நுழைய காய் நகர்த்தும் சசிகலாவின் திட்டம் எந்தளவுக்கு வெற்றிபெறும் என்று பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் நிலவும் பயணக்கட்டுப்பாடு காரணமாக வாசகர்கள் சஞ்சீவியில் இடம்பெறும் போட்டிகளில் கலந்துகொள்வதில் உள்ள இடர்பாடுகளைக் கருத்தில் கொண்டு போட்டிகள் அனைத்தும் தற்போது இடம்பெறுவதில்லை.

(ஆ-ர்)


## பிஞ்சு தூரிகைகள்





எம்.விதுசா.
தரம் 09
சாவ.இந்துக் கல்லூரி.

# நிமலராஜன்....



சமாதான தூதுவராக பணியாற்றியது யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு சில ஊடகவியலாளர்களுக்கு மட்டுமே தெரியும். 1999 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் விடுதலைப் புலி கள் யாழ்ப்பாணம் கண்டி வீதியை ஊடறுத்து இத்தாவில் பகுதியில் த்தாக்குதல் நடத்தினர். இதனால் முகமாலை பிரதேசத்தில் வசித்து வந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடைநடுவில் சிக்கிக்கொண்டன.

இந்த குடும்பங்களை வெளியேற அனுமதிக்குமாறு பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பல்கலைக்கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தை இராணுவத்தினர் கணக்கெடுக்கவில்லை. இந்த விடயத்தை கேள்விப்பட்டதும் நிமலராஜனின் 'எம்.டி 90 ' ரக மோட்டார் சைக்கிள் கொடிகாமம் நோக்கிப் பறந்தது.

அந்தப் பிரதேசத்துக்குப் பொறுப்பான இராணுவத்தளபதியுடன் தொடர்புகொண்டார் நிமால். புலிகள் தாக்குதல் நடத்தாமல் விட்டால் நாங்களும் தாக்குதல் நடத்தமாட்டோம் என இராணுவ அதிகாரி உத்தரவாதமளித்தார். புலிகள் தரப்பும் பச்சைக்கொடி காட்ட, இராணுவ அதிகாரி தான் ஒரு மணித்தியாலம் தருகிறேன் எனவும் அதற்கிடையில் அனைவரும் வெளியேறிவிட வேண்டுமெனவும் உத்தரவிட்டார். இதன்மூலம் செய்வதறியாது திகைத்துக் கொண்டிருந்த மக்கள் அனைவரும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.

ஒக்ரோபர் 19, 2000 அன்று மண்டைதீவு கடலுக்குள் இலங்கை விமானப்படையின் ஹெலிகொப்ரர் ஒன்று விழுந்தது. நிமால் பி.பி.சியின் சிங்கள மற்றும் தமிழ் சேவைகளுக்கு செய்தியை வழங்கிவிட்டு, சிங்கள சேவையில் ஒலிபரப்பப்பட்ட செய்தியை கேட்டுக்கொண்டிருந்தார், ஆனால் தமிழில் ஒலிபரப்பப்பட்ட செய்தியை அன்றைக்கு அவரால் கேட்க முடியாமலே போய்விட்டது. ஜன்னல் வழியாக வந்த துப்பாக்கி குண்டு பிடரியை பதம்பார்த்தது. கிரனைட் ஒன்றும் அறைக்குள் வீசப்பட்டது. அவரது மனைவி ஈ.பி.ஆர்.எல்.எஃப் வரதராஜப்பெருமாள் அணியினருக்கு (தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி) தொலைபேசி மூலம் விடயத்தைக் கூறினார். ஈ.பி.ஆர்.எல்.எஃப். வரதராஜப்பெருமாள் அணி அலுவலகத்திலிருந்து காலஞ்சென்ற சுபத்திரன் தனது தோழர்களான கங்கா தலைமையிலான சிலரை அங்கே அனுப்பினார்; இரவுநேர ஊரடங்கு அமுலில் இருந்தபடியால் வாகனங்கள் எதுவும் கிடைக்கவில்லை. ஒரு லாண்ட்மாஸ்டரில் குற்றுயிரோடிருந்த நிமாலை எடுத்துச சென்றனர்.

ஆனால் லாண்ட்மாஸ்டர் அடைக்கலமாதா தேவாலயத்தை அடைந்த போது நிமாலின் ஆவி பிரிந்தது. தன்னை மரணம் துரத்துகிறது என்று தெரிந்து கொண்டும், தனது உயிரைப்பற்றி சிந்திக்காது ஊடகப்பணி செய்தவர் நிமலராஜன்' இப்போது யாழ்ப்பாணத்தில் சிலர் 'நம்புங்கள் நானும் ஒரு ஊடகவியலாளன் தான்' (Trust me I am journalist) என்று ரீஷேர்ட் அணிந்து கொண்டு மோட்டார்சைக்கிளில் முறுக்கிக் கொண்டு திரிகின்றனர்.

நிமலராஜனின் காலத்திலோ நிமலராஜன் கொல்லப்பட்ட பின்னரோ ஊடகங்களில் விநியோகம் போன்ற ஏனைய பகுதிகளில் கடமையாற்றுவதற்குக்கூட எவருமே முன்வரவில்லை. அதிலும் 'உதயன்' என்ற பெயரைக் கேட்டாலே ரிவேர்சில் போனவர்கள் தான் அதிகம். (அதன் பின்னர் தப்பித்தவறி வந்தவர்களும் ஒரு சில மாதங்கள் கடமையாற்றி விட்டு வெளிநாடு செல்வதையே நோக்காகக் கொண்டனர்) பி.பி.சி கொழும்பு நிருபர் பிரான்ஸ் ஹாரிஸன் யாழ்ப்பாணம் வந்தபோது வாடகைக்கார் ஒன்றை அமர்த்துவதே சிரமமாக இருந்தது. ஒரு நாளைக்கு 5 ஆயிரம் ரூபா கட்டணத்துக்கு ஒருவர் கார் விட சம்மதித்தார். ஆனால் பி.பி.சி என்ற வாசகத்தை தனது காரில் காட்சிப்படுத்தக்கூடாது என்ற நிபந்தனையுடன்.

கடந்த பதினைந்து ஆண்டுகளாக யாழ்ப்பாண மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நிமலராஜன் கொலை வழக்கு விசாரணைகள் நிலுவையில் இருந்தன. இந்த மாதம் 4 ஆம் திகதி சட்டமா அதிபரின் அறிவுறுத்தலின் பிரகாரம் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

# கொரோனாச்...




இதில் பொறுப்பில்லையா?

நாடாளுமன்றத்தில் உரையாற்றுவது நல்லது தான். நிவாரணம் வழங்குவதும் தேவைதான். ஆனால் அதற்குமப்பால் தமிழ்ப்பொது உளவியலைக் கட்டியெழுப்ப வேண்டும். அதை சுகாதாரத்துறையும் தமிழ் அரசியல்வாதிகளும் அரசியல் செயற்பாட்டாளர்களும் சிவில் சமூகங்களும் மத நிறுவனங்களும் ஊடகங்களும் ஒன்றிணைந்து செய்ய வேண்டும். அப்படி ஒரு ஒன்றிணைவை சமூகத்தில் காணமுடியவில்லை.

ஒரு சமூக முடக்க காலத்தில் மக்களுக்கு எப்படி விழிப்பூட்டுவது என்று கேட்கலாம். இங்கேதான் ஒரு முக்கியமான விடயத்தை சுட்டிக்காட்ட வேண்டும். கட்சிகளுக்கு உள்ளூர் வலையமைப்புகள் பலமாக இருந்தால் அதன் மூலம் அந்த விழிப்புணர்வைச் செய்யலாம். உள்ளூர்ச் சந்தைகள் இயங்கலாம் என்றால், உள்ளூர்க் கடைகளைத் திறக்கலாம் என்றால் உள்ளூரில் வாழ்க்கை வழமைபோல இயங்கலாம் என்றால், ஏன் உள்ளூர் வலையமைப்புக்கள் ஊடாக மக்களுக்கு விழிப்பூட்டக்கூடாது?

ஆனால் இங்குள்ள பாரதூரமான வெற்றிடம் என்னவென்றால் கட்சிகளிடம் அப்படிப்பட்ட உள்ளூர் வலையமைப்புகள் பலமாக இல்லை என்பதோடு கட்சித் தலைவர்களிடமும் இது தொடர்பில் தெளிவான தரிசனம் இல்லை என்பதுதான். அவர்கள் தமிழ் அரசியல் என்று விளங்கி வைத்திருப்பது நாடாளுமன்றத்தில் முழங்குவது அல்லது அனர்த்த காலத்தில் நிவாரணம் வழங்குவது. இவற்றுக்கும் அப்பால் ஒரு சமூகத்தின் பொது உளவியலைக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பை குறிப்பாக சமூகத்துக்கு வழிகாட்ட வேண்டிய பொறுப்பை எத்தனை தலைவர்கள் உணர்ந்து வைத்திருக்கிறார்கள்?

தமிழ்ச் சமூகத்தை உள்ளூர் உற்பத்திகளை நோக்கியும் வீட்டுத்தோட்டங்களை நோக்கியும் சுத்தமான காற்று சுத்தமான மரக்கறி உடற்பயிற்சி போன்றவற்றை நோக்கியும் தொடர்ச்சியறாத கற்றல் கற்பித்தலை நோக்கியும் ஊக்குவித்து வழிநடத்தி ஒருங்கிணைக்க வேண்டிய ஒரு பொறுப்பு தமிழ் அரசியல்வாதிகளுக்கு இல்லையா? மிகக் குறிப்பாக நோய்த்தொற்றுச் சங்கிலியை உடைக்கும் விதத்தில் சமூக நெருக்கத்தை சமூகத் திரட்சியை உள்ளூர்ச் சந்தைகளை எப்படித் தற்காப்புணர்வோடு திட்டமிடுவது? என்பதை குறித்து மக்களுக்கு விழிப்பூட்ட வேண்டியது உள்ளூர் தலைவர்கள்தான்; உள்ளூர் தொண்டர்கள்தான்.

மேலும்தடுப்பூசி தொடர்பாக தமிழ் மக்கள் மத்தியில் ஒருவித தயக்கம் உண்டு. அந்த தயக்கத்தை நீக்கி தடுப்பூசியை ஏற்றுக்கொள்ளும் ஒரு கூட்டு உளவியலை உருவாக்க வேண்டிய பொறுப்பு தமிழ் அரசியல்வாதிகளுக்கு உண்டு.

இது விடயத்தில் சில கிழமைகளுக்கு முன் விக்னேஸ்வரன் ஓர் அறிக்கை விட்டிருந்தார். அதில் அவர் வடக்கு கிழக்குக்கு தடுப்பூசிகளை வழங்குமாறு இந்தியாவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அது ஒரு வேண்டுகோள் மட்டுமே. அதற்குமப்பால் தடுப்பூசி ஒரு பொருத்தமான தற்காப்பு நடைமுறை என்பதனை மக்களுக்கு தெரியப்படுத்தி மக்களுக்கு விழிப்பூட்ட வேண்டிய பொறுப்பு அரசியல்வாதிகளுக்கு இல்லையா? நாடாளுமன்ற உரைகள், நிவாரணம் போன்றவற்றுக்கும் அப்பால் ஓர் அனர்த்தகாலத்தில் தமது மக்களின் கூட்டு உளவியலைக் கட்டியெழுப்ப உழைக்காத அரசியல்வாதிகள் எப்படித் தேசத்தைக் கட்டியெழுப்புவார்கள் என்று நம்புவது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அமெரிக்கா என்றால் கொம்பா?



ஆர்.பிரகாஷ்

கி இந்த வார்த்தையை எம்மில் பலர் ஒரு தடவையேனும் உச்சரிக்காமலில்லை. தன்னைப் பகைக்கும் உலக நாடுகளை தன் பொருளாதாரத் தடையால் எவ்வாறு அமெரிக்கா நிலைகுலைய வைக்கின்றது? இன்னொரு நாட்டின் கையிருப்பில் இருக்க வேண்டிய அணுவாயுதங்களையும் யுரேனியத்தையும் அமெரிக்கா எவ்வாறு தீர்மானிக்கின்றது? மத்திய கிழக்கிடம் இருந்து டொலர்களில் கச்சாவை எந்த தைரியத்தில் அமெரிக்கா நிர்ணயிக்கின்றது? எல்லாவற்றுக்கும் மேலாக பெருமளவான நாடுகளின் உள்வீட்டுப் பிரச்சினைகளில் எந்த அடிப்படையில் அமெரிக்கா தலையிடுகின்றது?. அமெரிக்கா என்றால் என்ன கொம்பா? இது எம்மில் பலரிடம் உள்ள கேள்விகள். ஆம்! அமெரிக்கா என்றால் கொம்புதான்.

### கொரோனாவும் அமெரிக்காவும்

கொரோனாப் பெருந்தொற்று ஒட்டுமொத்த உலகையும் சிதைத்திருக்கின்றது. கொரோனாவால் ஏற்பட்டுள்ள உயிரிழப்பு, தொற்றாளர்கள் எண்ணிக்கை, பொருளாதாரப் பாதிப்பு என்று அனைத்திலும் அமெரிக்கா முதலிடத்தில் இருக்கின்றது. கொரோனாவால் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ள அமெரிக்காதான் தற்போது கொரோனாவுக்கு எதிரான போரையும் கையிலெடுத்திருக்கின்றது என்றால் அதைப் பாராட்டித்தானே ஆகவேண்டும்.

உலகில் 80 வீதமான தடுப்பூசிகள் ஒருசில பணக்கார நாடுகளுக்குப் பகிரப்பட்டிருக்கின்றன. ஏழை நாடுகள் தடுப்பூசிகளைப் பெறுவதில் சொல்லொணாத் துன்பங்களை எதிர்கொள்கின்றன என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்திருந்தது. அத்துடன் பணக்கார நாடுகள் ஏழை நாடுகளுக்குத் தடுப்பூசி வழங்க முன்வர வேண்டும் என்று அழைப்பும் விடுத்திருந்தது. இதையடுத்து உலகில் வளர்ச்சியடைந்த நாடுகளின் கூட்டணி யான ஜி7 சுமார் 100 கோடி தடுப்பூசிகளை வறிய நாடுகளுக்குப் பகிர்ந்தளிக்க முன்வந்துள்ள]. இந்த 100 கோடி தடுப்பூசிகளில் அமெரிக்காவின் பங்களிப்பு மட்டும் 50 கோடி. எஞ்சிய நாடுகளான கனடா, பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, ஜப்பான் ஆகிய 6 நாடுகளும் இணைந்து வழங்கும் தடுப்பூசிகளின் எண்ணிக்கை 50 கோடி. இத்தனைக்கும் அமெரிக்காதான் கொரோனாப் பெருந்தொற்றால் அனைத்து வகையிலும் பாதிக்கப்பட்ட பட்டியலில் முதலிடத்தில் உள்ளது என்பதையும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

### செயற்கைச் சூரியனும் வெள்ளிக்கு செய்மதியும்

அத்துடன் கடந்த வாரம் இன்னொரு அறிவிப்பின் மூலம் உலகையை வியக்க வைத்தது அமெரிக்கா. அதுதான் வெள்ளிக்கு செய்மதிகளை அனுப்பும் திட்டம். பூமியில் செயற்கைச் சூரியனை உருவாக்கும் முயற்சியில் சீனா ஈடுபட்டு வருவது தெரிந்ததே. இதனால் சீனாவுக்குப் போட்டியாக அமெரிக்கா கணிசமான எதிர்வினையாற்றும் என்று கருதப்பட்ட நிலையில் இந்த அறிவிப்பை அமெரிக்கா விடுத்துள்ளது. அதுவும் அடுத்த மூன்று ஆண்டுக்குள் இந்தத் திட்டம் கணிசமான அளவு முழுமைப்படுத்தப்பட வுள்ளது. சூரியனுக்கு அடுத்தபடியாக அதிக வெப்பம் உள்ள கிரகமான வெள்ளிக்கு செய்மதியை அனுப்புவது என்பது ஒன்றும் நிலவுக்கு அனுப்புவது போன்று இலேசான காரியம் அல்ல. எல்லா நாடுகளாலும் செய்யக்கூடியதும் அல்ல. வெள்ளியின் மேற்பரப்பு வெப்பநிலை மிகை அதிகமானது. இத்தகையதொரு பின்னணியில் 24,000 கோடி ரூபா செலவில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளது அமெரிக்கா.

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த நாட்டை முடக்கினால், பொருளாதாரம் நிலைகுலைந்து நாட்டைக் கொண்டுநடத்த முடியாமல் போய்விடும் என்பதற்காக பயணத்தடை என்ற பெயரில் சப்பைக்கட்டு கட்டிக்கொண்டிருக்கும் தேசங்களுக்கு மத்தியில் கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்டு, அதற்கெதிரான போராட்டத்தை முன்னெடுத்து தானும் மீண்டு உலகையும் அதிலிருந்து மீட்டுவந்து வெள்ளிக்கு விண்கலம் அனுப்புவதெல்லாம் வேறு 'லெவல்'தான். அமெரிக்கா என்றால் கொம்புதான் போலிருக்கின்றது.



# யூரோ ஆரம்பம் சம்பியன் யார்?



ஆர்.லயனல்

பெரும் எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் ஆரம்பமாகியுள்ளது யூரோ கிண்ண கால்பந்தாட்டம். உலகக்கிண்ணத் தொடருக்கு அடுத்தபடியாக அதிகளவான ரசிகர்களைக் கொண்ட தொடர்தான் இந்த யூரோ கிண்ணம். கடந்த வருடம் நடைபெற வேண்டிய இந்தத் தொடர் கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாகப் பிற்போடப்பட்டு இந்த வருடம் நடைபெறுகின்றது. 6 பிரிவுகளின் கீழ் 24 அணிகள் மோதுகின்றன. தொடரில் பெரும் எதிர்பார்ப்புக்கு உள்ளாகியுள்ள அணிகள் எவை? அவற்றின் பலம் என்ன? என்பது தொடர்பில் பார்க்கலாம்.

### போர்த்துக்கல்

2016ஆம் ஆண்டு இறுதியாக யூரோ கிண்ணம் நடைபெற்றது. அதில் சம்பியனானது போர்த்துக்கல். கால்பந்தாட்ட வரலாற்றில் போர்த்துக்கலின் ஆகப்பெரும் அடைவாக இந்தத் தொடர் பதிவானது. இதனால் வரலாற்றில் முதல் முறையாக நடப்புச் சம்பியன் என்ற அந்தஸ்துடன் போர்த்துக்கல் களமிறங்குகின்றது. அணித்தலைவர் ரொனால்டோ அந்த அணியின் பெரும் பலமாக உள்ளார். அவரைவிட பெபெ, அந்ரே சில்வா, ஜோட்டா போன்ற அதிரடி வீரர்களும் போர்த்துக்கலுக்குப் பலம் சேர்க்கின்றனர்.

### பிரான்ஸ்

யூரோக் கிண்ணத்தைக் கைப்பற்றும் அணி எது என்று அண்மையில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் பிரான்ஸ்தான் முதலிடத்தில் உள்ளது. ரஷ்யாவில் 2018ஆம் ஆண்டு நடைபெற்ற கால்பந்தாட்ட உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றி உலகச் சம்பியனாகவும் அசைக்க முடியாத அணியாகவும் பிரான்ஸ் வலம் வருகின்றது. கிரீஸ்மன், மப்பே, போக்பா, பென்சிமா, வார்னே, டெம்பிலி என்று நீள்கின்றது பிரான்ஸின் படைபலம்.

அத்துடன் யூரோ தொடரில் பெரும் எதிர்பார்ப்புக்கு உள்ளாகியுள்ள ஆட்டங்களின் பட்டியலில் முதலாவது இடத்தில் போர்த்துக்கல் மற்றும் பிரான்ஸ் அணிகளுக்கு இடையிலான ஆட்டம்தான் உள்ளது. காரணம் போர்த்துக்கல் யூரோ சம்பியன், பிரான்ஸ் உலகச் சம்பியன் என்பது மட்டுமல்லாமல் பிரான்ஸை வீழ்த்தியே போர்த்துக்கல் யூரோ கிண்ணத்தைக் கைப்பற்றியிருந்தது. இவையெல்லாம் சேர்ந்துதான் போர்த்துக்கல் பிரான்ஸ் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளன.

### ஜேர்மனி

யூரோ கிண்ணத்தைக் கைப்பற்றும் அணிகளின் பட்டியலில் ஜேர்மனி இருந்தாலும், அந்த அணி வழக்கமான பலத்துடன் இருக்கின்றதா என்று கேட்டால் இல்லை என்பதுதான் பதில். முன்னால் உலகச் சம்பியனான ஜேர்மனி வழக்கமான பலத்தையும் துடிப்பையும் கொஞ்சம் இழந்துதான் இந்தத் தொடரில் களம்காண்கின்றது என்பது பொதுவான அபிப்பிராயமாக உள்ளது.

### பெல்ஜியம்

பொதுவாகவே பெல்ஜியம் அணிக்கு கால்பந்தாட்ட உலகில் உள்ள பெயர் 'சைலண்ட் கில்லர்' என்பதுதான். இருப்பதும் தெரியாது, நடப்பதும் தெரியாது ஆனால் தன்னால் எவ்வளவு முடியுமோ அதை பெல்ஜியம் சாதித்துவிடும். பெல்ஜியத்தின் பெயர் கால்பந்தாட்ட உலகில் அண்மைக்காலமாக எங்கேனும் பேசுபொருள் ஆகியுள்ளதா?. நிச்சயம் இல்லை. ஆனால் சர்வதேசகால்பந்தாட்ட சம்மேளனத்தின் புள்ளிப்பட்டியலில் பெல்ஜியம்தான் முதலிடம். கடந்த இரண்டு ஆண்டுகளாக மிக அதிகமான வெற்றிகளை பெல்ஜியம் குவித்துள்ளது.

நட்சத்திர வீரரான கெவின் டி பிரைன் உள்ளிட்ட பல அதிரடி வீரர்கள் பெல்ஜியத்தில் உள்ளனர். இத்தத் தாக்குதல் பாணியிலான ஆட்டம்தான் பெல்ஜியத்தின் பலம்.

### குரோசியா

விளையாட்டு உலகில் ஒவ்வொரு துறையிலும், எந்தவொரு தரப்பில் இருந்தும் வெறுப்பாளர்கள் எதிர்ப்புக்கள் இல்லாத ஒவ்வொரு அணி இருக்கும். கிரிக்கெட்டில் நியூசிலாந்து போன்று கால்பந்தாட்ட உலகில் குறிப்பாக ஐரோப்பிய கால்பந்தாட்டத்தில் அத்தயை ஒரு அணி உண்டெனில் அது குரோசியாதான். கடந்த உலகக்கிண்ணக் கால்பந்தாட்டத்தில் இறுதியாட்டம் வரையில் குரோசியா முன்னேறியிருந்தது. பிரான்ஸிடம் கிண்ணத்தை இழந்திருந்தாலும் குரோசியாவின் பெறுபேறு தொடர்பில் திருப்தித் தன்மை தெரிவிக்கப்பட்டிருந்தது. அந்த அணியின் தலைவர் லூக்கா மோட்ரிச் இளம் வீரர்களை அற்புதமாக வழிநடத்தியிருந்தார். உலகக்கிண்ணத் தொடரில் குரோசியா வெளிப்படுத்திய ஆட்டம் யூரோவில் அதன்மீது எதிர்பார்ப்பு இருக்கக் காரணமாகியுள்ளது.

இதைவிட ஸ்பெய்ன், இங்கிலாந்து, இத்தாலி அணிகள் மீதும் எதிர்பார்ப்புக்கள் உள்ளன. பார்க்கலாம் போர்த்துக்கல் கிண்ணத்தைத் தக்கவைக்கப் போகின்றதா அல்லது கிண்ணம் கைமாறப் போகின்றதா என்பதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org